விலை ரூபா: 14.00 (கொழும்பு விலை ரூபா: 17.00) பக்கங்கள்:-(16+10) **Registered as a News paper in Sri Lanka**

மங்கையர் மனம் கொள்ளை
கொள்ளும் தங்க
நகைகளுக்கு

சாரங்கா
நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 2480


# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 30 திங்கட்கிழமை (15.07.2002) தொலைபேசி 3378 ஒலி 208


## காஷ்மீர் பிரச்சினைக்கு நடுவராக

# வெளியுறவு அமைச்சர் டிரோன் இன்று பாகிஸ்தான் பயணம்!

## பாக். அதிபர் முஷாரப்பை சந்திப்பார்

(நமது நிருபர்)

**இந்தியா-பாகிஸ்தான் நாடுகளிடையே காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக சமரசப் பேச்சுவார்த்தை ஏற்படுத்தும் சமாதானத் தூதுவராக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷராப்பைச் சந்திப்பதற்காக இன்று பாகிஸ்தான் பயணமாகிறார்.**

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே அண்மைக்காலமாக நிலவிவரும் யுத்த முறுகல் நிலை தொடர்பாக இந்தியாவின் சமாதானத் தூதுவராக பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷராப்பை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ இஸ்லாமாபாத்தில் சந்தித்துப் பேசவுள்ளார்.

கடந்த வாரம் இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வன்சிங்ஹா இலங்கை வெளிவிவகார அமைச்சருடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடனும்பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது

(10ம் பக்கம் பார்க்க)

## விருப்பத்துக்கு மாறாக

# கண்காணிப்புக் குழு உறுப்பினர் இருவரை விடுதலைப்புலிகள் படகில் கூட்டிச் சென்றனர்

## கண்காணிப்புக்குழுத் தலைவர் அறிக்கை

(கொழும்பு)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் இருவர் விடுதலைப்புலிகளால் தவறாகக் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவா மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூறு ஹௌவ்டே தெரிவித்துள்ளார்.

பிரவேசித்தன. அவற்றை இலங்கை கடற்படையினர் வழி மறித்தனர் அப்போது ஒரு படகு அந்த வழி மறிப்பில் இருந்து தப்பிச் சென்றது.

இதனையடுத்து கடற்படையினர் யாழ்ப்பாணத்திலுள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் உதவியைக் கோரினார். கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் கிளி

தொலைத்தொடர்பு கருவிகள் இருப்பதையும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் அவதானித்தனர்.

(10ம் பக்கம் பார்க்க)

வலம்புரி + சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா 17.00

# செங்கலடி - பதுளை வீதி இன்று திறந்து வைப்பு

(மட்டக்களப்பு)

பன்னிரண்டு வருடங்களாக மூடப்பட்டிருந்த ஏ-5 செங்கலடி-பதுளை வீதி இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் மூடப்பட்டிருந்த 3வது வீதியான செங்கலடி - பதுளை வீதியும் இன்று முதல் மக்கள் போக்குவரத்துக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ் வீதி திறப்பது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட இராணுவத்தளபதி பிரிகேடியர் அன்ரனியுடன் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களும் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## மத்திய கல்லூரி மாணவர்களுக்கு இன்று விடுமுறை

(யாழ்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எஸ். இராசதுரை அறிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

# பெற்றோல்-டீசல்-மண்ணெண்ணெய் விலை இன்று முதல் குறைப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று நள்ளிரவு முதல் பெற்றோல், டீசல், மண்ணெணணெய் ஆகியவற்றின் விலைகளைக் குறைத்துள்ளது.

இந்த விலை குறைப்பின் பிரகாரம் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 7 ரூபாவாலும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 80 சதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக் குறைப்பின் பிரகாரம் பெற்றோல் 47ரூபா 50 சதமாகவும், டீசல்27 ரூபா 50 சதமாகவும், மண்ணெணணெயின் விலை 20 ரூபா 50 சதமாகவும்

விக்கப்பட்டனர் என்று யுத்தநிறுத் தக் கண்காணிப்புக் குழுவின் தலைவா மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூறு ஹெவ்டே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளி யிட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது நேற்று முன்தினம் மாலை குடா நாட்டின் தென்பகுதி கடற்பரப்பிற்கு விடுத லைப்புலிகளின் இரண்டு படகுகள் யாழப்பாணத்திலுள்ள யுத்த நிறுத் தக் கண்காணிப்புக் குழுவினரின் உதவியைக் கோரினார். கண்காணிப் புக் குழு உறுப்பினர்கள் கிளி நொச்சியில் உள்ள புலிகளின் அர சியல் தலைமைத்துவத்தின் அனுமதி யுடன் அந்த படகினுள் பிரவேசித் தனர்.

அந்த படகினுள் நான்கு புலி உறுப்பினர் இருந்தனர். அங்கு

வலம்புரி + சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா:- 17.00

இந்த விலை குறைப்பின் பிர காரம் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 7 ரூபாவாலும், ஒரு லீற்றர் டீசலின் விலை 3 ரூபாவாலும், ஒரு சதமாகவும், மண்ணெண்ணெயின் விலை 20 ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப்படும்.

(10ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத்தலைவர் இன்று வன்னிக்குச் செல்வார்

(வவுனியா)

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு உறுப்பினர் இருவர் கடத் தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இன்று பேச்சு வார்த்தை நடத்துவதற்கு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண் பியூறு ஹெவ்டே வன்னிக்குச் செல லவுள்ளார். வன்னி செல்லும் அவர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனை கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவப் பணியகத் தில் சந்தித்து பேச்சு நடத்தவுள் ளார். (த)

# தென்மராட்சியில் இன்று மாபெரும் மக்கள் பேரணி

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை துரிதமாக அமுல்படுத்தக் கோரி யும் ஒப்பந்தத்தை மீறும் வகை யில் தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கண்டித் தும் இன்று சாவகச்சேரியில் மாபெ ரும் மக்கள் பேரணி இடம் பெற வுள்ளது.

தென்மராட்சி மக்கள்நலச் சேவை கள் சங்கத்தின் ஏற்பாட்டில் காலை. 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகும். இப் பேரணி தென்மராட்சி பிரதேச செயலகத்தைச் சென்றடையும்

அங்கு அரசாங்கத்திற்கு அனுப் பப்படுவதற்கான பிரதேச செயல ரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்ப டவுள்ளது.

இப் பேரணிக்கு வர்த்தக நிலை யங்கள் அரச திணைக்களங்கள் என்பவற்றை குறித்த நேரம்வரை மூடி பூரண ஆதரவை வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

அதேவேளை இப் பேரணிக்கு

(10ம் பக்கம் பார்க்க)

கையில் இருக்கும் நகைகளுக்கு
கச்சிதமான
கைமாற்று
ஹற்றன் நஷனல்
அடகு வைக்கும் வசதி

ஒரு பவுணுக்கு ரூ. 5500/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி 1.83% மட்டுமே!



- அதி கூடிய அடகுப்பணம்
- மிகக் குறைந்த வட்டி
- விரைவான சேவை
- தவணை முறையில் மாதாந்தம் மீளச் செலுத்தும் வசதி
- அடகு நகைகளுக்கு இலவச காப்புறுதி
- கணனி மூலம் மதிப்பீடு செய்யப்படுவதால் தங்க நகைகளுக்குச் சேதம் ஏற்படாது
- உயர் பாதுகாப்பும் கொடுக்கல் வாங்கல்களில் பூரண இரகசியமும் பேணப்படும்

மேலதிக விபரங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

[C/4634]

## சிறு விளம்பரம்

### சனீஸ்வரன் மாற்றம் உங்களுக்கு எப்படி?

22-07-2002ல் பன்னிரு இராசிகளுக்கும் சனி மாற்றப் பலாபலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. மற்றும் எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கு - நுண்ணறிவு மொழித்திறன் 30-6-2002ல் நிகழ்ந்த வியாழ மாற்றம் – அழகியல் (தரம் 1-5 வரை) V. A. சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். (5681)

### விற்பனைக்கு

CD Rom Sound Card, 800 W Speaker உடன் Computer Rs. 22900 24, மருதடிலேன், யாழ்ப்பாணம். (5682)


## செ. ஜோ அம்புலன்ஸ் தேசிய பாசறை

(யாழ்ப்பாணம்)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் தேசியபாசறை இந்த ஆண்டு திருகோணமலையில் நடைபெறவுள்ளது

இத்தேசிய பாசறையில் ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் கடேற்அம்புலன்ஸ் பிரிவைச் சேர்ந்த44அங்கத்தவர்கள் பங்குபற்றவுள்ளனர்

இதற்காக யாழ்ப்பாணம் தெற்குப் பிரதேசத்திற்கான அங்கத்தவர்கள் தெரிவு நாளைமறுதினம் புதன்கிழமைபி ப4.30மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குகொள்ளவிரும்புபவர்கள் இத்தெரிவுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண தெற்குபிரதேச ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன் கேட்டுள்ளார்.

(த.5)

## கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகவிளையாட்டு அவையினால் நடத்தப்படவுள்ள கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பி. ப 4-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணியும் ஜொனியன்ஸ் விளையாட்டு கழக அணியும் மோதவுள்ளன. (த)

## இரண்டு பிரமச்சாரிகள்

...றியகுடும்பத்தில் பிறந்ததனால் அவர்முஸ்லிம்இனத்தால் உள்வாங்கப்பட்டார் எனினும் இந்துசமயகோட்பாடுகளையும் பகவத்கீதை கூறும் கருத்துக்களையும் கடைப்பிடிக்க அவர்தவறியதேயில்லை

இராமநாதபுரத்திலுள்ள பழம்பெரும் அபாஸ் உயர்நிலைப்பள்ளியில் கல்விபயின்ற அப்துல்கலாம் பின்னர் திருச்சிராப்பள்ளிலுள்ள புகழ்மிக்க சென்.ஜோசப்கல்லூரியில் இளநிலைப்பட்டம் பெற்றார்.

பட்டப்படிப்பு முடிந்ததும் சென்னை குரோம்பேட்டை எம்.ஐ ரி தொழில்நுட்பக் கல்விக்கழகத்தில் விமானப் பொறியியல் பிரிவில் சிறப்புக் கல்வித்தகுதி பெற்றார்-

எம். ஐ.ரியில் இணைந்து கல்விகற்பதற்கு அனுமதி கிடைத்தபோது கட்டணமாக ஆயிரம்ரூபாவைச் செலுத்துவதற்குக்கூட முடியாதநிலையில் அவரதுகுடும்பம் ஏழ்மைநிலையில் இருந்தது.

1958ல் இந்தியப் பாதுகாப்புத்துறையின் தயாரிப்புப் பிரிவில் சேர்ந்தார். இத்துறையில் 40 ஆண்டுகள் இவர் ஆற்றியபணி மகத்தானது. விண்வெளிகளில் செயற்கைக் கோள்களை செலுத்தும் இந்தியாவின் பெருமைமிக்க திட்டங்களில் அப்துல் கலாம் ஆற்றிய பணி அளப்பரியது.

ரொக்கட் ஏவுகணைத்தொழில் நுட்பத்தில் சர்வதேச அரங்கில் இந்தியாவுக்குத்தனி இடம் கிடைப்பதில் கலாமின் பங்கு மிக முக்கியமானது.

இந்தியாவின் அணு ஆயுதத்தை தயாரித்த அப்துல் கலாம் 1998இல் அணு ஆயுத சோதனையில் வெற்றிபெற்று இந்தியத்தேசத்திற்கு வான் புகழைக் பெற்றுக் கொடுத்ததுடன் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகராகவும்பணியாற்றினார்.

பிரமச்சாரி அப்துல் கலாம்

ஒரு பிரமச்சாரி நூறுகுரங்குக்குச் சமன் என்று தமிழிலே ஒரு பழமொழி கூறுவார்கள். எந்தக் கருத்தை அப்பழமொழி பிரதிபலிக்கிறது என்பதை ஆராய்வதை விட, அப்துல் கலாமைப் பொறுத்தவரை, இந்தியாவை கட்டியெழுப்பவேண்டுமென்ற மனவேகத்திற்கு பொருந்துவதாகவே அப்பழமொழி அமையும்.

71வயது நிரம்பிய அப்துல் கலாம் குடியரசுத்தலைவர் பதவியைப் பொறுப்பேற்கின்ற போது இந்தியாவின் அரசியல்வரலாற்றில் புதியதொருபதிவு உண்டாகும்.

பிரமச்சாரியத்தைதுறவறத்தை உலகிற்குப்போதித்த இந்திய வீரத்துறவி விவேகானந்தர் மூலம் அமெரிக்கா போன்ற வல்லரசுக்கு இந்தியாவின் அறிவாற்றலை. ஆத்மாபலத்தை நிரூபித்திருந்தது இப்போது இந்தியதேசம் இரண்டுபிரமச்சாரிகள் மூலம் தனதுஆயுத தொழில்நுட்ப பலத்தை உலகிற்கு நிரூபிக்கப்போகிறது-

ஆம்இந்தியாவின் வரலாற்றில் பிரதமராக இருக்கும் வாஜ்பாய் ஓர்பிரமச்சாரி. இனிகுடியரசுத் தலைவராக பதவிஏற்கப்போகின்ற அப்துல்கலாமும் ஓர்பிரமச்சாரி

70வயதுகடந்த இரண்டு பிரமச்சாரிகளின் ஆட்சியில் இந்தியாவின் ஆயுதபலம் தொழில்நுட்பத்திறன் உலகை உருட்டிஎடுக்கப் போகிறது ஒருபிரமச்சாரி நூறுகுரங்குக்குச்சமனெனில் இரண்டு பிரமச்சாரிகள் . . . அப்பாடா . . . உலகவல்லரசுகளுக்குஇனிமேல் உறக்கம்குறையப்போவது திண்ணம்.

முஸ்லிம்களின் தேசஉணர்வு அதிகரிக்கும்

பாரதபூமியை ஆண்ட தசரதச்சக்கரவத்திக்கு மனைவியர் எண்ணிலர் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த மன்னர்க்கெல்லாம் மனைவியர் குறைவிலர். ஆனால்இன்று மனைமாட்சிபுகா மன்னர்கள் இருவர் இந்தியதேசத்தை ஆட்சிசெய்யப் போகின்றார்கள்.

இதில் இந்தியஜனநாயகத்தின் உயரிய பண்பு உட்கிடையாக இருப்பதையும் மறப்பதற்கில்லை.

ஒருபுறத்தில் பாகிஸ்தான் பயங்கரவாதிகளைத் தூண்டிவிட்டு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும்போது மறுபுறத்தில் காஷ்மீரில் முஸ்லிம்தீவிரவாதிகள் பிரிவினை கோரிநிற்க ஓர்முஸ்லிம் அறிஞனை குடியரசுத்தலைவராக பாரதம் தெரிவுசெய்கிறதெனில் அங்கு மதச்சார்புக் கொள்கைஅடியோடு புறக்கணிக்கப்படுவது தெளிவாகிறது.

அதேவேளை முஸ்லிம்கள் பாரதத்தின்மீது கொண்டுள்ள தேசப்பற்றை மேலும் அதிகரிப்பதாகவும் அது அமையப்போவது திண்ணம்.

எல்லாவற்றிற்கும் மேலாக அப்துல்கலாம் என்ற உலகம் போற்றும் விஞ்ஞானியைத் தமிழகம் தந்து மீண்டும் வான்புகழ் கொண்டுள்ளது என்றால் அதுமிகையில்லை.

# ப. நோ. கூ. சங்கங்களுக்கு அமைச்சர் காதர் நேரில் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டுநாள் உத்தியோகபூர்வவிஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த கூட்டுறவுஅமைச்சர் அல்ஹஜ் ஏ.ஆர் எம்.அப்துல்காதர் நேற்று யாழ்மாவட்டத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரில் விஜயம்செய்து பார்வையிட்டார்

திருநெல்வேலியில் உள்ள யாழ் மாவட்டக் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விஜயம் செய்து அவற்றின் செயற்பாடுகளை பார்வையிட்ட அமைச்சர்

தொடர்ந்து கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் நடைபெற்றுவரும் 80வதுசர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றியதுடன் சங்கத்திற்கு கணனி ஒன்றையும் அன்பளிப்புச் செய்தார்

1990ம்ஆண்டுஇடம்பெற்ற இராணுவநடவடிக்கையினால் சேதமுற்ற தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தை சங்கத்தின் முன்னாள் தலைவரும்முன்னாள் எம்பியுமான எஸ்.சிவமகாராஜா அமைச்சருக்குக் காண்பித்தார்

தொடர்ந்து சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் நடத்தும் பழரசத்தொழிற்சாலை வலிகாமம் பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் கைதடி சாவகச்சேரி பலநோக்குகூட்டுறவுச்சங்கம் மற்றும் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றையும் அமைச்சர் சென்றுபார்வையிட்டார். (ம)

# அரசஊழியர் சம்பளஉயர்வுகள் கூட்டுறவுதுறையினருக்கும் தேவை

## அமைச்சரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசஊழியருக்கு வழங்கப்படுகின்ற சம்பளஉயர்வுகள் மற்றும் இதரவாழ்க்கைச் செலவுப்படிகள் கூட்டுறவுத்துறைஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

இது விடயத்தில் தாங்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்வீர்கள் எனஎதிர்பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்ட கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் கூட்டுறவுஊழியர் தொழிசங்கம் கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.உண்மையாகவும் நேர்மையாகவும் எமதுசேவையை வழங்கினாலும்கூட எமக்குவழங்கப்படும்சேவை மிகக்குறைவாக உள்ளது

கூட்டுறவுத்துறை ஊழியர்களாகிய நாம் ஓய்வுபெறும் போது போதுமான ஊழியர் சேமலாபநிதி கிடைப்பது கஷ்டமாகவே உள்ளது

தொழிலாளருடைய நலன் பேணும்அமைப்புக்கள்நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் செயற்படவில்லை அவற்றை மீண்டும் செயற்படுத்தி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

கூட்டுறவுத்துறை சார்ந்த ஊழியர்களின் பிரச்சினைகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

கூட்டுறவுத்துறை சார்ந்த ஊழியர்களுக்கான நட்டஈடு தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். (க)

# பழைய மாணவர் கிரிக்கெற் பரியோவானுக்கு வெற்றி

(யாழ்ப்பாணம்)

பரியோவான் கல்லூரி பழைய மாணவர்களுக்கும்மத்திய கல்லூரி பழையமாணவர்களுக்கும் இடையில் நேற்று நடை பெற்ற கிரிக்கெட் போட்டியில் பரியோவான் கல்லூரிஅணிவெற்றி பெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி பழையமாணவர் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 197ஓட்டங்களைப் பெற்றது பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி பழைய மாணவர் அணி 4விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இப் போட்டியில் சகலதுறை ஆட்டக்காரராக ரி. காண்டீபனும், (மத்தியகல்லூரி சிறந்த துடுப்பாட்ட வீரனாக ரி. பீஸ்மனும்(சென்ஜோன்ஸ் சிறந்த பந்து வீச்சாளராக டாக்டர் ஆர். சிவகுருநாதனும் (சென்ஜோன்ஸ்) சிறந்த களத்தடுப்பாளராக பி பிரதீபனும் (சென்ஜோன்ஸ்) ஆட்ட நாயகனாக டினேஸ் எபநேசனும் தெரிவாகினர்.

(ந-5)

## விஷ ஊசிக்கு குழந்தை பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புன்னைச் சோலையில் ஒன்றரை வயது ஆண்குழந்தை ஒன்று விஷ ஊசி ஏற்றப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்;

மேற்படி குழந்தைக்கு ஏற்றப்பட்டதாகக் கருதப்படும் விஷ ஊசியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (த)

## பஸ் விபத்தில் 7 பேர் காயம்

(கொழும்பு)

இகலகம பகுதியில் பஸ் ஒன்று வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 7 பேர் காயமடைந்துள்ளனர்.

அநுராதபுரத்திலிருந்து கொழும்பைநோக்கி சென்றுகொண்டிருந்த பஸ்ஸேநேற்று விபத்துக்குள்ளானது.

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு கழக உறுப்பினர்களால் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரத்த தானம் வழங்கப்பட்டுள்ளது.

(த-19)

## இராஜகோபுரம் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஐந்துதள இராஜகோபுரத்தின் மகாகும்பாபிஷேகம் இன்று காலை 5-59 மணி முதல் 6-07 மணி வரையுள்ள சுபநேரத்தில நடைபெறும்.

(த)

# எயிட்ஸ் விழிப்புணர்வு நோய் பரவலை தடுக்கும்

## ஸ்பெயினில் டாக்டர் சிசிரால் காந்தி தெரிவிப்பு

(சென்னை)

எயிட்ஸ்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக வாழ்ந்து வரும் கீழைத்தேய வறிய நாடுகளுக்கு செல்வந்த நாடுகள்உதவி வழங்கவேண்டுமென தமிழ்நாடு எயிட்ஸ் நோய்த்தடுப்புப் பிரிவுத்தலைவர் டாக்டர் சிசிரால் காந்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் ஸ்பெயினில் நடந்து முடிந்த எயிட்ஸ்மாநாட்டிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இந்தியாவில் 40 இலட்சம் பேர் எயிட்சினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவைப் பொறுத்தவரை இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 90 வீதத்தினர் அதனைப் பற்றிய போதிய விளக்கமின்மையால் மேலும் பலருக்கு எயிட்ஸ் பரவ காரணமாக விருக்கின்றனர்.

இந்தியாவின் ஏனைய மாநிலங்களை விடதமிழ்நாட்டிலேயே எயிட்ஸ் வேகமாக பரவிவருகின்றது.

எயிட்ஸ் நோயைத் தடுக்க மாநில அரசுகள் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.இந் நிலை தொடருமானால் ஆபிரிக்காவைவிட இந்தியாவில் இனி வரும் காலங்களில் எயிட்ஸ் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் அதிகமாகக் காணப்படுவதாக அவர் அங்கு மேலும்தெரிவித்தார். (ஷ-19)

# காஷ்மீரில் துப்பாக்கிச் சூட்டுக்கு 24 பேர் பலி

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பகுதியின் குடியிருப்புக்கள்மீது துப்பாக்கி நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 24 பேர் பலியானதுடன் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தியாவின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில்உள்ள காஷ்மீர் பகுதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது பலியானவர்களில் சிறுவர்களும் உள்ளடங்குவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மேமாதம் ஜம்மு காஷ்மீர் பகுதியில் இராணுவ பயிற்சிமுகாம்மீது தீவிரவாதிகள் மேற்கொண்டதாக்குதலின்போது கொல்லப்பட்ட 30 பேரில் குழந்தைகளும் அடங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# ஏ-09 பாதையூடான போக்குவரத்து

# பாதுகாப்பு குறித்து பயணிகள் அச்சம்

(கொழும்பு)

ஏ-09 வீதியூடாக பயணம் செய்யும் பயணிகள் தங்களின் பாதுகாப்புக்குறித்து பெரும் கவலை கொண்டுள்ளதாகவும் இது விடயத்தில் தக்கநடவடிக்கை மேற் கொள்ளப் பட வேண்டும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் ஜனாதிபதி, பிரதமர் கண்காணிப்புக்குழு தலைவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாக கொழும்பிலிருந்துவெளியாகும் ஆங்கில தினசரிஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

கடந்த இரு மாத காலத்தில் இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் உட்பட நான்கு பேர் கடத்திச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து ஏ-9 பாதைவழியே கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் பஸ்களில் செல்ல வேண்டுமென ஈ பி டி.பி. வேண்டுகோள் விடுத்துள்ளது.

முகமாலைக்கும் ஓமந்தைக்கும் இடையில் நான்கு வெவ்வேறு இடங்களில் வைத்து தர்மன், பாலமுரளி நவரட்ணம் சங்கர், நிமால் சங்கர், கந்தசாமி,சசிகுமார் ஆகியோர் கடத்திச் செல்லப்பட்டதாக விடுதலைப்புலிகளை ஈ.பி.டி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதில் பாலமுரளி, நவரட்ணம் சங்கர் ஆகியோர் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் என்றும், நிமால் சங்கர் என்பவர் யாழ்ப்பாணத்திலுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் களஞ்சியக்காப்பாளராகஇருப்பதுடன் யாழ்.பல்கலைக்கழக மாணவராக இருந்தவரென்றும் கொழும்பில் தொழில் ஒன்றுக்காக நேர் முகப் பரீட்சைக்கு சென்றுவிட்டு திரும்பும் வழியில் ஜூலை 2 ல் கடத்தப்பட்டுள்ளார். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கந்தசாமி சசிகுமார் இயக்கச்சிப் பகுதியில் வைத்துகடத்தப்பட்டுள்ளார்.

இது விடயத்தில் உடன் நடவடிக்கை மேற் கொள்வதற்கு சம்பந்தப் பட்டவர்கள்முன்வர வேண்டும்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## உதைபந்தாட்ட போட்டி மன்னார் அணி வெற்றி

(சுண்டுக்குளி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினால் அகில இலங்கை லீக் மட்டத்தில் 'எவரெடி' வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்திவரும் உதைபந்தாட்ட தொடரில் 19 வயதிற்குட்பட்ட ஆட்டத்தில் மன்னார் லீல் அணியை எதிர்த்து பருத்தித்துறை லீக் அணி ஆடியுளளது.

நேற்று முன் தினம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ்ஆட்டத்தில் மன்னார் அணி பருத்தித்துறை அணியை 5:1என்ற கோல்கணக்கில் வென்றுள்ளது. இவ்ஆட்டத்திற்கு நடுவராக ரி. ஜேக்கப் கடமையாற்றினார்.

இந்நிகழ்விற்கு மன்னார் இலங்கை வங்கி முகாமையாளர் மைக்கல், சென்சேவியர் கல்லூரி அதிபர்அருட்சகோதரர் ஸ்தனிலொஸ் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (க-110)

## பாராளுமன்றில் ஒழுக்கத்தை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை

### சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகளின் போதுசபையின்ஒழுக்கங்களை மீறுவோர் மீது நிலையியற் கட்டளையின் கீழ்நடவடிக்கை எடுக்க கட்சித் தலைவர்கள் மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படுமென சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை சபையில் கிழக்கு வன்முறைகள்தொடர்பாகஇடம்பெற்ற கோஷங்கள், குழப்பங்கள் சம்பந்தமாக சபாநாயகர் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என சபை முதல்வரும் அமைச்சருமான டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார கேட்டதற்கமைவாகவே மேற்படி தகவலை சபாநாயகர் தெரிவித்துள்ளார். (க-03)

## துப்பாக்கிகளுடன் தப்பிய பொலிஸார் பிடிபட்டார்

(கொழும்பு)

பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் இரண்டு ரி56ரக தானியங்கி இயந்திர துப்பாக்கிகளுடன் தப்பிச் செல்ல முற்பட்ட வேளை அவரை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

மட்டக்களப்பு உகண பொலிஸ் நிலையத்திலேயே இச்சம்பவம்இடம் பெற்றுள்ளது.

தப்பியோட முயன்ற கான்ஸ்டபிள் ஆயுதக்களஞ்சியத்துக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரியை மிரட்டியே துப்பாக்கிகளை அபகரித்து செல்ல முற்பட்டதாக அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எதிர் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். (க-8)

## ஜூன் மாதத்தில் 200பேர் வீதி விபத்தில் பலியாகினர்

### பொலிஸ் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த மாதம் வீதிவிபத்துக்களின் போது 200பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஒரிருமாதங்களாக வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதனால்,அதனை தடுக்கும் நோக்குடன் பொலிஸ் போக்குவரத்துபிரிவுதற்போது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

வீதி விபத்துக்கள்அதிகமாக நடப்பதற்குதனியார் போக்குவரத்து பஸ் சாரதிகளே காரணம் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-8)

## மூன்று வயது சிறுவனின் உயிரைக் காப்பாற்றுமாறு அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

இருதயத்தில் சத்திர கிசிச்சை மேற்கொள்ள படவுள்ள மூன்று வயதுச்சிறுவன் முகமட் அஸ்வரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு தாராள மனம் படைத்தோர் பண உதவிபுரியுமாறு பெற்றோர் சார்பில் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தன புர ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்படவுள்ள இச்சத்திர கிகிச்சை மற்றும் இதர வைத்திய செலவுகளிற்காக சுமார் 02 இலட்சம் ரூபா வரையில் தேவைப்படுகிறது.

சிறுவனின் பெற்றோரால் இப்பணத்தை செலுத்துவது சாத்தியமற்றதாக உள்ளது.

எனவே பணம் செலுத்த விரும்புவோர் மக்கள் வங்கி மாத்தளை, கணக்கு இல-000 22070544157 என்னும் முகவரிக்கு தங்கள்காசோலையை உடன் அனுப்புமாறு அவ் வேண்டுகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஜஸ்வந்சிங்ஹா நாடு திரும்பினார்

(கொழும்பு)

இலங்கைக்கான இருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹாகடந்தவெள்ளி இரவு இந்திய விமானப் படை விமானம் மூலம் நாடு திரும்பியுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவைப் பேணும் முகமாகவும், உறவுகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் அமைச்சர்களுடன் இவர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (உ-8)

## குட்டியப்புலத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வெடிமருந்துகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் 'நெஞ்சை உருககும் காலை' நாடகம் என்பன குட்டியப்புலம் அ. த. க. பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

'யுனிசெவ்' அமைப்பு மற்றும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இணைந்து இந்நிகழ்வை மேற்கொண்டது.

வெடிப்பொருட்களால் ஏற்படும் அனர்த்தங்களை எவ்வாறு தவிர்ப்பது என்பது பற்றிய விளக்கம் நாடகத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டமை பலரின்பாராட்டையும் மதிப்பையும் பெற்றது. (க)

## அமைச்சர்சிங்ஹாவின்கூற்று ஏற்க முடியாத ஒன்று

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நாடு கடத்தும் இந்தியாவின் கோரிக்கையில் எவ்வித மாற்றமும் இல்லை என்ற இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங்ஹாவின் கூற்று சர்வதேச அரசியல் நோக்கர்களின் பார்வையில் ஒரு அதிருப்தி நிலையையே தோற்றுவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் சமாதான சூழல் இடம் பெற்று வருகின்ற சூழ்நிலை நிலையில் இந்திய வெளியுறவு அமைச்சரின் இக் கூற்றானது சமாதான முன்னெடுப்புக்களை மேலும் தாமதப்படுத்தும் என்றும் சர்வதேச அரசியல்வல்லுநர்கள் மேலும் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

தமது கூற்று இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகளை எந்த விதத்திலும் பாதிக்காது என அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹா கூறினாலும் கூட இக்கூற்று ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்றும் சர்வதேச அரசியல் வல்லுநர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பின் இந்தியா சென்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹா மேற்கண்ட கருத்தை தெரிவித்திருந்தமை ஏற்கனவே தெரிந்ததே. (க)

## 5 ஆம் தர புலமைப்பரிசில் தொகை அதிகரிக்கும

(கொழும்பு)

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் உதவிப் பணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைஎடுத்துவருவதாககல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகஅமைச்சர் மேலும்தெரிவிக்கையில்; 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை தேர்ந் தெடுக்கும் மாவட்டங்களில் பத்துப் பாடசாலைகளை அமைத்துஅவற்றில்இவர்களை மட்டும் சேர்த்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## இம் மாதம 20 ஆம் திகதிக்கு முன் ஹாட்லிக்கல்லூரியிலிருந்து படையினர் வெளியேறுவர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியில் இருந்து இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தாம் வெளியேறிவிடுவோம் என்று 524 படைப்பிரிவு கட்டளை அதிகாரி நேற்றுமுன் தினம் கல்லூரி அதிபருக்கு தெரிவித்துளளார்.

வடமராட்சி பகுதியில்பாடசாலைகளில் முகாமிட்டிருக்கும் படையினர் பாடசாலைகளை விட்டுவெளியேற வேண்டும் என்றும் தங்கள்கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வது கடினமாக உள்ளது என்றும் இப் பகுதி மாணவர்கள் பலர் ஆர்ப்பாட்டம் நடத்தியமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (க-03)

## தங்காலைச் சம்பவம் 24 கைதிகள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்

(கொழும்பு)

தங்காலைச் சிறைச்சாலையில் கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக 24 கைதிகள் நேற்று முன்தினம் தங்காலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 10 சிறைக் காவலர்களைப் பணயம் வைத்து கலவரம் நடத்தியதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. (க-05)

## யாழ். நகரைவலம் வந்த ஒலிபெருக்கி வாகனம்

(யாழ்ப்பாணம்)

இருதய நோயினால் பீடிக்கப்பட்டுள்ள $3\frac{1}{2}$ வயது சிறுவனுக்கு உதவுங்கள் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பனர் கட்டப்பட்ட வாகனம் ஒன்று யாழ். நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் வலம் வந்தது.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட 'டொல்பின்' ரக வானில் பிரஸ்தாப சிறுவன் வைக்கப்பட்டிருந்தார்.

பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு கருணைக்கரம் நீட்டுங்கள் என்று ஒலி பெருக்கி மூலம் அறிவிப்பு வெளியாகிக்கொண்டிருந்தது.

கருணை உள்ளம் படைத்த சிலர் பணத்தை வாரி வழங்கியதையும் காணக் கூடியதாக இருந்தது. (க-06)

## நாகா பிரிவினைவாதிகள் பேச்சுக்கு சம்மதம்

(புதுடில்லி)

இந்தியாவில் பிரிவினை கோரிப் போராடும்நாகலாந்துப்பிரிவினைவாதிகள் இந்தியாவுடனான பேச்சுவார்த்தையினை அங்கு நடத்துவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.

40 வருடங்களுக்கு அதிகமாக நாகலாந்துப்பிரிவினைவாதிகள் இந்திய அரசுடன் யுத்தத்திலீடுபட்டு வருகின்றனர்.

இவ் விருநாடுகளுக்கும் இடையே சமாதானத்தின் அடிப்படையில் கடந்த ஐந்து வருடங்களாக நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைகள் தாய்லாந்து, நெதர்லாந்து போன்ற நாடுகளிலேயேநடத்தப்பட்டன.

ஆனால் நாகா பிரிவினைவாதிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள எல்லா வழக்குகளையும் இந்திய அரசு வாபஸ் பெறுவதற்கு ஒப்புக்கொண்டுள்ளதால், பேச்சுவார்த்தைகளை இந்தியாவில் நடத்துவதற்கான சாத்தியக்கூறு ஏற்பட்டுள்ளதாக நாகா பிரிவினை இயக்கத்தின்தேசிய சோஷலிச சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (க-8)

# கோண்டாவில்
# நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில்
## ஆதி சுந்தர பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்
## (15-07-2002 காலை 5.59 முதல் 6.07 வரை)

### காயத்திரி பீடாதிபதியின் ஆசிச் செய்தி



''மஹாசதாசிவாக்யஸ்ய பாதஸ்தானம்நுகோபுரம்''

என்பது ஆகம வாக்யம் ஆலயங்களிலே கோபுரம் அந்தந்த மூர்த்திகளின் பாத ரூபமாக வணங்கப்படுகிறது. ஸ்தூலலிங்கத்தில் மூர்த்தி சதாசான் னித்யமாக இருக்கும். ஆகவே தான் நாமெல்லோரும் முதலில் ஸ்தூலத்தை வணங்கி சூட்சுமத்தை உணர ஆலயத்தின் உட்செல்கிறோம். சென்ற முறை நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தின் போது எனது ஆசியுரையில் இந்த ஆலயத்திற்கு ஒரு கோபுரம் அமைக்க இறைவனின் திருவருள் துணை நிற்க வேண்டினேன். அந்த வேண்டுகோளை விநாயரின் ஆக்ஞையாகக் கொண்டு தர்மபரிபாலன சபைத் தலைவர் பரம்சோதி அவர்களும் நிர்வாக சபையினரும் சிரத்தையோடு செயல்பட்டதின் பலனாக இன்று இராஜகோபுரம் வானளாவ ஓங்கி அழகுற நிற்கிறது. இதற்கு விநாயகரின் திருவருளே முதற் காரணம். ஆகவே விநாயகர் திரு வருளால் இந்த தர்ம கைங்கர்யத்திற்கு உதவி செய்த அனைவரும் சிறப்புற வாழ விநாயகரின் திருவருள் கிடைக்க ஆசி கூறுகிறேன்.

காயத்திரி பீடம், சிவஸ்ரீ. தா.மகாதேவக்குருக்கள்.
இணுவில்


### யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியின் ஆசியுரை

யாழ்ப்பாணம் கோண்டாவில் நெட்டிலைப் பாய் என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் விநாயகப் பெருமானது திருவருட் பெருமையின்பயனாய் அதிசுந்தர பஞ்சதள இராஜ கோபுரம் உருவாகி, 15.07.2002 அன்று நூதனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நடைபெற விருப்பதைக் காணும் பேறு இவ்வூர் மக்களுக்குக் கிட்டியுள்ளமை எம்பெருமான் திருவருளன்றி வேறில்லை. ஆலய அறங்காவலரினதும் அடியார்களினதும் சிறபக் கலைஞர்களினதும் அரிய முயற்சியின் பயனாய் உருவாகிய இக்கோபுரம் பக்தியின் சின்னமாய் வானளாவ உயர்ந்து தூலலிங்கமாக எம் பெருமானின் பெருமையை உணர்த்தி நிற்கின்றது.-


'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற வாக்கிற்கேற்ப இவ்வாலயத்தின் தெய்வீகப் பொலிவை மேலும் சிறப்பிக்கும் வகையில் இக்கோபுரம் அழகுற அமைந்து விளங்குகின்றது. இக் கோபுரத்தை வழிபடும் போது எம் ஒவ்வொருவரினது உள்ளமும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் பக்குவமடைந்து எமது பிறவிப் பயனைப் பெறும் வகையில் பண்புள்ளவர்களாக மிளிர பிள்ளையாரின் திருவருள் துணை நிற்பதாகுக!

இக்கோபுரத் திருப்பணியில் இணைந்து செயற்பட்ட அனைத்து அன்பர்களுக்கும் விநாயகப் பெருமானின் திருவருட்கடாட்சம் கிட்டுவதாகுக. இராஜ கோபுர கும்பாபிஷேகத்தின் பயனாய் எங்கும் அன்பும் சாந்தியும் சமாதானமும் நிலவி மக்கள் சகல வளங்களுடனும் இனிதே வாழ விநாயகப்பெருமானின் திருவருளை முன்வைத்து வாழ்த்தி ஆசி கூறுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

பேராசிரியர் கலாநிதி
ப.கோபாலகிருஷ்ண ஐயர்.
கலைப்பீடாதிபதி, யாழ் பல்கலைக்கழகம்.



### ஆலய பரிபாலன சபைத் தலைவரின் செய்தி



''கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்'' என்ற நல்வாக்கிற்கிணங்க ஓர் ஆலயத்தின் பிரதான அங்கமாக அமையும் இவ் இராஜகோபுரம் சகல விதிகளுக்கும் அமைய சகல சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டு, கோண்டாவில் நெட்டிலைப் பாய் பிள்ளையார் ஆலயத்தில் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பேரருளால் இன்று அமைந்திருக்கின்றது.

இராஜகோபுரம் ஒன்று இந்த ஆலயத்தில் அமைக்க வேண்டும் என்ற அடியேனது நீண்ட கால ஆசையை 1999ம் ஆண்டு நடந்த மகாகும்பாபிஷேக வைபவத்தில், ஆசி உரையாற்றிய மதிப்பிற்குரிய சிவஸ்ரீ தா.மகாதேவாக்குருக்கள் அவர்கள் இந்த இராஜகோபுரத் தின் முக்கியத்துவத்தைக் கூறி இத்திருப்பணியை ஆரம்பிப்பதற்கு எனக்கு ஒரு உத்வேகத்தை அளித் தார். அவர்களுக்கு அடியேனது மனப்பூர்வமான நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இராஜகோபுரம் 55அடி உயரமானதாகும். உடலின் ஐம்பொறிகளைக் குறிப்பவையாக ஐந்து தளங்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. விதி முறைக்கமைய அளவுப் பரிமாணங்களுடன் அராலியூர் க.கோபாலசிங்கம சிற்பாசாரியார் அவர்களால் இக்கோபுரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரம் அத்திபாரம் இடப்பட்ட நாளில் (07.02.2001) இருந்து ஒரு வருடம் நாலு மாதங்களில் அமைக்கப்பட்டு இன்று இக்கும்பாபிஷேக விழாவை நடத்துவதற்கு பரிபூரண ஒத்தழைப்பு நல்கிய சிற்பகலா திலகம் க.கோபாலசிங்கம் குழுவினருக்கு எமது நன்றி யைத் தெரிவிக்கின்றோம்.

இந்த இராஜகோபுரம் அமைப்பதற்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கிய எமது கிராமத்தைச் சார்ந்த திரு.இ.ஸ்ரீகாந்தா (பிரதம பொறியியலாளர், கட்டிடத் திணைக்களம் யாழ்மாவட்டம்) அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் இராஜகோபுரத் திருப்பணிக்கு ரூபா ஏழு லட்சத்தை தந்துதவிய முன்னாள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கட்கும், அத்தொகையை எமக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்து தந்த நல்லூர் பிரதேச சபைத்தலை வர் திரு.க.மணிபல்லவராஜன் அவர்கட்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்த மாபெரும் திருப்பணி நிறைவு பெற சகல விதத்திலும் உதவி புரிந்த வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் வசிக்கும் சகல அடியார்களுக்கும் அடியேன் நன்றி தெரிவிப்பதுடன் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் சகலருக்கும் அருள் பாலிக்கப் பிரார்த்திக்கின்றேன்

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த இராஜகோபுரத்தை அமைப்பதற்கு திருவருள் புரிந்து, அடியேனை வழிநடத்திய எம்பெருமானாம் விநாயகப் பெருமானுக்கு அடியேனது பணிவான, பக்தியான நன்றிகள் சமர்ப்பணம்.

சுப்பையா பரம்சோதி
தலைவர்,
பரிபாலனசபை,
கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில்

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

திருவருள் பொலிவுமிக்க கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் திருக்கோவிலில் பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கப்பெற்று, குடமுழுக்கு வைபவம் நடைபெறுவது அறிந்து ஆனந்தமடைகிறேன். ஆன்மீக சீலர்கள் நிறைந்ததிருப்பதி கோண்டாவில். இத்திருப்பதியில் பழம்பெரும் திருத்தலமாக விளங்குவது நெட்டிலைப் பாய் வேழ முகத்தவன் திருக்கோயில் கோயில் அழகும், ஆகமநெறிமுறை நிறைவும்பெற கோபுரம் அவசியமாகும் ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்பார்கள் வானளாவ எழுந்து நின்று வரவேற்கும் கோபுரத்தை தூலலிங்கம் என அழைப்பர் ''கோபுர தரிசனமே எந்தன் பாபவிமோசனமே'' என்பார் கோபால கிருஷ்ணபாரதியார். கோபுரத்தில் இறைவன் அருள் பாலிக்கும் திருவருட்காட்சியும், அதர்மங்கொண்டவர்களை சங்காரம் செய்யும் காட்சியும் சிற்பியால் செதுக்கப்பட்டுள்ளது. ஆலயதரிசனத்துக்கு வரும் அடியவன் அதன் அர்த்தத்தை விளங்கி அகந்தையை நீக்கி புலன்களை அடக்கி வழிபாடு செய்வதற்கு கோபுர தரிசனம் உதவுகிறது.

''பிறையணி சிகரம் தூரப்
பிறங்கிடத்தரிசித்தோர்கள்
அறைகழல் கமல பாதத்(து)
அடிகள் ஆலயத்துள் ஏகி
முறையுறப் பணிந்தோர் முன்னம்
முற்றிய உடலந் தோறும்
சிறையுறப் புரிந்த பாவம்
தீர்தல் அக் கணத்தில் திண்ணம்''

என்பது சைவச் சான்றோர் நெறியாகும். கோபுரம் எழுவதற்கு துணை செய்த விநாயகப் பெருமான் அடியவர்கள் என்றும் வாழ்த்துதலுக்கும் நன்றிக்கும் உரியவர்கள். திருப்பணிப் பொறுப்பை ஏற்று அயராது கடமை செய்த தொண்டர்கள் பெருமைக் குரியவர்கள். கோபுரநிர்மாணக் கலைஞர் அராலி கோபாலசிங்கம் குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள். நெட்டிலைப்பாயான் கோயில் நெடிய கோபுர தரிசனத்தோடு எம்மண்ணில் நிம்மதியும் நிறைந்த நல்வாழ்வும் மலர பிரார்த்தித்து அமைகிறேன்.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்
''பாலாவி''
இணுவில்

### நல்லூர் பிரதேச சபைத்தலைவரின் வாழ்த்துச் செய்தி

எமது பிரதேசத்திற்குட்பட்ட பகுதியிலே அமைந்துள்ள கோண்டாவில், நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுரத்தின் கும்பாபிஷேகம் இன்று நடை பெறுவதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். எனது பரிபூரண வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இந்த இராஜகோபுரத்தின் மகிமை அறிந்து அதன் நிர்மாணத்திற்கு நிதி உதவி கிடைப்பதற்கு ஆவன செய்ததில் மன நிறைவு அடைகின்றேன். இந்த இராஜ கோபுரத்தை அமைப்பதற்கு கடும் முயற்சி எடுதத அந்த ஆலயத்தின பரிபாலன சபைத்தலைவர் திரு.சு. பரம்சோதி அவர்களின் இறைபணியைப் பாராட்டுகின்றேன்.

**"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"**

க. மணிபல்லவராஜன J.P U.M
தலைவர்,
நல்லூர் பிரதேசசபை
திருநெல்வேலி

எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22கரட்டில் செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில்
நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மிட்சுசி, அட்லஸ் சீமெந்து வகைகளின் ஏக விநியோகத்தர்கள்
ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

செரமிக்ஸ் பொருட்களுக்கு நாடவேண்டிய இடம்
நியூ கமல் செரமிக்ஸ்
37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22கரட் தங்க வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
சாரங்கா நகை மாடம்
177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:- 2480

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# இன்று ஒரு தகவல்

## சுமேரிய நாகரிகம்

யூப்பிரடிஸ், டைகிரிஸ் ஆறுகள் செழிப்பிக்கும் மொசப்படேமியாச் சமவெளி முற்காலத்தில் சுமேரியா என அழைக்கப்பட்டது. சுமேரிய நாகரிகம் புதிய கற்காலத்தின் பிற்பகுதியிலும், உலோக காலத்தின் முற்பகுதியிலும் சிறந்தோங்கியது. பாபிலோனுக்குத் தெற்கிலுள்ள நிப்பூர் சுமேரியர்களுடைய முக்கிய நகரமாகத் திகழ்ந்தது. இங்கு தோண்டியெடுக்கப்பட்ட புதை பொருள்களிலிருந்து சுமேரியாவில் பழங்காலத்தில் நகர இராச்சியங்கள் பல இருந்தன என்று தெரிகிறது. இவை அடிக்கடி தம்முள் போரிட்டு வந்தன. கோனாட்சி தோன்றுவதற்கு முன் சுமேரிய நகரங்கள் மத குருமார்களால் ஆளப்பட்டன. மன்னர்களாட்சியிலும் குருமார்கள் மிக்க செல்வாக்குடனிருந்தனர்.

சுமேரியர்கள் பல கடவுளரை வழிபட்டனர். என்லிஸ் அவர்களுடைய முக்கிய தெய்வமாம். நிப்பூரிலும் பிற நகரங்களிலும் இத்தெய்வத்திற்குப் பல கோயில்கள் கட்டப்பட்டன. விண்மீன்கள், கோளகள (கிரகங்கள்) ஆகியவற்றின் நிலைகளை ஆராய்ந்து வருங்காலத்தை ஊகித்தறியும் திறமை குருமார்களுக்கிருந்தது. எகிப்தியரைப் போன்றே சுமேரியரும் மரணத்தின் பின் வாழ்க்கை உண்டென நம்பினர். இறந்தோரை வீட்டுத் தரையின் கீழ்ப் புதைத்தனர். அரசர்கள் அழகிய அறைகளில் ஏவலாளர், ஆயுதங்கள், அணிகலன்கள் போன்றவற்றுடன் புதைக்கப்பட்டனர். ஊர் என்னுமிடத்தில் இத்தகைய கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சுமேரியர்கள் வேளாண்மையிலும், பல்வகைக் கைத்தொழில்களிலும் முன்னேற்றம் எய்தியிருந்தனர். பார்லியும், பேரீச்சம்பழமும் பயிரிடப்பட்டன. எருதுகளாலும், கழுதைகளாலும் இழுக்கப்பட்ட வண்டிகள் பயன்படுத்தப்பட்டன, அவர்கள் கால்வாய்களை வெட்டியும், அணைகளைக் கட்டியும் ஆற்றுநீரைப் பயன்படுத்தி விவசாயத்தைப் பெருக்கினர். கண்ணாடிகள், செப்பினால் ஆன பாத்திரங்கள், விளக்குகள், கத்திகள் தங்கம், வெள்ளி இவற்றாலான அணிகலன்கள் முதலிய எண்ணற்ற பொருள்கள் பயன்படுத்தப்பட்டன.

மட்பாண்டத் தொழிலில் இவர்கள் திறமைமிக்கவர்கள். களிமண்ணால் செய்யப்பட்டுக் காய்ந்த கற்களைக் கொண்டு வீடுகளைக் கட்டினர். சுமேரியர் இந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

சமுதாயத்தில் நால்வகைச் சாதிகள் இருந்தன. அரசரும், பிரபுக்களும் உயர் வகுப்பினர், குருமார்களும், அரசாங்க அலுவலாளரும் அடுத்தவகுப்பினர். வணிகர், நிலக்கிழார், தொழிலாளர் ஆகியோர் நடுத்தர வகுப்பினர். அடிமைகள் கீழ் வகுப்பினர். பெண்கள் மதிப்புடன் நடத்தப்பட்டனர். சுமேரியர் முதலில் களிமண்மீது சித்திரங்களைத் தீட்டித் தம் கருத்துக்களை வெளியிட்டனர். பின்னர் 350 வகைச் சின்னங்களைக் கொண்ட ஆப்பு வடிவமான எழுத்துக்களைக் கண்டுபிடித்தனர். , இவை மண் பலகைகளில் எழுதப்பட்டன. இவர்கள் கலண்டர்களையும் தயாரித்தனர். நேரத்தையும் நாட்களையும் பாகுபடுத்த 60 எனும் எண்ணை அடிப்படையாகக் கொண்டனர்.

இவ்வளவு சிறப்புடன் பொலிந்த சுமேரியர், சுமார் கி. மு. 2750 இல் சார்கன் என்னும் மன்னன் தலைமையில் அக்கேடியர் எனும் செமிட்டிக் கூட்டத்தினரால் கைப்பற்றப்பட்டது. அக்கேடியராட்சி சுமார் 200 ஆண்டுகள் நிலவிற்று. இவர்களுக்குப் பின் சுமேரியா அமோரைட்டுகள் என்னும் ஓர் இனத்தவரால்கைப்பற்றப்பட்டது.

நன்றி
சமூக அறிவு நூல்-10

## உலகவங்கி இலங்கைக்கு 71 கோடிரூபா நிதிஉதவி

(கொழும்பு)
உலகவங்கியில் சர்வதேச அபிவிருத்தி நிதியம் 71 கோடி 20 இலட்சரூபாவையும், உலக சுற்றாடல்நிலையம் 76 கோடி ரூபாவினையும் இலங்கையின் கிராமிய பொருளாகார அபிவிருத்திக்கென வழங்கியுள்ளன.

இலங்கையின் கிராமிய பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையிலேயே இந்நிதி உதவி வழங்கப்பட்டது.

கிராம மட்டத்தில் மின்சார பயன்பாட்டை ஊக்குவிக்குமுகமாகவும் இந்நிதி பயன்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிக்கான உடன்படிக்கையினை உலகவங்கியின் இலங்கை பிரதிநிதி பீற்றர் ஹரோல் நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்தை ஆகியோர்கைச்சாத்திட்டுள்ளனர். (க-8)

## நன்றி செலுத்தும் வழிபாடு

(யாழ்ப்பாணம்)
இறையியல் மகாநாட்டின் இறுதிவழிபாடும் வண. அறிவர் டி.ரி.ஜநல்ஸ்ஸின் வாழ்க்கைக்கும் இறைபணிக்குமான நன்றி செலுத்தும் வழிபாடு நாளை மறுதினம்17 ஆம்திகதி பி.ப. 4.30 மணிக்கு மருதனார்மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கைத் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டஆயர்அதி.வண டுலிப் டீ.சிக்கேரா அருளுரை நிகழ்த்துவார். (க-03)

## வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மோட்டார் சைக்கிலும் வாகனமும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த கே. திபோப்பிளஸ் (வயது 70) மவுன்கார்மேல் வீதியாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-06)

## இராசி பலன்

15-7-2002
(ஆனி 31, திங்கள்)
பஞ்சமி மு.ப. 7.05 வரை
சஷ்டி பி.இ. 4 38 வரை
உத்தரம் பி.இ. 2.44 வரை
ராகு காலம் - 7.30 - 9.00
நல்ல நேரம் - 12.00 - 1.30
ஆனி உத்தர தரிசனம்
குமாரசஷ்டி விரதம்

**மேடம்**
எடுத்த காரியம் கைகூடும். பகைவர் நேசம், உடல் நலம் செய் தொழில் விருத்தி.

**இடபம்**
தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம், தொழில் கஷ்டம், சிநேகிதர் சந்திப்பு.

**மிதுனம்**
ரோக பயம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு, தனவரவு.

**கடகம்**
மனமகிழ்ச்சி, அன்னியர் கலந்துரையாடல், பொருள் சேர்க்கை, உல்லாசம்.

**சிங்கம்**
மாதர் நட்பு, மனச் சஞ்சலம், காரிய தாமதம், கல்வி மேன்மை.

**கன்னி**
சயன சுகம், நல்லோர் சந்திப்பு, முயற்சி கைகூடும், கற்பனை மிகுதி.

**துலாம்**
மனக்கிலேசம், காரிய அலைச்சல், அபகீர்த்தி, தன விரயம்.

**விருச்சிகம்**
நல்ல காரியம், பொருள் சேர்க்கை, சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப சுகம்.

**தனுசு**
தூரதேசச் செய்தி, அதிகாரிகள் சந்திப்பு, காரிய அனுகூலம், தொழில் விருத்தி

**மகரம்**
வயிற்றுக் கோளாறு, தொழில் சிந்தை, முயற்சி தாமதம், நிலை மாற்றம்.

**கும்பம்**
பிரயாண பயம், தேவையற்ற பிரச்சினை, காரிய தாமதம், அமைதிக் குறைவு.

**மீனம்**
காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு, செய் தொழில் சிறப்பு, பிரயாண சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## தொழில் பயிற்சி நிலையம் உருவாக்க இணக்கம்

(ஈச்சமோட்டை)
அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆய்வு அபிவிருத்திக் குழுவினரிடம் யாழ்- மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் எதிர்நோக்கிவரும் குறைபாடுகளை இளைஞர்சேவை உத்தியோகத்தர்களும், மாவட்ட சம்மேளன தலைவரும் ஏனைய இளைஞர்யுவதிகளும் நேரடியாகச் சுட்டிக்காட்டினர்.

யாழில் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க போதிய கட்டடவசதி, உபகரணவசதி, நிதி வசதிஇல்லாமை பற்றியும் கணனிகளின் பற்றாக்குறை, இளைஞர் சேவை, உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறைபற்றியும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த மாசி மாதம் யாழ். விஜயம் செய்த இளைஞர் சேவைகள், விளையாட்டு அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்துக்கு விஜயம் செய்யாமை குறித்தும்,

யாழிலுள்ள இளைஞர் சேவை உத்தியோகத்தர்களுக்கு நீண்ட காலமாக பதவி உயர்வு வழங்கப்படாமை குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அக்குழுவினர், தாம் இரண்டு மாதங்களில் ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதுடன் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றையும் ஆரம்பிப்பதாகவும் உறுதி அளித்ததுடன் ஏனைய பிரச்சினையும் கவனத்தில் எடுத்து காலக்கிரமத்தில் சீர் செய்வோம் எனவும் தெரிவித்துள்ளனர். (உ-59)

## விமானப்படை வீரர் விபத்தில் மரணம்

(வவுனியா)
விமானப்படையை சேர்ந்த வீரர் ஒருவர் நேற்று முன்தினம் விபத்தில் சிக்கி பரிதாபகரமாக மரணமானதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா—மன்னார் வீதியில் அமைந்துள்ள பூவரசங்குளப்பகுதியிலேயே இந்தச் சம்பவம்இடம் பெற்றுள்ளது.

கடமையின் பொருட்டு அனுராதபுரம் சென்று விட்டு பூவரசங்குளத்திலுள்ள தனது முகாமுக்கு திரும்பிக்கொண்டிருக்கையில் ஜீப் மரத்துடன் மோதியதனால் சாரதியான அவர் அந்த இடத்திலேயேபலியானார்.

படுகாயமடைந்தமற்றொரு விமானப்படை சிப்பாய் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-8)

## 100 பாடசாலைகளுக்கு ஆய்வுகூட வசதிகள்

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் 100 பாடசாலைகளுக்கு பூரண வசதிகள் கொண்ட ஆய்வு கூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இரண்டாம் நிலைக் கல்வியை துரிதப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழே இது மேற் கொள்ளப் படவுள்ளது.

இதற்கமைய கல்விப் பொதுத் தராதர (உ/த) வகுப்புகளில் வர்த்தகம், ஓவியம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் பாடசாலைகளுக்கே இவ்வாய்வுகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (க-8)

## போலி வெளிநாட்டு முகவர் நிலையம் முற்றுகை அங்கிருந்த ஐவர் கைது

(கொழும்பு)
கிரியல்லப் பகுதியில் பல ஆண்டுகளாக இயங்கி வந்த போலி வெளிநாட்டு முகவர் நிலையம் ஒன்றினைச் சுற்றி வளைத்த பொலிஸார் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐவரைக் கைது செய்துள்ளனர்.

மத்திய கிழக்கிற்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறி இவர்கள் பலரிடம் பலகோடி ரூபாய்களை மோசடி செய்திருப்பது தெரியவந்துள்ளது.

ஏமாற்றப்பட்ட சுமார் 10 பேர் கிரியல்ல பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்களிடம் இருந்து 75 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது. (உ

கூடிய விலையில் பொருட்களை விற்ற

## வர்த்தக நிலையங்களின் வியாபார அனுமதி ரத்து

(கொழும்பு)
பாவனையாளர்களுக்கு கூடியவிலையில் பொருட்களை விற்பனை செய்த 15 வர்த்தக நிலையங்களின்வியாபாரஅனுமதிப்பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நகரின் எல்லைக்குள வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்களின் அனுமதிப்பத்திரமே இவ்வாறு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ரத்து செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் மீண்டும் வழங்கப்படாதுஎனவும்நியாயமற்றமுறையில்பாவனையாளர்களிடமிருந்துகூடுதலான பணத்தை அறவிடும் வர்த்தக நிலையங்களை கண்டு பிடிக்கநாடளாவியரீதியில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-05)

## மருந்துப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம் மாநாட்டில் தெரிவிப்பு

(கொழும்பு)
மருந்துப் பொருட்களின் விலைகள் எதிர்காலத்தில்அதிகரிக்கக் கூடுமென நேற்று நடை பெற்ற அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உற்பத்தி செலவினங்கள் அதிகரித்ததுடன் நாணய மாற்றுச் சதவீதமும் அதிகரித்ததினாலேயே இறக்குமதிசெய்யப்படும் மருந்துப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாமென கூறப்படுகின்றது. (க-5)

# வை. கோ. கைதைக் கண்டித்து
# அடையாள உண்ணாவிரதம்
## தமிழ்க்கட்சி கூட்டமைப்பு ஏற்பாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டில் போடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள ம. தி. மு. க. பொதுச் செயலர் வை. கோபாலசாமியை உடன் விடுதலை செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவறினால் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை வவுனியாவில் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டிப்பதாக ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் குறித்துதமிழ்க் கட்சிக்கூட்டமைப்புஇன்றைய தினம் இலங்கைக்கான இந்தியத் தூதுவரையும் சந்தித்துப் பேசவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

வை. கோ. கைது தொடர்பாக கடந்த வெள்ளியன்று அவசரமாகக் கூடிய தமிழ் கட்சிக் கூட்டமைப்பு மேற்படி தீர்மானங்களை எடுத்துள்ளது. (உ)

## சுவாமி விவேகானந்தர் திருவுருவப்படம் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு விவேகானந்தா சபையின நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி சுவாமி விவேகானந்தரின் திருவுநவப் படம் பருத்தித்துறை தம்பசிட்டி, அமெரிக்கமிஷன் பாடசாலையில்திரைநீக்கம்செய்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில்பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தாகலந்து கொண்டு நூலகத்திற்கு கதை மலர்களை அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

பாடசாலை அதிபர் அ. மாணிக்கவாசகர் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படத்தை திரை நீக்கமசெய்து வைப்பார். (ஷ)

## 36 சட்ட மூலங்கள் விரைவில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

நாட்டின்பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 36 புதிய சட்ட மூலங்கள் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சர்ப்பிக்கப்படவுள்ளதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவற்றை நிறைவேற்றும் பொருட்டு விவாதிக்க பாராளுமன்றத்தை தொடர்ச்சியாக கூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அனைத்து பிரேரணைகளும் கட்சித் தலைவர்களுக்கான அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, மாகாண சபைகளில் இடம்பெற்றநிதி மோசடிகள் குறித்து உள்ளூராட்சி மன்ற அமைச்சரின பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிடம் தெரிவிப்பது என்றும,

அரச சேவைகள் மக்களுக்கு சென்றடைகின்றனவா என்பது குறித்து சகல பிரதேச சபை உறுப்பினர்களையும் இணைத்து கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது (உ-8)

## நிலவும் நிதி நெருக்கடியால் அரசசார்பற்ற இணைய செயற்பாடுகள் மந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செயற்பாடுகளைத் தீவிரப் படுத்துவதற்கு போதிய நிதிவசதிகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து இவ் இணையத்திற்கு வெளி நாட்டு நிறுவனங்களின் உதவிகிடைத்து வந்தது.

ஆனால், தற்போது அவை தமது உதவிகளை நிறுத்தி விட்டன.

இதனால் தமது செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஷ-6)

## பொலிஸ் ஆணைக்குழு சட்டமூலம் பாராளுமன்றில்

(கொழும்பு)

சுதந்திர பொலிஸ் ஆணைக் குழு, சுதந்திர தேர்தல் ஆணைக்குழு ஆகியன அமைப்பதற்கான சட்டமூலங்கள் வெகு விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இவ் இரண்டு ஆணைக் குழுக்களை அமைப்பதற்கான அனைத்து செயற்பாடுகளும் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு புதிய தேர்தல் முறையொன்றினைக் கொண்டுவரவுள்ளது. இதற்கமையவேஇவ் வாணைக்குழு அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-8)

## வடமராட்சி கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடமுடியாத அவலம் தொடர்கிறது

(திருநெல்வேலி)

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீன்பிடி வள்ளங்களின் அச்சுறுத்தல் காரணமாக அண்மையில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் பலர் தொழிலில் ஈடுபடாது கரை திரும்பியுள்ளனர்.

இந்தியமீன்பிடி ரோலர்கள் மீன்பிடி வலைகளை அறுத்துச் செல்வதனாலும் அச்சுறுத்தல் காரணமாகவுமே கடந்தவெவ்ளிக்கிழமைமாலை இவர்கள் கரை திரும்பினர். (த-43)

## பாராட்டு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டிருப்பினும், யாழ். மாவட்டதிலுள்ளபல சங்கங்கள்பொருட்கள், சேவைகள், கொள்வனவு விற்பனவு என்ற வசதிக்குள் முடங்கிவிட கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம தனது கரங்களை அகல விரித்து சமூக நற்பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றமை பாராட்டுக்குரியது

மேற்படி சங்கத்தில் கூட்டுறவு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதை முன்னிட்டு 'சலனசித்திரம்' அமைப்பின் வடமராட்சி பிரதேசக் கிளை அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களிலும் பலசமூகமுன்னேற்றம்சார்ந்த நற்பணிகளை பல் வேறுபட்ட துறைகளிலும் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு என்று அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஷ-106)

## வெலிக்கடை சிறைக் கைதிகள் குழு மோதல்
### 5 பேர் காயம்

(கொழும்பு)

வெலிக்கடைச்சிறைச்சாலை கைதிகளுக்கிடையே ஏற்பட்ட கோஷ்டிமோதலில் 5 கைதிகள் காயமடைந்துள்ளனர்.

அண்மையில் இடம் பெற்ற இம் மோதலில் பாதாள உலக கோஷ்டியை சேர்ந்தவர்களும் காயமடைந்துள்ளனர் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்தவர்கள் அனைவரும் சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், இது தொடர்பான பூரண விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இக் கோஷ்டி மோதல் ஏற்பட்டதற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லைஎன சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

## ஆனி உத்தர விழாவும் நூல் வெளியீடும

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலை சைவ மாணவர் மன்றம் நகுலேஸ்வர ஆலய அனுசரணையுடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு திருமதி கோதை நகுலராஜா தலைமையில் ஆனி உத்தர விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் போது பணடிதர் சி. அப்புத்துரை எழுதிய 'நகுலேஸ்வர வரலாறும் நான்பணிமாலையும்' என்னும் நூல்வெளியீடும் இடம்பெறவுள்ளது. (உ-8)

## வர்த்தக ஸ்தாபனங்களில் விலைப்பட்டியல் வைக்க அரச அதிபர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வர்த்தகர்களும் தம்மிடமுள்ள விற்பனைப் பொருட்களுக்கான மொத்த, சில்லறை விற்பனை விலைகளை எழுதிக் காட்சிப்படுத்துமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், யாழ். நகரிலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் உள்ள கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் பாவனைப் பொருட்கள் பலவற்றின் விற்பனை விலைகள் காட்சிக்குட்படுத்தபபடாமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பாவனைப் பொருட்களுக்கான விற்பனை விலைகளைப் பாவனையாளர்களுக்கு காட்சிக்கு வைத்தல் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் படி முக்கியமானவொரு கடமையாகும்.

மேற்படி விடயத்தினை நடைமுறைப்படுத்தாதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஷ)

## பிரதமரின் அமெ.பயணம் முடிவுற்றதும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஜனாதிபதி சுற்றுப்பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்க ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை விரைவில் மேற்கொளளவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் 19 ஆம் திகதி அமெரிக்கா புறப்படும் பிரதமர், தனது விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் இவரது பயணம் அமையும் என்றும்,

அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் இப் பயணத்தில் அடங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அரசியல் நிலைவரங்கள் மற்றும் பொ. ஐ. மு பாராளுமன்ற உறுப்பினர்கள். கைதுசெய்யப்படுவது, குற்றப்புலனாய்வு விசாரணைகளுக்குட்படுத்துவது ஆகிய தொடர்பாக இந் நாடுகளின் முக்கிய தரப்புகளுடன் ஜனாதிபதி பேச்சுக்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## கண்காணிப்புக் குழு யாழ். அலுவலகத்தில் மேலும் ஒருவர் பணி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டகண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு மேலும் ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி இணைக்கப்பட்டுள்ளார்.

டென்மார்க்கைச் சேர்ந்த ஒலேபிறவுண்டன் என்பவரே புதிதாககண்காணிப்புப் பணியில் இங்குஇணைந்துள்ளார்.

இவருடன் 4 வெளிநாட்டு பிரதிநிதிகள் யாழ். மாவட்டக்கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## தமிழ் இளைஞர்கள் மீது துப்பாக்கிச் சூடு
### ஒருவர் பலி; ஒருவர் காயம்

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை ஜிந்துப்பிட்டி வீதியில் தமிழ் இளைஞர் ஒருவர் இனத் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் மற்றொரு தமிழ் இளைஞர் காயமடைந்துள்ளார்.

கல்முனையை சேர்ந்த இவ்விரு இளைஞர்களும் ஜிந்துப்பிட்டி வீதியில் கடந்தவெள்ளிக்கிழமை கதைத்துக்கொண்டிருந்த போது அவ் வீதியால் முச்சக்கர வண்டியில் வந்த நபர்கள் கைத் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பிச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது

இராமகிருஷ்ணன் பரஞ்சோதி என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவர் ரெஜினோல்ட் என்ற மற்றைய இளைஞர் கொட்டாஞ்சேனை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (உ-8)

## நெருந்தீவு உப-தபாலகத்திற்கு தொலைபேசி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுமேற்குஉப-தபாலகத்திற்கு புதிய தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை நெடுந்தீவு கிழக்குப்பகுதிக்குச் சென்றே இப் பகுதிமக்கள் தொலைபேசி வசதிபெற்று வந்தனர். தற்போது தமது பகுதியிலேயே இவ் வசதி ஏற்படுத்தப்பட்டது குறித்து அப்பகுதிமக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (க-250)

## நெருந்தீவில் கிரிக்கெற் சுற்றுப்போட்டி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு ஐக்கிய தீப சனசமூக நிலையத்தினரால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி, பொது அறிவுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அமரத்துவம் அடைந்த ஏ. நடராசா (பழனி), ப. சுந்தரதாஸ் (பாபு) ஆகியோர் நினைவாக கிரிக்கெட் மற்றும் பொது அறிவுப்போட்டிகள் நடைபெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-250)

# தலைவர் பிரபாவிடம் நேரடிப் பயிற்சி பெற்ற வீரத் தளபதி லெப் . சாள்ஸ் அன்ரனி

## தமிழீழக் காற்றோடு அவன் உயிர் கலந்து இன்று 19 வருடங்கள்

சாள்ஸ் அன்ரனி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். தலைசிறந்த கெரில்லா வீரன். திருமலையில் பிறந்த இந்த தியாகச் செம்மல் சிங்கள இனவெறி ஆட்சியாளர்களின் கொடுமைகளையும், ஒடுக்குமுறைகளையும் தன் சிறு வயதிலிருந்தே கண்டுகொண்டான். அதற்கெதிராய்க் கிளர்ந்தான்.

சிங்களத்தின் திட்டமிட்ட குடியேற்றங்களும் கடற்படை, விமானப்படை, இராணுவம், பொலிஸ், காடையர் குழு எனப் பல்வேறு பெயர்களில் சிங்களப் பேரினவாதிகளால் திருமலை மண் சூறையாடப்பட்டுக் கபளீகரம் செய்யப்பட்டதும் அல்லாமல், அங்கு வாழ்ந்த மக்கள் தமது பூர்வீக நிலைகளிலேயே அகதிகளாக்கப்பட்டதும், கொல்லப் பட்டதும் வணக்கஸ்தலங்கள் தாக்கப்பட்டதும், சாள்ஸ் அன்ரனியின் மனதில் ஆறாத வடுவை ஏற்படுத்தியது. இந்த வடு அவனுக்குச் சிங்கள இனவெறிக்கு எதிராகப் போராடும் உந்து சக்தியைக் கொடுத்தது.

தனது பள்ளி நாட்களிலேயே சிங்கள இனவெறிக்கு எதிரான போராட்டத்தினை ஆரம்பித்திருந்தவன்.எவருடைய உதவியுமின்றித் தனித்தே செயற்பட்டு வந்தான்.

### *சிங்களத் தேசியக் கொடி எரிந்தது*

1979ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொண்டு வரப்பட்ட சிறிலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் அடிப்படையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா பதவி ஏற்கும் விழாவினைச் சிங்கள அரசு தமிழீழம் எங்கும் அமர்க்களமாகக் கொண்டாட முடிவு செய்தது. இந்த வைபவத்தினையொட்டி திருமலை இந்துக்கல்லூரியில் சிறிலங்காவின் தேசியக் கொடியேற்றல் நிகழ்வும் வேறு சில நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தவேளையில் தனக்கே உரிய திறமையைப் பயன்படுத்தி பொஸ்பரஸ் என்னும் இரசாயனப் பொருளை அத்தேசிய கொடியினுள் மறைத்து வைத்தான். தேசியக் கொடி ஏற்றப்படும் போது பொஸ்பரசின் செயற்பாட்டால் கொடி எரிந்த சாம்பலாகியது.

தனது தனிமனித செயற்பாடானது சிங்கள அரச அடக்குமுறை இயந்திரத்தை எதிர்ப்பதற்குப் போதுமானதாக இல்லையென்பதை உணர்ந்த அவன் புரட்சிகர இயக்கத்தில் இணைந்து கொண்டான்.

### *தலைவரிடம் நேரடி ஆயுதப் பயிற்சி*

சாள்ஸ் அன்ரனி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையும் போது ஒரு சில உறுப்பினர்களையே இயக்கம் கொண்டிருந்தது. தலைவர் அவர்களிடம் நேரடியாக ஆயுதப் பயிற்சியைப் பெற்ற சாள்ஸ் அன்ரனி அன்றிலிருந்து தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு மிகவும் நம்பிக்கையாகவும், விசுவாசமாகவும் திகழ்ந்தான். ஒரு கெரில்லா வீரனுக்குரிய ஒழுக்கம், கட்டுப்பாடு, சுயநம்பிக்கை, இலட்சியப் பற்று என்பவற்றைப் பேணுவதில் அவன் காட்டிய ஆர்வம் அசாத்தியமானது. அந்த வகையில் தலைவர் அவர்களுக்கும் பெரும் நம்பிக்கைக்குரியவனாக விளங்கினான்.

சாள்ஸ் அன்ரனியின் போர் நுணுக்கம், ஆற்றல் என்பன ஒரு சிறந்த கெரில்லாத் தலைவனாக அவனை மாற்றியது. குறுகியகாலப் போர் வாழ்வில் அவன் சாதித்தது ஏராளம்.

1981ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும், புலிகளை இல்லாமல் செய்வதற்குமாகச் சிறிலங்கா அரசு பிரிகேடியர் வீரதுங்காவை நியமித்தது. பிரிகேடியர் வீரதுங்கா யாழ் வந்து தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முன்பே தளபதி சாள்ஸ் அன்ரனி தலைமையில் புலிகள் களத்தில் குதித்தனர். அக்டோபர் 15 ஆம் நாள் யாழ் கஸ்தூரியார் வீதியில் வைத்து இரண்டு சிறிலங்கா இராணுவத்தினரை புலிகள் சுட்டுக் கொன்றதுடன் அவர்களின் போர்க் கருவிகளையும் கையகப்படுத்திக் கொண்டனர். சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரான புலிகளின் முதலாவது தாக்குதல் என வரலாறு அதைக் குறிப்பெடுத்துக் கொண்டது. அதைத் தலைமையேற்று நடத்தியவன் என்ற வரலாற்றுப் புகழை எங்கள் முன்னோடி சாள்ஸ் அன்ரனி பெற்றுக்கொண்டான்.



### தளபதியாக நியமனம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் பிரிவு 1982ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட போது தளபதியாக சாள்ஸ் அன்ரனி தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

1982 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனா இரண்டாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தேர்தல் பிரசாரத்திற்காக யாழ் வந்திருந்தவேளை புலிகள் ஓர் எதிர்ப்பைக் கொடுக்க எண்ணினர். காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து ரோந்து சென்ற வாகனத் தொடர் மீது பொன்னாலைப் பகுதியில் வைத்து புலிகள் தாக்குதல் நடத்தினர். துரதிர்ஷ்டவசமாக அந்தத் தாக்குதலிலிருந்து கடற்படையினர் உயிர் தப்பிக் கொண்ட போதும அன்றைய அரசியல் இராணுவ சூழ்நிலையில் இத்தாக்குதலானது பாரிய தாக்கத்தை உண்டு பணண்ணியமை குறிப்பிடப்பட்டது.

அதன் பின்னர் அக்டோபர் 27ஆம் திகதி தளபதி சாள்ஸ் அன்ரனி தலைமையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தினுள் உட்புகுந்த அணியினர் நடத்திய தாக்குதலில் பல பொலிஸார் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். 33இற்கும் மேற்பட்ட ஆயுதப்போர்க் கருவிகள்,

### லெப் . சாள்ஸின் உயிரற்ற உடல் சிங்களப் படையை அச்சுறுத்தியது

வெடிப்பொருட்கள் கையகப்படுத்தப் பட்டன. அன்றைய காலகட்டத்தில் இந்த ஆயுதங்கள் தமிழரின் விடுதலைப் போரையே அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்வதைத் தீர்மானிக்கும் பெறுமானம் உள்ளவையாக இருந்தன. இத்தாக்குதலின் போது தளபதி சாள்ஸ் அன்ரனி காலில் காயமடைய நேர்ந்தது. சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலானது, இதுவரை காலமும் உளவுத்துறை (சீஐடி) அழிப்பு. ரோந்துப்படை அழிப்பு என இருந்த கரந்தடி இயக்கத்தினதும் இராணுவ வளர்ச்சிப்போக்கின் அடுத்த கட்டத்தைப் பறைசாற்றிய தாக்குதலாக அமைந்தது.

பின்னர் கந்தர்மடத்தில் இராணுவத்தினர் மீதான தாக்குதல், தேசத் துரோகிகள் அழிப்பு காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலையில் வெடிபொருட்கள் மீட்புத் தாக்குதல் என்று அவனது நடவடிக்கைகள் தொடர்ந்தன.

தளபதி சாள்ஸ் அன்ரனி தனது போராட்ட வாழ்வில் மூன்று தடவைகள் விழுப்புண் அடைந்து உயிராபத்தினை எதிர்நோக்கினான்.

### வீரத் தளபதியின் வீரமரணம்

மூன்றாவதாக அவர் சந்தித்த உயிராபத்து அவரின் போராட்ட வாழ்வின் இறுதி அத்தியாயங்கள் ஆகின. 15.07.1983 ஆம் ஆண்டு அவர்கள் இருந்த மறைவிடம் துரோகி ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டுச் சிங்களப் படைகளால் முற்றுகையிடப்பட்டது. எதிர்த்தாக்குதல் நடத்திய வண்ணம் முற்றுகையை உடைத்து வெளியேறிய போது தளபதி சாள்ஸ் அன்ரனி காலில்காயமடைய நேரிடுகிறது. கூட நின்ற தோழர்கள் அவரைக் காப்பாற்ற முயற்சி எடுத்த போதும் அங்கிருந்த சூழ்நிலை சாத்தியப்படாததால் எதிரிப்படைகள் மிகவும் நெருங்கிக் கொண்டிருந்தன. ஆபத்தான சூழ் நிலையை உணர்ந்து கொண்ட சாள்ஸ் அன்ரனி விரைந்து முடிவெடுக்கிறான். தன்னைச் சுட்டு விட்டு தனது ஆயுதத்தை எடுத்துக் கொண்டு தப்பிச் செல்லுமாறு கட்டளை இடுகின்றான். தோழர்கள் தடுமாறுகின்றனர். தயங்குகின்றனர். மீண்டும் கண்டிப்பான குரலில் கட்டளை பிறந்தது. தோழனின்கையில் இருந்த துப்பாக்கி எங்கள் உயரியதளபதியின் நெற்றியை ஒரு ரவை உமிழ்ந்தது. ஓய்கின்றது. தமிழீழ மண்ணின் விடுதலைக்கு வித்தாகிய பெருமையுடன் வீரத்தளபதியின் உடல் மண்ணை முத்தமிடுகின்றது. அன்று எங்கள் முதல் தளபதியின் நெற்றியிலிருந்து வடிந்த குருதி பெரும் வீரப்பிரவாகத்தின் ஊற்றாய் மீசாலை மண்ணை நனைக்கிறது. தோழர்கள் விரைவாக பின் வாங்குகின்றனர். சற்று நேரத்தில் ஆனந்தனும் சுடப்பட தன் தளபதியின் முடிவினையே தானும் வரித்துக் கொண்டான். எஞ்சிய மற்றத் தோழர்கள் துப்பாக்கிகளுடன் காயங்களுடனும் தளம்திரும்பினர்.

### தளபதிக்காக தலைவன் கொடுத்த பதிலடி

தளபதி சாள்ஸ் அன்ரனியின் உடலைக் கைப்பற்றிய சிங்களத்திற்கு அவரது உயிரற்ற உடலே அச்சுறுத்தலாக அமைந்தது. அவரது தாயார் பல தடவைகள் கேட்டும் உடல் ஒப்படைக்கப்படவில்லை. உடல் கைப்பற்றப்பட்டிருந்த யாழ் மருத்துவமனை பெரும் தொகை இராணுவத்தினரால் காவல் வைக்கப்பட்டிருந்தது. இறுதியில் ஊர்காவற்றுறைக்குச் செல்லும் பிரதான வீதியில் அல்லைப்பிட்டியை அண்டிய கடற் கரை ஓரத்தில் சிங்களப் பேய்கள் சுற்றி நிற்க எங்கள் தளபதியின் பூதவுடல் தீயில் சங்கமமாகித் தமிழீழக் காற்றுடன் கலந்தது. விடுதலைப்புலிகளின் தாக்குதல் தளபதியை அழித்து விட்டோம் எனத் திமிருடன் நிமிர்ந்த சிங்களப் படைக்கு தளபதியைத் தன் தோழனை இழந்து எங்கள் தலைவன் சாள்ஸ் அன்ரனியின் உடையணிந்தே பதிலடிக்குப் புறப்பட்டார். ஒருவார இடைவெளியில் திருநெல்வேலியில் புயல் வீசியது. போராட்டவரலாற்றில் அது ஒரு பெரும்புயல். தன் தளபதியை பறித்த எதிரிக்கு தலைவன்



### சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி

கொடுத்த பதிலடி அதுவே வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்தது. 23.07.1983அன்றைய திருநெல்வேலிக் கண்ணிவெடித் தாக்குதல்.

தளபதி சாள்ஸ் அன்ரனி ஓர் உன்னதமான போராளி எமது இனத்தின் விடுதலைக்காக இயக்கத்தையும், ஆயுதத்தையும் உயிரிலும் மேலாக நேசித்தான். இரகசியத்தைக்காக்கவும், போராட்டத்தின் ஆயுத்தைக்காக்கவும், தமிழரின் கௌரவத்தைக்காக்கவும், உயிரைவிட்டான். இந்த உன்னத வீரனின் தியாகமும், அர்ப்பணிப்பும் விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு புலிவீரர்களுக்கும் வழிகாட்டி நிற்கிறது.

தான் கொண்ட இலட்சிய உறுதியின் சாட்சியாய் தன் தோழனின் துப்பாக்கி ரவையிலிருந்து சாவை அணைத்துக் கொண்ட அந்த நொடிப் பொழுதில் அவனின் நெற்றியிலிருந்து பெருகிய குருதியின் வீரப்பிரவாவகமாய் அவன் பெயர் சொல்லி எம் படையணி நிமிர்ந்தது வீரத் தலைவன் வழியில் தமிழனின் விடுதலையை வென்றெடுக்க.

---

### ~அப்துல்கலாம் ஜனாதிபதியாவது உறுதி~

# இரண்டு பிரமச்சாரிகளின் ஆட்சியில் பாரத தேசம் வல்லமை படைக்கும்

உலகின் மிகச் சிறந்த ஜனநாயக நாடு என்ற பெருமை இந்தியா



வுக்கு உண்டு. பல்லின மக்கள் கூடி வாழ்கின்ற நாடாக வந்தேமாதரம் என்று பாரதத் தாய்க்கு வணக்கம் செலுத்துகின்ற உயர்ந்த பண்பு அங்கு காணப்படுகிறது. பாரதப் பூமிக்கு ஆபத்து என்றால் அனைத்துக் கட்சிகளும் கூடி நிலைமையை ஆராய்கின்ற - ஆளும் கட்சி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் தமது பூரண ஆதரவை வழங்குகின்ற உயரிய தாயகப்பற்று இந்திய தேசத்தில் உண்டு.

இந்து தர்மத்தை, அறக்கருத்துக்களை உலகுக்குத் தந்த இந்தியாவின் அதி உயர் கௌரவப் பதவியாக இருப்பது குடியரசுத் தலைவர் பதவியாகும் நாட்டின் ஆட்சிகளின் வாதத்தைக் கண்காணிக்கும் ஒரு நடுவராக சரியைச் சரியெனவும், பிழையைப் பிழையெனவும் சுட்டிக்காட்ட ஜனநாயத்தைக்காக்கும் காவலனாக விளங்குபவர் குடியரசுத்தலைவர்.

இனத்தால், மதத்தால், மொழியால், சாதியால், வேற்றுமை பார்க்காது, அறிவால் நேர்மையால், நடுநிலைமையால், பண்பால் உயர்ந்தோரே அப்பதவியில் நியமித்து அதிகாரம் கொடுக்கின்ற பக்குவம் இந்தியா தேசத்திடம் உண்டு.

**க.சதீபன்**

இந்தியாவின் வரலாற்றில் குடியரசுத் தலைவர்களாக இருந்த ஒவ்வொருவரிடமும் ஏதோவொரு வகையில் தேசதத்தின் முதன்மைத்திறன் காணப்பட்டது. நேர்மையுடன் தமது பணியை அவர்கள் மேற்கொண்டார்கள். கட்சி இனம் எனச் சார்ந்து நில்லாது எங்கள் தேசம் பாரதம் என்ற மகுடவாசகத்தைக் கடைப்பிடிப்பவர்களாக இருந்தார்கள்.

அவர்களின் உயர்ந்த செயலாட்சியே பாரதத்தின் இறைமைக்கும், ஒற்றுமைக்கும் அடிநாத மாக விளங்கியது. அந்த உயரிய பதவிக்கு இன்று பாரதத்தில் தேர்தல் நடைபெறுகிறது.

தேர்தல் இன்று நடை பெறுகிறது எவ்வாறு உறுதியோ அதேபோல் குடியரசுத் தலைவராகத் தமிழகம் தந்த உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானி அப்துல் கலாம் தெரிவு செய்யப்படுவதும் உறுதியாகி விட்டது.

### *கலாமின் வாழ்க்கை*

1931ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி தமிழகத்தின் தென் கோடியில் அமைந்துள்ள இந்துக்களின் புனித யாத்திரைத் தலமான இராமேஸ் வரத்தில் அப்துல் கலாம் பிறந்தார்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த அப்துல் கலாம் தமிழ்ப் பரம்பரையின் வாரிசாக



இருப்பினும் முஸ்லிம் மதத்திற்கு

(02ம் பக்கம் பார்க்க)

# ஆனந்த நடனமாடி அகிலத்தையே ஆட்டுவிக்கும் தில்லைக் கூத்தனைத் தரிசிக்கும் ஆனிஉத்தரம்

**சிதம்பர நடராசரின் தரிசனம் காணும் ஆனிஉத்தர நன்நாள் இன்று**

ஆனி உத்தர நட்சத்திர நன்நாள நடராசப் பெருமானை வழிபடுவதற்குஉகந்த சிறந்த நாளாகும் முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் தில்லையில் நடராசரின் தரிசனத்தைக காண்பதற்கு ஆனி உத்தரநாளையே சிறப்புடையதாகக் கொண்டமை இந்நாளின் தனிப்பெருமை யாகும்.

ஐந்தொழில் நர்த்தனம்

உலக ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சிவகாமி சமேதரரான நடராசப் பெருமான் இப் பூவுலகின் இதயஸ்தானமாக கருதப்படும் சிதம்பரத்தில் தில்லைநடராசராகபஞ்ச கிருத்திய நர்த்தனம் புரிகின்றார்.

'ஆட்டுவித்தால்யார்ஒருவர் ஆடாதாரோ' எனும் படி படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் மறைத்தல்ஆகிய ஐந்தொழில்களையும், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் எனும் மூர்த்தங்களாகநின்று செயற்படுத்தும் எம் பெருமானின் ஆலயவிழாக்காலம் இவற்றின்அடிப்படைத் தத்துவங்களையே விளக்குகின்றன.

அபிடேகம்

இந்த விதத்திலே ஆனி உத்தர தீர்த்தவிழாவானது சிதம்பரத்திலே நடராசப் பெருமானுக்குப் பெருவிழாவாக நடத்தப்படுகின்றது. இத்தினத்திலே அதிகாலையில் நடைபெறும் அபிடேகமானது பார்ப்போரைப் பக்தியாற் பரவசப்படுத்தும் கண்கொள்ளாக்காட்சியாகும்.

இம்மைக்கும், மறுமைக்கும் பேரின்ப மூட்டுவதான ஆனி உத்திர தரிசன வழிபாடு இந்துக்களுக்குப் பெரும்புண்ணியமாகக் கருதப்படுகின்றது சிதம்பரத்திலே தில்லை நடராசப் பெருமான் விழாக் காணும் இந்நாளில், நடராசப் பெருமான் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இடங்களிலெல்லாம் விசேட அபிடேகங்கள் பூசைகள், விழாக்கள் நடைபெறுகின்றன.

மனிதப்பிறவி வேண்டியதே ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோவிலிலும் அபிடேக ஆராதனைகளும், பெருவிழாக்களும் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஆனி உத்தரத்தில் நடராசப்பெருமானின் தரிசனம் காண்பதற்காகவேமனி

**நீர்வைமணி**

தப் ிறவியும் வேண்டும். என அப்பர் பின்வருமாறு அழகாகப் பாடியுள்ளார்.

'னித்தபுருவமும் கொவ்வைச்செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்தசடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப்பிறவியும்வேண்டுவதே இந்த மானிலத்தே'

எனவே நாமும் தொல்லைகள்தீர்ந்து நன்மைகள் அடைந்திடத் தில்லைக் காட்சிபோல் வேறில்லைக் காட்சிஎன்பதை மனத்திருத்தி இந்த ஆனி உத்தர நன்நாளில் நடராசப் பெருமானை வழிபட்டு நற்பேறடைவோமாக.

## பிரமுகர்கள் விஜயம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் 50 வீடுகள் அமைக்கும் திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளும் முகமாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனப் பிரமுகர்கள் அங்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

பொறியியலாளர் எஸ்.சிறிக்காந்தா, கணக்காளர் எஸ். ஞானராசா ஆகியோரே ஜேர்மன் விஜயம் மேற்கொண்ட பிரமுகர்களாவர். (க.250)

## பசுவின் சிறு நீர் ஒரு போத்தல் 500 ரூபா

**இந்தியாவில் இப்படியும் விற்பனை**

(புதுடில்லி)

எயிட்ஸ், புற்றுநோய் ஆகிய விபாதிகளுக்கென சிறந்த மருந்தெனக் கூறி பசுவின் சிறுநீரை ஒரு போத்தல் 500 ரூபா விற்ற இநவரை இந்தியப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

எயிட்ஸ் மருந்தெனக் கூறி விற்கப்படும் இந்த மோசடியை இந்திய அரச மருந்துக் கட்டுப்பாட்டாளர் பி. கே. சர்க்கார் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இம்மருந்தை நோயாளிகள் வாங்குவதற்கு முன்னர் சுய விருப்பின் பேரிலேயே இம் மருந்தை வாங்குகின்றோம் என எழுத்து மூலம் உறுதி உரையை விபாபாரிகள் பெற்றிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (-503)

## பெர்னாண்டஸ்- வை.கோ நாளை முக்கிய சந்திப்பு

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் போடோ தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக செயலாளர் வை.கோபாலசாமியைஇந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நாளை சந்திக்கவுள்ளார் என இந்திய பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த போது சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் ஒரு போதும் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரப்போவதில்லை என்றும் தனது கைது விவகாரத்தை மக்கள் முன்னிலையில் முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும் வை.கோபாலசாமி தெரிவித்திருப்பது ஏற்கனவே தெரிந்ததே. (க-8)

## சாரதி அனுமதிப்பத்திரம் ஒருவார காலத்துள்

**திணைக்களம் அறிவிப்பு**

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரங்கள் இன்னும்ஒருவாரகாலத்தினுள் வழங்கஏற்பாடுகள்செய்யப்பட்டு வருவதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது வழங்கப்பட்டு வரும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களில் பல மோசடிகள் இடம்பெற்றுவருவதாகவும் இதனால் சாரதி அனுமதி எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு ஒருவார காலத்தினுள்சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது முதற் கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டு படிப்படியாக ஏனையஇடங்களுக்கு அமுல் செய்யப்படவுள்ளது. (க-5)

## இன்று குடியரசு தலைவர் தேர்தல்

(புதுடில்லி)

இன்று இந்தியாவில் பன்னிரண்டாவது குடியரசுத் தலைவரை தெரிவதற்கான தேர்தல் நடைபெறவுள்ளது. (க-3)

## பயங்கரவாத ஒழிப்புக்கு இந்தியா முழு ஆதரவு

**வாஷிங்டன் மாநாட்டில் அறிவிப்பு**

(வாஷிங்டன்)

அல்கெய்டா அமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து இயக்கங்களின் மேல் எடுக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தன்னாலான முழு ஆதரவையும் வழங்கப் போவதாக இந்தியா அறிவித்துள்ளது.

வாஷிங்டனில் அண்மையில் நடைபெற்றபயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைப் பணிக்குழுவின் ஐந்தாவது மாநாட்டிலேயே இந்தியா இவ்வாறு அறிவித்துள்ளது.

இதன் போது அமெரிக்கா சார்பாக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பிரான்சில் ரெக்ஸ்ரைலரும் இந்தியா சார்பாக வெளியுறவு அமைச்சகத்தின் இணைச்செயலர் ஜெயன் பிரசாந்தும் கலந்து கொண்டனர்.

அத்துடன், பயங்கரவாதிகள் சம்மந்தமான தகவல்களை வழங்குதல், இராணுவ ரீதியில் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் ஆகிய விடயங்களில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, அண்மையில் நேபாளத்துடனும் இந்தியா மேற்படி விடயங்களில் தொடர்புகளை வலுப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

## காஷ்மீரில் ஹிந்துப் பெண்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் தீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து தற்காத்துக்கொள்வதற்காகஅங்குள்ள ஹிந்துப் பெண்களுக்கு தற்காப்புப் பயிற்சியை வழங்கும் நடவடிக்கைகளை ராஷ்டிரிய சுவயம் சேவக்சங் இயக்கம் ஆரம்பித்துள்ளது.

கத்தி மற்றும் துப்பாக்கிகள் உட்பட பல்வேறு ஆயுதங்களைப் பாவிப்பது குறித்து இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

நகர்ப்புற பெண்களைவிட கிராமப்புற பெண்களேபயிற்சியில் ஆர்வம் காட்டிவருவதாக அவ்வியக்கம் தெரிவித்துள்ளது. (க-3)

## பாக். உல்லாசப்பயணிகள் மீது கிரனேட் தாக்குதல்

**12 பேர் படுகாயம்**

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் உல்லாசப் பயணிகள் குழு ஒன்றின் மீது நேற்று முன்தினம் நடத்திய கிரனேட் குண்டு தாக்குதலின் போது 12 பேர்படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை மாகாணத்தின் மன்செலாவுக்கு அருகில் புராதன இந்து நாகரிகத்தின் சின்னங்களை பார்வையிட்டபோதே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஜேர்மனியை சேர்ந்த 7 பேரும், அவுஸ்ரேலியாவை சேர்ந்த ஒருவரும், போகன்ஜாவை சேர்ந்த ஒருவரும், பாகிஸ்தானை சேர்ந்த மூவரும் உள்ளடங்குவர்.

இத்தாக்குதலுக்கு பொறுப்பான சூத்திரதாரிகளைகண்டு பிடிக்கும் தீவிர முயற்சிகளில் பாகிஸ்தான் பொலிஸார் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-08)

## மட்டக்களப்பில் வீரமக்கள் தினம்

(மட்டக்களப்பு)

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் 13 ஆவது வீரமக்கள் தினம் மட்டக்களப்பு கல்முனை பிரதேசத்தில் இன்று கொண்டாடப்படவுள்ளது.

1989 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் திகதி கொல்லப்பட்ட தலைவர் உமா மகேஸ்வரன் மற்றும் போராட்டத்தில் கொல்லப்பட்ட போராளிகள் நினைவாகவே இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது (க-8)

## வை. கோ. வாக்களிக்க நிபந்தனையுடன் அனுமதி

(புதுடில்லி)

வேலூர் மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்மறுமலர்ச்சிதிராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலர்வை. கோபாலசாமிக்கு இன்றுநடைபெறவுள்ள குடியரசுத் தேர்தலில் வாக்களிக்க அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அவர் குடியரசுத் தேர்தலில் தன்னைவாக்களிக்க அனுமதிக்குமாறு மனுத்தாக்கல் சய்தார்.

மேன்முறையீட்டை ஏற்றுக் கொண்ட சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எம்.கனகராஜ் மேற்படி அனுமதியை வழங்கியுள்ளார்.

ஆனால் வை.கோ வாக்களிக்கவரும் போது வெளியாரிடமோ அல்லது பத்திரிகையாளரிடமோ கதைக்கமுடியாதெனவும் அத்துடன் ம.தி.மு.க தொண்டர்கள் அவரை அணுக அனுமதிக்கப்படமாட்டார்களெனவும் உயர் நீதிமன்றம் அத்தீர்ப்பில்குறிப்பிட்டுள்ளது. (உ-19)

## அரபாத்தின் பாதுகாப்பு பிரிவு தலைவர் கைது

(ஜெருசலம்)

பலஸ்தீன ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் தலைவரை இஸ்ரேல் பொலிஸார் அண்மையில் கைது செய்துள்ளனர்.

யஸீர் அரபாத்தின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான விசேட படையணி-17 என்ற பிரிவின் தலைவரான கேணல் அப்துல்ரஹ்மான் அல்-நுபானியே கைது செய்யப்பட்டுள்ளார். (க-3)

## அமெ. வெளிநாட்டு மந்திரி ஆசிய நாடுகளுக்கு விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் இம் மாத இறுதியில் 8 ஆசிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இம் மாதம் 26 ஆம் திகதி தனது ஆசிய விஜயத்தைமேற்கொள்ளும் கொலின் பவல் இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து, மலேசியாசிங்கப்பூர், இந்தோனேசியா, புறுனைன், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு செல்லவுள்ளார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி இடம் பெற்ற அமெரிக்க வர்த்தக மையத்தின் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து ஆசியப்பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை, மற்றும் இஸ்லாமிய போராளிகள் பற்றி ஆராய்வதே இவ் விஜயத்தின் பிரதான நோக்கமாகும். (உ-8)

தேரான் தெளிவும் தெளிந்
தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்

குறள்

வலம்புரி

## சந்தேகம் வலுக்கிறது

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மிகவிரைவில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ்உடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அரச தரப்பு செய்திவெளியிட்டுள்ளது. ஒருநாட்டின் பிரதமரின் வெளிநாட்டுப் பயணம் என்பது ஏற்புடையதாக இருப்பினும், ஈழத் தமிழர்களின் விடயத்தில் நடுநிலைமைகளைக் கடைப்பிடிக்காத, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்கைக் கொண்டுள்ள அமெரிக்காவுக்கு பிரதமர் ரணில் விஜயம் செய்வது தமிழர்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது,

அரசும் - விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி சமாதான சூழ்நிலை நிலவும்போது இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் பிரதமர் ரணில் பயணங்களை மேற்கொள்வதன் உள்நோக்கம் என்னஎன்ற கேள்வி எழவே செய்யும். இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நடுவராக நோர்வே இருக்கும்போது அமெரிக்கா மற்றும் இந்தியாவின்தலையீடு இனப்பிரச்சினைக்கான தீர்வை குழப்புமே யொழிய அது நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஒருபோதும் வழி வகுக்காது,

அரசும், விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கண்காணிப்பதில் நோர்வேயின் கண்காணிப்புக்குழு ஈடுபட்டுள்ள வேளையில், புரிந்துணர்வுமீறல்கள் குறித்து கண்காணிப்புக் குழுவினரே தகவல்களை வெளியிடவேண்டும். ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் குறித்து எந்தத் தொடர்புமில்லாத இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் பலதடவைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அறிக்கைகளை வெளியிட்டுவந்துள்ளார்.

இத்தகைய நிலையில் அமெரிக்காவுக்கு பிரதமர் ரணில் விஜயம் மேற்கொள்வது சமாதான முயற்சியில் ஓர் நழுவல் போக்கு என்று கூடக் கருத இடமுண்டு,

கடந்த பொதுத்தேர்தலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அதிகாரத்தை தென்னிலங்கை மக்கள் பிரதமர் ரணிலுக்கு வழங்கியிருக்கும்போது அமெரிக்கா, இந்தியா எனத்திரிவது தேவையற்றதாகும்.

# மாருதப்புரவல்லியின் குதிரைமுகம் நீக்கிய முருகன் கோயில் கொண்ட மாவிட்டபுரம்

இன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவ ஆரம்பம்.

கதிர்காமம், திருகோணமலை, திருக்கேதீச்சரம் போன்று சிறப்புப் பெற்ற பல தலங்கள் இலங்கையில் உள்ளன. அவற்றுள் ஒன்றுமாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில், இலங்கையில் திருக்கோயில்கள் நிறைந்த பகுதியை அக்காலத்தில் கோயில் கடவை என்று அழைத்தனர். நகுலேஸ்வரம் என்றும்கீரிமலைச்சிவன் கோயில்என்றும்தற்காலத்தில் வழங்கிவரும் திருத்தலத்தை முற்காலத்தில் திருத்தம்பலேஸ்வரர் கோயில் என்று அழைத்தனர். மாவிட்டபுர தலவரலாற்றில் கீரிமலையின் சிறப்பும் பேசப்படுகிறது.

இலங்கையில் யாழ்ப்பாண நகரத்துக்கு வடக்கே பத்து மைல் தொலைவில் உள்ளது மாவிட்டபுரம். பலாலிவிமான நிலையம் மாவிட்ட புரத்திலிருந்து இரண்டுமைல் தொலைவில் உள்ளது. மாவிட்டபுரத்துக்கு மேற்கே ஒன்றரைமைல் தொலைவில்உள்ளதுகீரி மலை

### ஜமதக்கினி சாபம் பெறல்

ஜமதக்கினி முனிவர் தனது முன்னோர்களுக்குச் சிரார்த்தம் செய்ய முடிவு செய்து அதை நடத்தித் தரவேண்டும் என்று தன் குருநாதர் பிருகு முனிவரிடம் கேட்டுக்கொண்டார். சிரார்த்த தினத்தன்று எதிர்பாராத விதமாகஜமதக்கினியின் ஆச்சிரமத்திற்கு வியாச முனிவர் வந்து விட்டார். வியாசர் ஆச்சாரியர்களில் முதன்மை பெற்றவர். ஜமதக்கினிசிரார்த்த குருவாக யாரை அழைத்து உபசரிப்பது என்ற குழப்ப நிலைக்குத் தள்ளப்பட்டார். அதனால் சிரார்த்ததம் தாமதமாகியது. சீடன் தம்மை அழைத்துச் செல்ல வரத் தாமதமாவதன் காரணத்தை அறிய விரும்பிய பிருகு முனிவர் கீரியாக உருவெடுத்து ஜமதக்கினியின்ஆச்சிரமத்தில் புகுந்தார். தன்னினும் உயர்ந்த வியாசர் வந்திருந்ததை அறிந்தார். சிரார்த்தத்திற்காகச் சமைத்து வைத்திருந்த பதார்த்தங்கள் அனைத்தையும் கீரியின் உருவத்திலிருந்த பிருகு தமது வாயால் எச்சில் படுத்திய தோடு 'உனக்குஇனிக் கீரியின் முகம் உண்டாகட்டும்' என்றும் சபித்தார் பிறகு அந்தர் வாவியில் மூழ்கி தம்பலேஸ்வரப் பெருமானை வழிபட்டால் உனது கீரிமுகம் நீங்கும் என்றுசாபவிமோசனமும் கொடுத்தார்.

### பிதிர்சாபம் நீங்கும் தலம்

தாமதமாகிச் சிரார்த்தம் தொடங்கியது. பிதிர்தேவதைகள் எச்சில் படுத்தப்பட்ட உணவு வகைகளைக்கண்டுஜமதக்கினியிடம்கோபம் கொண்டனர். உனது குலம் இனி இல்லாமல் போகும் என்று சபித்தனர். தமக்குப்பின்னால் குலம் இல்லாதொழிந்தால் ஜமதக்கினி முனிவர் ந-குல முனிவர் என்று பெயர் பெற்றார். மேலும் அவர் கீரியின் முகத்தைப் பெற்றதாலும் நகுல முனிவர் (நகுலம்-கீரி) என்று அழைக்கப்பட்டார். நகுல முனிவர் கோயில் கடவைப்பகுதியில் இருந்த அந்தர் வாவியில் நீராட வந்தார் கடற்கரையில் கற்பாறைகளில் இருந்து பெருக்கெடுத்துக் கடலில் சங்கமமாகும், அந்தவாவியில்நீராடிதம்பலேசுரரைத் தரிசித்ததால் அவர் பெற்றிருந்த கீரிமுகம், பிதிர் சாபமும் நீங்கப்பெற்றார். அன்று முதல் நகுல முனிவர் வழிபட்ட அத்திருத்தலம் நகுலேஸ்வரம் என்று பெயர் பெற்றது. தமிழில் கீரிமலை என்றனர். இறைவன் நகுலேஸ்வரன், இறைவி நகுலேஸ்வரி என்று அழைக்கப்பட்டனர். இலங்கையில் பிதிர்சாபம் நீங்கும் தலமாகக் கீரிமலை திகழ்கிறது.

முன்னொருகாலத்தில் சிவபெருமான் அன்னைபார்வதியுடன் கீரிமலைச் சாரலுக்கு எழுந்தருளினார். அப்போது தேவி நீராடுவதற்கு கண்டபி நதித் தீர்த்தத்தை வரவழைத்தார். அவர் வரவழைத்த தீர்த்தமே கீரிமலையில் இன்றும் அந்தர் வாவிஊற்றாகஇருந்து வருகிறது.

### மாருதப்புரவல்லி

கலிங்கநாட்டுஇளவரசிகனக சுந்தரி அகத்தியர் வசித்து வந்த பொதிகை மலைச்சாரலில் தாம்பிரபரணித்தீர்த்தத்தில் நீராட. வந்தாள் பொதிகை மலைச்சாரலில் குதிரைமுகமுடைய ஒருவர் கடுந்தவம் இயற்றிக்கொண்டிருந்தார். அவரைக் கலிங்கத்து இளவரசி பழித்துப்பேசினார். அதைக்கேட்ட முனிவர் அடுத்த பிறவியில் உனக்குக் குதிரைமுகமும், குன்மநோயும் உண்டாகும் என்றுசபித்தார். கடல் துறைத்தீர்த்தமொன்றில் நீராடும் பொழுது கந்தப் பெருமான்திருவருளால்உனது குன்மநோயும், குதிரைமுகமும் நீங்கும் என்று அதற்குச் சாப விமோசனமும் அளித்தார். அதன்படி கனகசுந்தரி பிறவியில் குதிரைமுகத்துடன் மதுரைமன்னன் திசையுக்கிரப் பெருவழுதியின் மகளாகப் பிறந்தாள். அப்பொழுது அவள் மாருதப்புரவல்லி என்று பெயர் பெற்றாள். குன்மநோயும் வந்தடைந்தது. பல திருத்தலங்களைத் தரிசித்து தீர்த்தங்களில் நீராடி இறுதியில் ஈழநாட்டிற்குவந்தாள். அங்குள்ள சிவத்தலங்களையும், கதிர்காமம் முதலானமுருகன்தலங்களையும் தரிசித்தபின் இலங்கையின் வடக்கேயுள்ள வளவர்கோன் என்ற இடத்தில் தங்கினாள். இவ்விடம் தற்போது குமாரத்தி பள்ளம் என்று அழைக்கப்படுகிறது. அங்கிருந்து மாருதப்புரவல்லி நாள்தோறும் கீரிமலைக்குச் சென்று வரக்கூடிய தாகச் சுரங்கவழிப்பாதை ஒன்று அமைக்கப்பட்டது. குன்மநோயும் குதிரைமுகமும் பெற்றிருந்த தன்னையாரும் அறியாதபடிநாள்தோறும் சென்று கீரிமலைச்சாரல் தீர்த்தத்தில் நீராடி இறைவனையும் தரிசித்து வந்தாள். கந்தவேள் கருணையினால் மாருதப்புரவல்லியின் குதிரைமுகம் நீங்கியதோடுகுன்மமும்குணமாகியது.

### மாவிட்டபுரம்

மாருதப்புரவல்லியின் குதிரை முகம் நீங்கிய(விட்ட) திருத்தலம் என்ற பொருளில் அந்தத்தலம்'மாவிட்டபுரம்' என்று பெயர் பெற்றது. வடமொழியில் 'துரகடானன விமோசனபுரி' என்று கூறுவர். 'மா' என்றால் குதிரை என்று பொருள். தனக்குத் திருவருள் புரிந்த முருகப்பெருமானுக்கு புதிய கோயிலை நிர்மாணிக்கத் தீர்மானித்தாள் மாருதப்புரவல்லி மகளின்விருப்பத்தை மதுரை மன்னனும் விரைவில் நிறைவேற்றஆவனசெய்தான்: ஆறுமுகன், வள்ளி, தெய்வானை திருமேனிகள் தமிழ்நாட்டில் வடிக்கப்பட்டு; பூம்புகார் துறைமுகத்தின் வழியே அனுப்பிவைக்கப்பட்டன:

காங்கேயன் திருமேனி இலங்கையில் சென்று இறங்கிய அந்தத்துறையே காங்கேயன்துறை என்று அழைக்கப்பட்டு, தற்காலத்தில் காங்கேசன்துறை என்று வழங்கி வருகிறது.

மாவிட்டபுரம்முருகன்கோயிலும் கட்டிமுடிக்கப்பட்டது. மாவிட்டபுரம் ஒரு வளமான சிற்றூர். கந்தசுவாமி திருக்கோயில் சோழநாட்டுப்பாணியில் அமைந்துள்ளது. மூன்று பிரகாரங்கள். நந்தவனம், அர்த்த மண்டபம், நிருத்த மண்டபம் ஆகிய அனைத்தும் உள்ளன. மேற்குப்புறத்தில் இராஜகோபுரம் கட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு வரமுடியாத பெருமக்கள் வழிபட்டு உய்யும் வகையில் சிதம்பரேசன், சிதம்பரேஸ்வரி மூர்த்தங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. விநாயகர், வைரவர், சண்முகர், முத்துக் குமாரசுவாமி, சந்திரசேகர் ஆகிய பல மூர்த்தங்கள் இருந்தாலும், மாவிட்டபுரம் கந்தசுவாமியே பிரதான மூர்த்தியாவார் வள்ளி, தெய்வானை சமேதராக வெற்றிவேல் தாங்கி காட்சியளிக்கும் மாவை முருகன் திருமுகத்தில் அழகும் கருணையும் பொழிவதைக் காணலாம்.

### திருவிழா

சூரபத்மன் மாமர வடிவம் கொண்டான் அல்லவா? அந்த மாவடிவம் விட்டஇடமே மாவிட்டபுரம் என்றும் ஒரு வரலாறு உண்டு. அதனால் மாவை முருகன் கோயிலில் பெரிய மாமரம் ஒன்று தலவிருட்சமாக இருந்து வருகிறது. அதனைக் 'காஞ்சிமா' என்று குறிப்பிடுகின்றனர். தைபூசத் திருநாளில் சண்முகர் திருத்தேரில் பவனி வருகின்றார். ஆனி பூர்வ பட்ச சஷ்டியில் கொடியேற்றத்துடன் தொடங்கி இருபத்தைந்து நாட்களுக்குப் பெருவிழா நடைபெறுகிறது. கொடித்தம்பம்வெள்ளித்தகடுகள் வேயப்பட்டுப் பொலிவுடன் திகழ்கிறது. தைப்பூசத் திருவிழா போன்ற காலங்களில் ஆறுமுகப் பெருமானின் ஆறு திருமுகங்கட்கும் ஆறு சிவாச்சாரியர்கள் அர்ச்சனையும் தீபாராதனையும் செய்வது அரிய காட்சியாகும். ■

நன்றி
குமுதம்

## தினசரி தியானம்

### யோகம்

யோகச் சமாதியினுள்ளே யாகவிடம்
யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி
யோகச் சமாதியின் உள்ளே யுளசக்தி
யோகச் சமாதி யுகத்தவர் சித்தரே.

- திருமந்திரம்

எம்பெருமானே, உன்னை உணர்ந்து உன் சொரூபம் ஆதற்கே நான் உயிர் வாழ்ந்திருக்கிறேன்.

அரசாங்கத்தின் பிரதிநிதியாயிருந்து ஆணை செலுத்துபவனே அதிகாரி எனப் படுகிறான். தன்னைக் கடவுளின் பிரதி நிதியாக்குபவனே யோகியாகிறான். தன் செயலையெல்லாம் கடவுள் செயலாக மாற்றுவது யோகம். கருவிகரணங்களை அடக்கியாளுதலும் யோகம்: எல்லாவுயிர்களிடத்தும் பேரன்பே வடிவெடுத்திருப்பதும் யோகம். அனைத்தும் ஒரு பொருளின் பல்வேறு தோற்றங்கள் என்று அறிவது யோகம்.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## கிரிக்கெட் பார்த்துவிட்டு வீடு திரும்பியவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்ற துடுப்பாட்டத்தைப் பார்த்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ந. கஜேந்திரன், சஞ்சயன்என்பவர் (வயது14) (பொற்பதி வீதிகொக்குவில்) மோட்டார் சைக்கிளும் - சைக்கிளும் மோதியதில் தலையில் காயமடைந்தநிலையில்நேற்றுமுன் தினம் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

அதே தினம் வட்டுக் கோட்டையில் இடம்பெற்ற துடுப்பாட்டத்தை பார்த்துவிட்டு வரும்வழியில்மோட்டார்சைக்கிளில் மோதுண்ட மாணவன் ரா. பிரசாத்(வயது 16) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-16)

## இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் சைக்கிளில் பயணம் செய்த நந்தாவில் லேன் கொக்குவிலைச்சேர்ந்த எஸ். சாந்தன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-06)

### வெளியுறவு அமைச்சர்...

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதி களின் முகாம்களால்தான் இந்தியா வுக்கு பிரச்சினையாக உள்ள தெனறும், இது தொடர்பாக பாகிஸ் தான் அதிபருடன் பேசுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வெளிவிவகார அமைச்சரை கேட் டிருந்தார். இதனை அடுத்தே அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பாகிஸ்தான் அதிபருடன் சமரசம் பேசவுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தான் அதி பரைச்சந்திக்கும் அமைச்சர் டிரோன் இலங்கையில் தற்போது அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்தும் விளக்கவுள்ளார்.

இது இவ்வாறிருக்க, பாகிஸ் தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷராப் தனது பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொ ண்டு இம்மாதம் 30ம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இலங்கையில் மூன்றுநாட்கள் தங்கியிருக்கும் பாகிஸ்தான் அதிபர் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும், இலங்கைக்கும்-பாகிஸ்தானுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை செய்வது தொடர்பாகவும் ஆரா யவுள்ளதுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்துப் பேசவுள்ளார். (வ)

### பெற்றோல்...

வாழ்க்கைச் செலவைக் குறைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணிலும், நிதி அமைச் சர் கே. என் சொக்ஸியும் அண் மையில் கூறியிருந்தமைக்கேற்ப முதற்கட்டமாக எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளது.(வ)

### மத்திய கல்லூரி...

வடக்கின் மாபெரும் கிறிக்கெற் போரில் 9 வருடங்களின் பின்னர் கல்லூரி வெற்றியீட்டியதை முன்னிட்டே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (த)

### தென்மராட்சியில்...

ஆதரவாக தனங்கிளப்பு, மறவன் புலவு, கைதடி, நாவற்குழி, கோயி லாக்கண்டி இடம்பெயர்ந்தோர் சங்கம் ஆதரவு தெரிவித்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. (த-19)

### கண்காணிப்புக்குழு...

யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாக அது இருந்ததால் படகிலிருந்து வெளியேறுவதுடன் படகினை கடற்படையினரிடம் ஒப்ப டைக்குமாறும் கண்காணிப்பா ளர்கள் கூறினர்.

இதனை புலிகளின் தலைமைத் துவம் ஏற்க மறுத்ததை அடுத்து படகு புலிகளின் பகுதியை நோக்கி விரைந்தது. இந்த நேரத்தில் கண்காணிப்புக்குழு உறுப்பினர் இருவரதும் விருப்பததுக்கு மாறாக புலிகள் அவர்களை படகில் கொண்டுசென்றுள்ளனர்.

அப்படகு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கரை சேர்ந்தது. போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் இரு வரும் விடுவிக்கப்பட்டனர். கண்கா ணிப்புக்குழு உறுப்பினர்கள் முறை கேடாக நடத்தப்படுவது எதிர்பார்ப் பதற்கு மாறான பலனையே தரும். என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (வ)

### செங்கலடி...

இப் பேச்சுவார்த்தையில் இரா ணுவத் தரப்பின் பிரிகேடியர் அன் ரனீஸ், இணைப்பதிகாரி கேணல் குணசேகரா ஆகியோரும் விடுத லைப்புலிகளின் சார்பில் மட்டக் களப்பு - அம்பாறை மாவட்ட அர சியல் துறைப் பொறுப்பாளர் விசு, துரை ஆகியோரும் பங்குபற்றியி ருந்தனர்.

இன்று பாதை திறந்து வைக்கப்பட்ட பின் முதல் தடை வையாக சமாதான பஸ் ஒன்று பது ளைக்கு சென்று வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## காணாமல் போன ஆடம்பரவாகனங்கள்

**15 மீட்கப்பட்டது**

(கொழும்பு)

கடந்த பொதுஜன ஐக்கிய முன் னணி அரசின் ஆட்சிக்காலத்தில் காணாமல் போனதாகக் கூறப்பட்ட 15 ஆடம்பர வாகனங்களை குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலி சார் கண்டுபிடித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 35வாகனங்கள் காணாமல் போயுள் ளமை தொடர்பாக பட்டியல் ஒன் றைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் களிடம் கையளித்திருந்தார்.

கண்டுபிடிக்கப்பட்ட வாகனங்களில் பெரும்பாலானவை குண்டு துளைக் காத ஆடம்பர வாகனங்கள் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.(வ)

## மா விநியோகம் தாமதம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை பிறிமா மா ஆலையில் திருத்த வேலை இடம் பெறுவதால் மா விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் இரண்டு வாரங்க ளுக்கு கோதுமை மாவின் வருகை குறைவாக இருக்குமென்று எதிர் பார்க்கப்படுவதால் கட்டுப்பாட்டு டன் மா விநியோகத்தை மேற் கொள்ளுமாறும், பதுக்கல் நடவ டிக்கையில் எவரும் ஈடுபட வேண் டாமென்றும் யாழ் மாவட்ட கூட் டுறவுச் சமாசத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத் துள்ளார். (இ)


## யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்

### முக்கிய அறிவித்தல்

1. 17.07.2002 தொடக்கம் புதன்கிழமைகளில் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும்.
2. 21.07.2002 முதல் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாகக் கருதப்படும்.
3. நிலையங்கள் யாவும் காலை 7.30 மணிக்கு திறக்கப்பட்டு இரவு 8.00 மணிக்கு பூட்டப்படல் வேண்டும் (புதிய நேரம்) கிராமிய தொழில் செய்பவர்களுக்கும் ஞாயிறு விடுமுறை தினமாகக் கருதப்படும்

முக்கிய குறிப்பு:- மேல் குறிப்பிட்ட விதிமுறைகளை மீறுவோ ருக்கு 1000/= ரூபா அபராதம் விதிக்கப்படு வதுடன், பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.

நன்றி

யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்
Y.M.C.A. நிலையம்
ம் குறுக்கு வீதி
யாழ்ப்பாணம்.

அ. அல்பேட்
செயலாளர்

[5679]

## நடன முருகன் வைத்திய நிலையம்

சத்திரச் சந்தி யாழ்ப்பாணம்

**பார்வையிடும் நேரம்**

காலை 9.00 மணி – 2.00 மணி வரை
மாலை 3.30 மணி – 7.00 மணி வரை

ஞாயிறு மாலை திறக்கப்படமாட்டாது.

[5683]

## STUDY IN BANGALORE

**N.R .I INSTITUTE (BANGALORE)**

(Affiliated to Bangalore University, Approved by Govt. of Karnataka)

(Accepted by A.I.C.T.E, NewDelhi.)

**SPOT ADMISSIONS FOR THE ACADEMIC YEAR 2002 - 2003**

**BACHELOR DEGREE COURSES**

B.C.A (Bachelor of Computer Application)

B.B.M (Bachelor of Business Management)

B.H.M (Bachelor of Hotel Management)

B.Sc (Computer Science)

B.Sc (Microbiology)

Eligibility:- Minimum G.C.E(A/L)

**Contact Authorized Representative Ahilan for Information & Admissions.**

July 15th between 9.30a.m & 4.30p.m

Mr.S.K.Ahilan,
3/3, PTD Silva M. w
Station Road, Dehiwela.
T.P. 01-737428

Mr.S.K.Ahilan,
35/10, Hindu Ladies Lane,
Kantharmadam, Jaffna.
T.P:- 021 - 2941

[5685]

# VACANCIES IN FOOD CITY

யாழ். நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள பல்பொருள் அங்காடிக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.(ஆண், பெண் இருபாலாரும்)

- மேற்பார்வையாளர்கள் (Supervisors)
- விற்பனை முகாமையாளர்கள் (Sales Managers)
- கணக்காளர் (Accountant)
- கணனி இயக்குநர்கள் (Computer Operators)
- களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keepers)
- பொதி செய்வோர் (Packers)
- தொலைபேசி இயக்குநர் (Telephone Operator)
- விநியோகப் பையன்கள் (Delivery Boys)
- சிற்றூழியர்கள் (Labourers)
- விற்பனையாளர்கள் (Sales Men): Groceries, Pharmacy, Fancy Goods, Stationeries, Jewellery, Ceramics, etc
- மின்சார தொழில்நுட்பவியலாளர் (Electricians)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (Security Officers) இருபாலாரும்

தகுதியானவர்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, சுயவிபரங்கள், நிரந்தர/தற்காலிக முகவரி, தே.அ.அட்டை இலக்கம், கல்வித் தகைமை, தொழிலனுபவம் (பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) அடங்கியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**Administrative manager,
ANNAI NAGAA FOOD CITY,
175, (43), K.K.S. Road, Jaffna**

என்னும் முகவரிக்கு 31-07-2002 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

(C4663)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மைத்திரியின் வாரமலர்

பக்கங்கள் - 16

# சங்கு நாதம்

திங்கட்கிழமை (15-21.யூலை.2002)

Sankunatham

சங்கு:- 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | தொலை பேசி 3378 | நாதம்:- 20

பக்கம் -02




அரசியல் அலசல்

பக்கம்-08



மௌனத்தின் தேடல்கள்

பக்கம்-11



மகளிர் உலகம்

பக்கம்-14



சிறுவர் அரங்கம்

பக்கம்-16



சினிமாச் சிதறல்




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# புலிகளை ஒடுக்கும் பொறுப்பு அமெரிக்காவிடம் கையளிப்பு!

ஆளும் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்ற ஆரம் பகட்டத்தில் சமாதான முயற்சி யில் காட்டிய ஆர்வம் இப்போது ஸ்தம்பித்து விட்டது சிலவேளை களில் அரசின் போக்கைப் பார்க் கும்போது தேவையில்லாமல் புரிந்




துணர்வு ஒப்பந்தத்தை செய்து கொண்டோமே எனக் கவலைப்ப டுவது போலக் கூடத் தெரிகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப் பட்டபோது பிரதமர் ரணிலிடம் இருந்த சமாதான மனநிலை இப் போது மாறிவிட்டதென்பது புல னாகிறது.

### பிரதமர் ரணில் புலிகளுடன் இணங்கியது ஏன்?

பொ.ஐ.முன்னணி ஆட்சியில் இருந்தபோது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவு ஏற்படும் ஆப த்து ஏற்பட்டது. அதாவது ஐக்கி யதேசியக் கட்சியின் தலைவ ரான ரணில் விக்கிரமசிங்காவை பதவியில் இருந்து விலக்கிவிட வேண்டும் என்பதில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் திட்டமிட் டிருந்தனர். இதில் கருஜெயசூரியா, ரவிகருணாநாயக்க ஆகியோர் மும்முரமாகச் செயற்பட்டனர் இத்தகையதோர் சூழ்நிலையில் கட்சிக்குள் அதிக பெருஞ்செல் வாக்கை கொண்டிராத ரணில் விக்கிரமசிங்கா அதிர்ந்து போனார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு ரணில் விக்கிரமசிங்கா மிக நெருங்கிய உறவினராக இருந்த போதும் ஐக்கிய தேசியக் கட்சி யின் எதிர்காலத் தலைவராக ரணிலை இனங்காணவில்லை.



மாறாக காலஞ்சென்ற காமினி திஸநாயக்காவையே ஜே.ஆர் ஐக் கிய தேசியக் கட்சியின் எதிர்கா லத்தலைவராக இனங் கண்டிருந் தார்.

**விதுரன்**

அவ்வாறு காமினி சந்தர்ப்ப வசத்தால் கட்சியின் தலைவராக இருக்கமுடியாது போனால், அன்று தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த காலஞ் சென்ற லலித் அத்துலத் முத லியை தலைவராக நியமிக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் ஜே.ஆர் இடம் இருந்தது. எனினும் இத் தகைய எதிர்பார்ப்புக்கள் காலஞ் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிறேமதாசாவுக்குப் பின் னரே சாத்தியம் என்ற உண்மை யையும் ஐக்கிய தேசியக் கட்சி யின் மூத்த தலைவர்கள் உணரா மல் இல்லை. ஜே.ஆர்.ஜெயவர் த்தனாவின் சிந்தனையில் ஐ.தே கட்சியின் தலைவராக பிரேமதா ஸா வருவது தவிர்க்கமுடியாதது அதனைத் தடுக்க முற்பட்டால் கட்சி தனது மூத்த தலைவர்கள் பலரை இழக்கவேண்டி வரும் என்ற உண்மையைப் புரிந்து கொண்டிருந்தார். இதனால் பிரே மதாஸாவிடம் கட்சியை ஒப்ப டைத்து விட்டு சிலகாலம் மௌ னமாக இருப்பதென்ற முடிவை அவர் எடுத்திருந்தார்.

காலம் கனியும்வரை காத்தி ருந்த ஜே.ஆரை காலத்தின் நகர்வு தோல்வியடையச் செய்தது. லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர் ஜே.ஆரின் எதிர்பார்ப்பில் இல்லாத சம்பவங் களாக இவை நடைபெற்று முடிந் தன அதேவேளை அவரின் எதிர் பார்ப்பின் படி பிரேமதாஸாவும் குண்டுத்தாக்குதலில் கொல்லப்



பட்டார். எதிர்பார்த்ததும், எதிர் பார்க்காததும் நடந்து முடிந்தத னால் ஜே.ஆர் தனது அரசியல் வரலாற்றின் இறுதியில் படு தோல்வி கண்டுகொள்ள நீண்ட காலம் காத்திருந்த புற்று நோயும் அவருக்கு விடை கொடுத்தது.

யாரைத் தலைவராக நியமிக் கலாம் என்று ஐ.தே.கட்சி எதிர் பார்த்ததோ அவர்கள் எல்லோ ரும் அடுத்தடுத்து பிரியாவிடை பெற்றுச் செல்ல பிரேமதாஸாவு டன் கூடச்சென்ற டீ.பி.விஜயதுங் காவுக்கு கட்சியின் தலைமைப் பதவியையும் ஜனாதிபதி பதவி யையும் ஏற்கும் வாய்ப்பு கிட்டி யது யாருமே எதிர்பாராத வகை யில் டீ.பி.விஜயதுங்கா ஜனாதி பதியானார்.

அவர் ஜனாதிபதியாக இருந்து எதனையும் சாதிக்கமுடிய வில்லை ஆயினும் தனக்கும் ஒரு காலத் தில் கட்சியின் தலைமைப்பதவி கிடைக்கும் என மனதுக்குள் கற்பனை செய்து கொள்டிருந்த ரணில் விக்கிரமசிங்காவுக்கு "நம்மகாலம் அப்படியாய போச்சு" லலித், காமினி, பிரேமதாஸா என்ற தலைகள் தலைமைக் குப்பொருந்தாது போக அடுத் ததாக இருந்த நான் தலைமைப் பதவியை ஏற்கலாம் என்றால் பிரேமதாஸாவுடன் கூடப்போகாத குற்றத்துக்காக டீ.பி. விஜய துங்கா எனக்கு முன்வந்து புகுந்து விட்டார் என்ற ஆதங் கத்தை மட்டும் ரணிலுக்கு ஏற்ப டுத்தியிருந்தது.

டீ.பி.விஜயதுங்காவின் காலத் துடன் ஐ.தே.கட்சியின் ஆட்சிக் கும் விடைகொடுப்பது விதியாக இருந்தபடியால், தேர்தலில் பொ. ஐ.முன்னணியின் தலைவி திரு மதி சந்திரிகா குமாரதுங்கா வெற்றி பெற்றார்.

டீ.பியின் இனவாத கருத்து அவரை பதவி விலத்தவும், சந்தி ரிக்காவின் சமாதானக் கருத்து அவரை ஆட்சியில் அமர்த்தவும் வழிவகுத்தது. எனினும் கதிரை யைவிட்டு இலேசாக நகர்த்த முடியாத டீ.பியை ஓய்வூதியா மாக மாதம் 25ஆயிரம் ரூபாவை யும், ஒரு வீட்டையும் தானமாக வழங்கி அவரை அகற்றிவிட்டு திருமதி சந்திரிகா ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து கொண் டார்.

### ரணிலுக்கு சந்தர்ப்பம்

ஐ.தே.கட்சி 1977க்கு பின்னர் 17வருடங்கள் ஆட்சி செலுத் திய காலத்தில் தலைமைப் பதவி கிடைக்காத ரணில் விக்கி ரமசிங்காவுக்கு ஆட்சி கவிழ்ந் தபோது தலைமைப்பதவி கிடைத் தது.

அதாவது ஆட்சியில் இருக் கும்போது தலைமைப் பதவி யைப் பொறுப்பேற்பது அவ்வளவு கடினமானது அல்ல ஆனால் ஆட்சி இழந்த ஒரு கட்சிக்கு தலைமைதாங்குவது கடலில் கவிழ்ந்து போகின்ற கப்பலுக்கு கப்டனாக இருப்பது போலவே அமையும்.

எனினும் சந்தர்ப்பங்களை இழந்த ரணிலுக்கு இச் சந்தர்ப் பத்தை விட்டுக் கொடுக்கவோ, இழக்கவோ விருப்பமில்லை. அவ்வகையில் ஐ.தே.கட்சியின் தலைமை ரணிலின் கைக்கு கிட்டியது கட்சியினால் எதிர்பார்க் கப்படாத ஓர் விபத்தாகவே ரணி லுக்கு ஐ.தே.கட்சியின் தலை மைப் பதவி கிடைத்தது.

### கட்சிக்குள் எதிர்ப்பு

ரணில் விக்கிரமசிங்கா தலை மைப்பதவி ஏற்றபின்னர் கட்சிக் குள் பூசல்களும், பிளவுகளும் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உரு வாகின. இவற்றை எதிர்கொள் ளும் திராணி ரணிலுக்கு இல்லா தபோதிலும் ஐ.தே.கட்சிக்குள் இருப்பவர்களுள் ரணில் பரவா யில்லை என்ற நல்ல பெயரால் தலைமைப் பதவியை அவர் தப்ப வைத்துக் கொண்டார். அதேவே ளை தலைமைக்கு எதிராக கட் சிக்குள் ஓரணி திரண்ட போது அதனை சுமுகமாக ரணில் தீர்த் துக்கொண்டதோடு அவரச அவ சரமாக கட்சியின் பொதுச் சபை யைக் கூட்டி எதிராகத் திரண்ட வர்களை தனது கைக்குள் போட் டுக்கொண்டார். இவ்வாறு கட்சி யின் தலைமைப் பதவியை ரணில் காப்பாற்றிக் கொள்வ தற்கு இனப்பிரச்சினை சாதக மாக அமைந்தது.

விடுதலைப்புலிகளுடன் பேசி சமாதானத் தீர்வைக் காண்பதில் ஜனாதிபதி சந்திரிக்கா விட்ட தவறை சந்தர்ப்பமாகக் கொண்ட ரணில் விடுதலைப்புலிகளுடன் பேசி சமாதானத்தை காண்பேன் என்ற கருத்தை மக்கள் முன் னிலையில் வைத்தார்.

சமாதானத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்த மக்களுக்கு ரணி லின் கருத்து ஏற்புடையதாக அமைய பொதுத் தேர்தலில் ஆட் சியமைக்கும் அதிகாரத்தை மக் கள் ரணிலுக்கு வழங்கினர்.

### டாக்டர் ஜயலத்தே அடிப்படைக் காரணம்

ரணில் விக்கிரமசிங்கா பிர தமர் பதவியைப் பொறுப்பேற் பதற்கு முன்னர் அவருக்கு பெரும் நம்பிக்கைக்குரியவராக டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இருந்தார். அதேவேளை அவர் ஒரு மருத்துவர் என்ற முறையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட் டுப்பகுதியான வன்னிப் பெரு நிலப்பரப்புக்குச் சென்று அங் குள்ள மக்களுக்கு சிகிச்சையும் அளித்து வந்தார். அவரின் வன்னி விஜயம் விடுதலைப்புலி கள்- ரணில் விக்கிரமசிங்கா தொடர்பில் ஓர் நல்லுறவை ஏற் படுத்தியது. ரணிலின் ஐ.தே.முன் னணி, தேர்தலில் வெற்றி பெற் றால் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்ற செய்தியை டாக்டர் ஜயலத் மூலம் விடுத லைப்புலிகளுக்கு தெரியப்படுத் தக் கூடிய ஓர் சந்தர்ப்பம் ரணி லுக்கு ஏற்பட்டது.

டாக்டர் ஜயலத்தின் வன்னி விஜயம் குறித்து அப்போது ஆட் சியில் இருந்த பொ.ஐ.முன்னணி



கடும் எதிர்ப்புக்கள் தெரிவித்த தோடு அதனை தேர்தல் பிரசா ரத்திற்கும் பயன்படுத்தியது.

இருப்பினும் சமாதானமே ஒரே மூச்சு என்ற கொள்கையில் இறுக்கமாக இருந்த தென்னிலங் கை மக்கள் மத்தியில் பொ.ஐ. முன்னணியின் பிரச்சாரம் எடு படவில்லை. டாக்டர் ஜெயலத் ஊடாக விடுதலைப்புலிகளுக்கு ரணில் விக்கிரமசிங்கா அனுப் பிய சமாதானச் செய்தி கடந்த பொதுத் தேர்தலில் ஓர் சுமுக நிலையை ஏற்படுத்தியதோடு, ரணிலின் தலைமையிலான ஐ. தே.முன்னணி வெற்றி பெறுவதற் கும் வழிசமைத்தது.

### அமைச்சர் ஜயலத் ஒதுங்கினாரா? ஒதுக்கப்பட்டாரா?

ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைப்பதவிக்கு ஆபத்து வந் தபோது ஆபத்தில் உதவியவர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா. ரணிலுக்கும் விடுதலைப்புலிகளு க்கும் இடையே ஓர் இணைப் பாளராக செயற்படுபவர் என அர சியல் ஆய்வாளர்களினால் வர் ணிக்கப்பட்டவர் அவர். அத்தகைய நெருக்கமான உறவை பிரதமர் ரணிலுடன் கொண்டிருந்த அமைச் சா ஜயலத் ஜெயவர்த்தனா விடுதலைப்புலிகளுக்கும் அரசுக் கும் இடையே இடம்பெற்ற யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன் படிக்கையின் போது எட்ட நிற்ப தாக அரசியல் ஆய்வாளர்க ளால் சந்தேகிக்கப்பட்டது. அச் சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போல் தற்போது அமைச்சர் ஜய லத்தின் அமைதியான போக்கு சுட்டிநிற்கின்றது.

எதிர்க்கட்சியாக இருந்த போது அடிக்கடி வன்னிப் பெருநி லப்பரப்புக்கு சென்று மருத்துவ முகாம்களை நடத்திய ஜயலத் ஜயவர்த்தனா புனர்வாழ்வு அமைச்சர் பதவியை பொறுப்



பேற்றபின்னர் வன்னிக்கு செல் வதையே நிறுத்திவிட்டார். இங்கு ஜயலத்தின் வன்னி விஜயத் திற்கு பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க தடைபோட்டிருந்தாரா? அல்லது விடுதலைப்புலிகள் அமைச்சர்களின் வருகையை வி ரும்பவில்லையா? என்பது ஆய் வுக்குரியது. எதுவாயினும், அமைச்சர் ஜயலத் மீது பிரதமர் கொண்டிருந்த நம்பிக்கை குறை வடைந்துள்ளது என்பதும், விஞ் ஞானத் தொழில்நுட்ப அமைச் சர் மெலிந்த மொறகொட மீது பிரதமர் ரணிலுக்கு பூரண நம் பிக்கை உண்டென்பதும் சம கால செயற்பாடுகளில் இருந்து உணர முடிகிறது.

### பிரதமர் ரணில் அமெ. விஜயம்

இனப்பிரச்சினை விவகாரதில் அமெரிக்காவின் தலையீடு மிக உச்சமடைந்துள்ளது. இதற்கு ஐ.தே.முன்னணி அரசே முக்கிய காரணம் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந் தத்தை செய்து யுத்தநிறுத்த த்தை ஏற்படுத்திய அரசுக்கு தமிழ மக்களின் [illegible] விடயத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி இனப்பிரச் சினைக்கு நிரந்தரத் தீர்வை முன் வைக்கும் எண்ணம் இல்லைப் போல் தெரிகிறது. சமாதானப் பேச்சுவார்த்தை என்ற கதையை நீடித்துக்கொண்டு விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியில் ஒடுக் கும் முயற்சியில் அரசு மறை முகமுகமாக ஈடுபடுவது புல



னாகிறது.

இதன் ஒரு கட்டமாகவே பிர தமர் ரணில் விக்கிரமசிங்கா வின் அமெரிக்க விஜயம் அமை யப்போகிறது. அதாவது அமெரிக் காவுக்கு விஜயம் செய்து ஜனாதிபதி ஜோர்ச் புஸ்சுடன் விடுதலைப்புலிகள் குறித்து பேசுவதே பிதமரின் அமெரிக்க விஜயமாகும்.

இங்கு இனப்பிரச்சினைக்கு அரசினால் முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டத்திற்கு விடுதலைப் புலிகள் இணங்க மறுத்தால் அமெரிக்காவின் ஆயுத மற்றும் படை உதவி எவ்வாறு அமைய வேண்டும், விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கலாமா? போன்றவயே புஷ்சுடன் பிரதமர் ரணில் ஆராயப்போகும் விடயங் களாகும்.

வெளியில் சமாதான முயற்சி குறித்து பேசுவதாகக் கூறிக் கொண்டாலும் உள்ளூர விடுத லைப்புலிகளை ஒடுக்கும் பணியை அமெரிக்காவிடம் ஒப்படைப்பதே பிரதமர் ரணிலின் அமெரிக்க விஜயம் என்பது இப்போது புரி யாவிட்டாலும் காலத்தின் நகர்வு எப்போ ஒருநாள் வெளிப்படுத் தவே போகிறது.

வலம்புரி + சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா:- 17.00

# சங்க இலக்கிய ஆய்வுகளில் தனிநாயகம் அடிகளார்

பேராசிரியர்.அ.சண்முகதாஸ்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டம் பெறுவதற்காக அடிகளார் சங்க இலக்கிய ஆய்விலே ஈடுபட்டார். பண்டைத் தமிழ் இலக்கியத்தில் இயற்கைக் கோட்பாடும், விளக்கமும் என்னும் தலைப்பிலே ஆய்வு செய்து பட்டம் பெற்றார். அவருடைய ஆய்வு பலராலும் விதந்துரைக்கப்பட்டது. இந்த ஆய்வேடு Nature in ancient Tamil Poetry என்னும் நூல் வடிவில் 1952ஆம் ஆண்டு தமிழ் இலக்கியக் கழகத்தால் வெளியிடப்பட்டது. இதன் மறுபதிப்புக்கள் Nature in Tamil Poetry; Ther Classical period, Landscape and Poetry A study of Nature in Classical Tamil Poetry என்னும் பிற பெயர்களோடும் வெளியிடப் பட்டுள்ளன. இந் நூலைத்திறனாய்வு செய்த பேராசிரியர் கமில் சுவலபில் பின்வருமாறு கூறியுள்ளார்.

'பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றி இது
வரை எழுதப்பட்டவை
அனைத்தையும் இந்நூல் பலவகையிலும்
விஞ்சி நிற்கின்றது'

தமிழறியாத மாந்தர்க்குத் தமிழின் சிறப்பை உணர்த்துவதற்காகவே இந்நூலை எழுதியதாக நூலின் முன்னுரையிலே அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியங்கள், அடிகளின் தமிழ் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. இதனால் சங்க இலக்கியப் பாடல்களை பிற மொழி இலக்கியப் பாடல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பண்பும் அவரிடம் இயற்கையாகவே இருந்தது. தமிழின் சிறப்பை எடுத்துக் கூறுவதற்காக ஜப்பான் சென்றிருந்த போது இத்தகைய ஒப்பீட்டைச் செய்துள்ளார். அன்று அவர் வெளியிட்ட கருத்து இங்கு குறிப்பிட வேண்டியது.

''ஜப்பானிய மொழி திராவிட மொழி
களுடன் தொடர்புடைய
மொழியன்று. ஆயினும் தமிழைப் போல
ஒட்டு நிலை
வகுப்பினைச்சார்ந்தது. ஜப்பானியச்
செய்யுட்களில்
இறைச்சி போன்ற சில பண்புகள் உள.
நம் சங்க
இலக்கிய அகப்பாடல்களின் உரையாசிரியர்
அப்பாடல்களுக்கும்
கொளு எழுதியிருப்பது போல ஜப்பானியப்
பாடல்களுக்கும்
அந்நாட்டுப் புலவர் கொளு எழுதியுள்ளனர்.
சிறப்பாக
ஜப்பானிய இலக்கியத்தில் 'தங்க' எனப்படும்
செய்யுள்
முப்பத்தோ ரசைகளைப் பேரேல்லையாகக்
கொண்டு நம்
குறுந்தொகைச் செய்யுட்களைப் போல்
கருத்திலும் கொளுவிலும்
விளங்குகின்றது.''

ஆனால் இன்று அடிகளார் எடுத்துக் காட்டிய கருத்து ஒற்றுமை விரிவான ஆய்வுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. ஜப்பானிய சுச்சுயின் பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியரான சுசுமு ஒனோ ஜப்பானியக் கவிதைகளின் அடியமைப்பு சங்கக் கவிதைகளின் அடியமைப்புடன் பெரிதும் ஒற்றுமையுற்றிருப்பதை ஆய்வு செய்து எடுத்துக் காட்டியுள்ளார். மனோன்மணி சண்முகதாஸ் ஜப்பானியக் கவிதைகளின் பொருளமைதி சங்க இலக்கிய அகப்பாடல்களின் பொருளமைதியுடன் ஒற்றுமையுற்றிருப்பதை ஆய்வு செய்து நூல்களும், கட்டுரைகளும் வெளியிட்டுள்ளார். ஜப்பானிய மொழி திராவிட மொழிகளிலே செம்மை பெற்ற மொழியான தமிழுடன் நெருங்கிய தொடர்புடையது எனத் தனது நீண்ட கால ஆய்வு (ஏறக்குறைய 18 ஆண்டுகள்) மூலம் ஓனோ சுசுமு நிறுவியுள்ளார். அது பற்றி ஜப்பானிய மொழியிலும், ஆங்கிலத்திலும் பலநூல்களை வெளியிட்டுள்ளார்.

அடிகளார் தொட்டுச் சென்ற சங்க இலக்கிய ஜப்பானிய ஒப்பீட்டாய்வு இன்று பெரியதொரு ஆய்வாக முனைப்புடன் செய்யப்பட்டு வருகிறது. ஆய்வுத் தரவுகளுக்காகப் பல சங்க அகப் பாடல்களும் புறப் பாடல்களும், ஜப்பானிய மொழியிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இதனால் ஜப்பானிய ஆங்கில மொழியால் அன்றித் தமது சுதேச மொழியால் தமிழ்மொழியின் பழைய இலக்கியப் பாடல்களைப் படிக்க முடிகின்றது. சங்க இலக்கியம் பற்றி ஆழமான ஆய்வுக்குப் பிறமொழிப் பயிற்சியும் தேவையென்பதை அடிகளார் உணர்த்தினார்.

'*சங்க இலக்கியங்களின் சிறப்பியல்பு*' என்னும் அடிகளாருடைய கட்டுரை அவருடைய சங்க இலக்கியப் புலமையையும் ஆய்வு நெறிப்பாட்டையும்உணர்த்தி நிற்கிறது. அவருடைய உரைநடையிலே வருமாறு கூறுகிறார்.

'சங்க இலக்கியத் தண்கடல் மூழ்கி'
ஆராய்ச்சித்துறை என்னும்
அழகிய கரையின் அருமணலிலே புரண்டு
என் மீதொட்டிய சிறு
மணல் மணிகளைச் சிதறி உதவும் சிறு
தொண்டினைச் செய்த
மகிழ விழைந்தேனே யன்றி வேறல்ல பிற'

சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து இரு பட்டங்களைப் பெற்ற அடிகளார் தான் சங்க இலக்கியம் பற்றி நீண்ட காலமாகத் தொடர்ந்து ஆய்வு செய்யவில்லை என்பதையும் குறிப்பிட்டமை அவரது எழுதிய ''சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு'' என்னும் கட்டுரையில் சங்க இலக்கியங்களின் தனித்துவமான பண்புகளை எடுத்துக் காட்டுகிறார். 'ஒன்றே உலகம்' என்ற சங்க இலக்கியம் காட்டும் பண்பு உலகத்தவர் எல்லோரும் அறிய வேண்டிய பண்பு மேலைத் தேச அறிஞர்கள் இக்கருத்தை இருபதாம் நூற்றாண்டிலேதான் வெளியிட்டுள்ளனர். ஆனால் நமது சங்கப் புலவர்களோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே இக் கருத்தைத் தமது பாடல்களிலே பாடி வைத்துள்ளனர். சங்கப் பாடல்கள் எக்காலத்திற்கும் எந் நாட்டவர்க்கும் இலக்கியச்சுவை பயக்கக் கூடியவை. எனவே அவற்றை எல்லா நாட்டவர்க்கும் அறிமுகம் செய்ய வேண்டும் என்பது அடிகளாரின் கோட்பாடா யிற்று. ஏனைய மொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காட்டு ளார் காட்டியுள்ளார். சங்கப் பாடல்களிலே உள்ள அகத் துறைப் பாடல்களையும் அடிகளார் சிறப்பாக ஆராய்ந்துள்ளார். துறவியாக இருந்த போதும் வாழ்வியலின் கூறுகளைப் பற்றிய சங்கப் புலவர்களின் சிறப்பான கருத்துக்களை அவர் ஆராயத் தவறவில்லை. இதனை அவர் கூற்று நிரூபித்து நிற்கிறது.

''மறை யாசிரியராய் இருப்போரும், ஒழுக்க நீதி முறைகளைக் கற்பிக்கும் பொறுப்புடையோரும், சங்கத் தமிழ் இலக்கியங்களில் தம் தொண்டினுக்கேற்ற தலையாய சான்றுகளையும் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் வழிகளையும் காண்பர். தமிழனின் இவ்வுயர்ந்த பண்பை உலகம் முழுவதுமே அறிவதற்காக, அறிந்து கடைப் பிடிக்கச் செய்வதற்காக உழைப்பது தமிழரது தலையாய கடமையாகும். மேல் நாட்டவரிடையே வழக்காற்றிலிருக்கும் களவியல் ஒழுக்கமுறை பிற்றைஞான்றுப்

ஆய்வின் நேர்மைக்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. அடிகளார் திராவிட இலக்கியம் பற்றி மேலைத் தேய ஆய்வாளர்கள் கவனம் செலுத்தாதிருந்த காலத்திலே அதனை வெளிப்படையாக எடுத்துக் கூற வேண்டும் என எண்ணிச் செயற்பட்டார். தனது கட்டுரையிலே அதனைக் கூறியுள்ளார்.

'இந்திய வரலாற்று நூல்களை
எடுத்து நோக்குமின் Discovery of India என்றும் History of India Literature
என்றும் பலப்படப் புனைந்து வெளிவரும்
ஏடுகளை விரித்துப்
பார்மின். மாக்ஸ் முல்லர், வின்றர்னிட்ஸ்
போன்றவர்
முதலாய் வடமொழி இலக்கியத்தின்
பெருமையையே விரித்துக்
கூறுவர். இவ்விந்திய இலக்கியங்களின்
வரலாற்றிலே தமிழ்
இலக்கியத்தைப் பற்றியோ திராவிட
நாகரிகத்தைப் பற்றியோ
ஒரு சொல்லேனும், ஒரு குறிப்பேனும் ஒரு
கருத்தேனும்
காணக்கிடையா.'

இது மட்டுமன்றி தமிழரும் இந்திய மொழிகளிலே தமிழைப் பற்றிய உண்மைகளை வெளியிடவில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். எனவே சங்க இலக்கியம் பற்றித்தானே ஆய்வு செய்ய வேண்டுமென எண்ணினார். அவர் கின்ற ஒப்பீட்டாய்வு அடிகளாரின் தனித்துவமான ஆய்வு என்று கூறலாம். கிறிஸ்தவத்தை எல்லா நாட்டு மக்களும்பின்பற்ற வேண்டும் என்பது அடிகளாரின் இறைக்கோட்

பாடாக இருந்தது. அதுபோல சங்க இலக்கியத்தை உலக மக்கள் அனைவரும் படிக்க வேண்டும் என்பது அடிகளாரின் இலக்கியக் கோட்பாடாக அமைந்திருந்தது. உலகத்து மக்கள் அனைவருக்கும் பொருத்தமுறும் புறநானூற்றுப் பாடல் ஒன்றை அடிகளார் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

''உற்றுழி உதவியும் உறு பொருள்
கொடுத்தும் பிற்றை நிலை முனியாது
கற்றல் நன்றே பிறப்போரன்னவுடன்
வயிற்றுள்ளும் சிறப்பின் பாலால் தாயும்
மனந்திரியும் ஒரு குடிப் பிறந்த பல்
லோருள்ளும் மூத்தோன் வருக என்னாது
அவருள் அறிவுடை யோன் ஆறு அரசும்
செல்லும் வேற்றுமை தெரிந்தநாற்பா
லுள்ளும் கீழ்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே''

(புறம்: 183)

இப்புறநானூற்றுப் பாடல் கல்வியின் சிறப்பை வாழ்வியலில் வைத்து விளக்குகிறது. அது உலகத்தோர் யாவரும் விளங்கத்தக்க பாடலாகவும் அமைவதை அடிக

பிறந்த மேல் நாட்டு வழக்கம் என்று பெரிதும் போற்றுவர். அன்னார் அகத்துறை இலக்கியங்களில் எல்லாம் உலகிலேயே ஒப்பற்று விளங்குவது, தமிழில் உள்ள அகத்துறை இலக்கியமே என்று உணர்வது உறுதி''

அடிகளார் மேலைத்தேயத்து ஆய்வாளர்களின் ஆய்வுகளை நன்குபடித்தவர். அவற்றின் குறை நிறைகளைக் கணித்து மதிப்பீடு செய்யும் ஆற்றல் படைத்தவர். அதனால் இத்தகைய கருத்துக்களைக்கூறும் தகைமையும் பெற்றிருநதார். சங்க இலக்கியம் பற்றி மேலைத்தேய ஆராய்ச்சியாளர்கள் நுண்ணாய்வுகளைச் செய்யவில்லை யென்பதையும் இதன் மூலம் உலகத்திற்கு எடுத்துக் காட்டினார். மேலைத்தேயத்தவரது இலக்கிய ஆய்வுகள் சிறந்தவை எனப் போற்றும் நம் நாட்டவர்க்கு அடிகளாரின் மதிப்பீடு எது நேர்மையானது என்பதையும் வெளிப்படுத்தியது.

இன்னும் இலக்கியம் பற்றிய அடிகளாரது கோட்பாடு அவரது சங்க இலக்கியப் பயிற்சியால் கூர்மை பெற்றுள்ளது. 'இயற்கையைத் தமிழ்ப் புலவர் கையாண்டது போல வேறு எந்த மொழிப் புலவரும் கையாண்டிலர்' எனக் கூறுகிறார். இயற்கை நிலையை வெளிப்படுத்தும் சங்கச் செய்யுட்களை மொழிபெயர்ப்பது கடினம் எனக் கூறுகிறார். (தொடரும்)

# கலை இலக்கிய வீதியில்

## ஆபாசமும் மக்கள் விரோதமும்

இன்றைய படைப்பிலக்கியம் எப்படி எழுதப்படவேண்டும் என்பது பற்றிக் கூறமுடியுமா என்று ஒரு இளைஞர் என்னிடம் கேட்டார். அவர் எழுத்துத் துறைக்குள்ளே இருப்பவர். நான் எழுதி வெளிவந்துள்ள சில பத்திரிகை நறுக்குகளையும் என்னிடம் கொடுத்திருந்தார். உடனே படித்து முடித்து விட்டேன். வார்த்தை அடுக்குகள், ஒன்றோடொன்று தொடர்பற்ற எழுத்து.

''பாரதியைப் படித்திருக்கிறீர்களா?'' என்றேன் ஏளனமாகச் சிரித்தார், பதில் சொல்லவில்லை.

''புதுவை இரத்தினதுரையைப் படித்திருக்கிறீர்களா முருகையன்..?'' என்றேன்.

''அவர்களெல்லாம் அரசியல் எழுதுகிறவர்கள், நான் எழுத்தை என் அந்தரங்கக் கீதமாகக் கருதுகிறேன். அது எல்லோருக்கும் விளங்க வேண்டிய அவசியமும் இல்லை. இன்றைய நவீன கவிதையும் எழுத்துமே சரியென நான் கருதுகிறேன்.'' என்றார் சற்று அழுத்தமான குரலிலே.

''இவர்களையெல்லாம் படித்திருக்கிறீர்களா என்பதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்..''

''இல்லை...''

''அதுதான் ஏன்?''

''எனக்கு யாரையும் படிக்க விருப்பமில்லை. முன்பு தருமுவைப்படித்தேன். பிறகு யாரும் இல்லை... அது போகட்டும். நான் கேட்டதுக்கு மறுமொழி சொல்லுங்கள்...''

''இன்று எமது மக்கள் எல்லாச் சேதாரங்களுக்கும் உட்பட்டிருக்கிறார்கள், இளந்தலை முறைமீது சகல கலாசார நசிவுப் போக்குகளும் ஆறுகாற் சிலந்தியாய் அழுத்தியுள்ளது. எமது காலத்தின் அவலத்துக்கு எதிராக, தன் நம்பிக்கையும், தெளிவும், வலிவும் தரவேண்டிய விதத்தில் எழுத வேண்டியது தான் இன்றைய படைப்பாளியின் கடமை. பாரதி சொன்னது இன்றைக்கும் தெளிவாகப் பொருந்தும். 'நமக்குத் தொழில் கவிதை. நாட்டிற் குழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல்''

அவர் நான் சொன்னதைப் பற்றி அக்கறைப்படாமல் தான் புதிதாக எழுதிய கவிதை என்று ஒரு கைப்பிரதியைக் காட்டினார். ஆங்கிலத்திலே தலையங்கம், தமிழிலே ''தொலைதூர நட்சத்திரம் ஒன்றுடன் நான் பேசினேன்'' என்பது தலைப்பின் அர்த்தம். கவிதை அடுக்கிலும் ஆங்கில எழுத்து வார்த்தைகள். பைத்தியக்கார உளறல். எரிச்சலாக வந்தது. நான் பொறுமையாகக் கேட்டேன்.

''சிதைந்து சிதிலமாகப் போயிருக்கும் எமதுமண்ணும், மக்களும் இவர்களுக்காக நிற்கும் எமது போராளிகளின் வாழ்வும் உமது மனதைத் தொட்டு எழுதச் சொல்லவில்லையா?''

''நீங்கள் இயக்கமா?''

முகத்தில் நையாண்டியோடு கேட்டார். அந்த இளைஞனின் முகத்தில் காறித்துப்பவேண்டும் என என்னுள் கோபம் கொப்பளித்தது. எனினும் பொறுமை காத்தேன்.

இத்தகைய போக்கைச் சிலரிடம் காணக்கூடியதாக இருக்கிறது. இதுவும் ஒரு வகையில் ஆபாச இலக்கியமே. அதோடு மக்கள் விரோத இலக்கியமும் கூட.

## தால விலாசம்

கொழும்பிலிருந்து தலைமன்னார் வரையிலும், கண்டிவீதி வழியாகயாழ்ப்பாணம்,பரு,த்தித்துறை வரையும் பயணம் மேற்கொண்டேன்.திட்டமிட்டு எமது மண் நாசப் படுத்தப்பட்டிருந்தது நெஞ்சைஉலுப்பியது



யாழ்ப்பாணத்தை அடையாளப் படுத்தும் பனைமரங்கள் குரூர உணர்வுடன் வெட்டி அழிக்கப்பட்டு இராணுவ தேவைக்கென்று பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இது நிற்கவில்லை. தொடர்கிறது. பார்க்கப்பார்க்க வயிறு பற்றி எரிகிறது.


பனை தமிழரின் கற்பக விருட்சம். ஒரு மனிதனுக்கு, குடும்பத்துக்கு வேண்டிய எல்லாம் தரும் அட்சய பாத்திரம். இதை அழிப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தின் வளம் ஒன்றையே நிர்மூலமாக்கலாம் என இனவாதிகள் எண்ணலாம்.

இவ் வேளையிலே தான் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் எழுதிய 'தாலவிலாசம்' நினைவிலே வந்தது. பனையின் பயன்பாடுகளைக் கவிவடிவில் கூறும் அருமையான நூல், கணக்காளர் ஒருவரும் இப்படி ஒரு நூலை எழுதியுள்ளார்.

'தால விலாச'த்தை இப்போது மறுபிரசுரம் செய்வது மிகப் பொருத்தமாக இருக்கும்.

## வெளிச்சம்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தால் வெளியிடப்படும் 'வெளிச்சம்' இதழும்,நூல் திரட்டுகளும்இப்போது பரவலாகவே கிடைக்கின்றன. வெளிச்சம்77வது இதழ் இப்போது வெளியாகியுள்ளது.




கவிஞர் புதுவை இரத்தினதுரையின், 'கனவின் மீதியெழுதும் காலம்' மிக அருமையான கவிதை அழகாக வரையப்பட்ட ஓவியமாய் வார்த்தைகள் மனதை நிறைத்து கவிதையில் ஒன்ற வைக்கின்றன. கவிதையைப் படித்துக் கொண்டிருக்கின்ற போதே நாம் வசீகரமும் வனப்பும் பிரியமும் நிறைந்த சிறுகிராமம் ஒன்றினுள் செல்கிறோம். நினைவில் மூழ்குகிறோம். இக்கவிதை சிங்களத்துக்கும் போக வேண்டியது. அமரதாஸ் மாலிகா, இத்தாவில் க.சிவராசா, அமரதாஸ், யோ.இசைவேந்தன் ஆகியோரின் கவிதைகள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. மு.திருநாவுக்கரசு,நிலாந்தனின் கட்டுரைகள் விவாதத்துக்கு உரியவை. நிறையவே கேள்விகளை எழுப்புபவை.

இன்றைய படைப்பிலக்கியம் எத்தகைய செல்நெறியில் அமைய வேண்டுமென்பது பற்றி தெளிவான முடிவு ஒன்றினை நாம்மிக எளிதாக அடையலாம். இதுபற்றிய கலந்துரையாடல்கள் இப்போதைக்கு அவசியமாகின்றன. இத்தொகுதியில் உள்ள கதைகளும் நமக்கு இதை உணர்த்துகின்றன.

சு.மகேந்திரன் நல்ல படைப்பாளி. 'தங்கப்பூவின் பள்ளத் தாக்கு' என்ற அவரது கதை ஏமாற்றத்தைத் தருகிறது. இவ்வளவு ஆங்கிலவார்த்தைகளைப் பெய்து ஒரு தமிழ்ச் சிறுகதையை எழுத வேண்டிய அவசியம் என்ன?

அன்ரன் அன்பழகன், முல்லைக் கோணேஸின் பக்கங்கள் பயனுள்ளவை.

அழகாக வடிவமைக்கப்பட்டுள்ள இதழ், ''வெளிச்சம்.''

## ஒரு வழிப்பாதை

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிறகு தமிழ்ப்பகுதிக்குள்கலை விழாக்கள், வேல் கொண்டுவரல், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை அமைச்சர்கள்ஒரு திருவிழாவாகவே செய்கிறார்கள். ஆனால் தமிழ்ப் பகுதியின் நிலையினை, அவலங்களை, விருப்பங்களை இவர்கள் சிங்களப் பகுதியிலுள்ள மக்களுக்கு எடுத்துச் சொல்வதாகத் தெரியவில்லை. சிங்களப் பத்திரிகையாளர் கதையும் இதுதான். இவற்றை அவர்கள் சிங்கள மக்களுக்கே சொல்ல வேண்டும். சிங்களப் பத்திரிகையாளனும் படைப்பாளியுமான மஞ்சுள வெடிவர்த்தனா சிறந்த முன் னுதாரணம். வன்னிப் பகுதிக்குச் சென்று அங்குள்ள உண்மையான நிலையை புகைப் படங்களோடு மஞ்சுள வெடிவர்த்தனா ''ராவய'' சிங்கள இதழில் வெளியிட்டார். நெஞ்சை உலுப்பும் இக்கட்டுரை தமிழில் வெளியாக முயற்சி எடுத்துள்ளேன்.

(தொடரும்)

செ.யோகநாதன்

# புரிந்துணர்வுக்கு பெரும் சோதனை!

செப்ரெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க்கின் இரட்டைக் கோபுரத்தின் மீது வீழ்ந்த அடி செம்மனச் செல்விக்கு மண் அள்ளுவதற்குச் சென்ற சிவபெருமானுக்கு வீழ்ந்த அடியாகப் போய் விட்டது. சகல ஜீவராசிகளினதும் முதுகிலும் பட்டு விட்டது. ஆப்கானிஸ்தானின் முஸ்லிம் மக்கள் மீது பட்டது, ஈழத்தமிழர்கள் மீது வித்தியாசமான அடியாக விழுந்தது. கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மீதும் தமிழர்கள் மீதும் விழுந்திருக்கிறது. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இரண்டையும் குறி வைத்துக் கொண்டிருக்கிறது. ஐ.தே.மு அரசையும் உலுப்பத் தொடங்கியுள்ளது.

போர் ஓயவேமாட்டாதா? அமைதி தோன்றவே மாட்டாதா? என்ற ஏக்கத்துடன் காத்திருந்து பெற்ற இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் வென்றெடுத்த கையோடேயே அறுத்து அழிக்கவும், அதன் வழியே இலங்கைத் தாயை இரத்தக் களரியில் அமிழ்த்தி அழிக்கவும் அது திட்டமிட்டுள்ளது.

### ஒப்பந்தத்திற்கு முடிவு கட்டுமா?

மூதூரில் குளவிக் கூட்டைக் குழப்பி விட்டதிலிருந்து, தொடங்கிய கலவரங்கள் ஓய்வதற்கு ஒருவாரம் எடுத்தது. அதிகாரிகளும் அமைச்சர்களும், பாதுகாப்புத் தளபதிகளும் அங்குமிங்குமாக ஓடித்திருந்தனர். மகாநாடுகள் கூடினர். அரசியல் வாதிகள் அவர்களுடன் கூடித்திரிந்தனர். ஊரடங்குகள் போட்டனர். வெடித்துப் பரவி வந்த கலவரங்கள் பரவிய வேகத்தில் அடங்கவில்லை. மிகுந்த சிரமத்தின் பெயரில் தற்காலிகமாக அடங்கி விட்டன போல் தோற்றம் தருகின்றன. வன்முறைச் சம்பவங்கள் நின்றன. எரிந்த கட்டடங்களை நகர அபிவிருத்திச்சபை சீர்

# விரித்த வலையில் வீழும் வேதனை!!

செய்யுமாம். நட்ட ஈடுகள் வழங்கப்படுமாம். அறிவித்தல்கள், வாக்குறுதிகள் அடுக்கடுக்காக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வறுமை தீர்ந்து விடும். அதனால் ஏற்பட்ட வடு தீராது. வன்முறைகள் தீர்ந்தாலும் நெஞ்சங்கள் கக்கும் அனல் காற்றின் வெப்பம் இலகுவில் ஓயுமா? மாவனல்லவின் தாக்கம் அன்றைய பொ.ஐ.மு அரசைப் பதவி கவிழ்த்தது. மூதூரில் தொடங்கிய தீ ஐ.தே.மு.க்கு உலை வைக்குமா? முஸ்லிம் காங்கிரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்விற்கு முடிவு கட்டுமா? அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு இடையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முடிவு கட்டுமா? அல்லது இரண்டுமே அரோஹரா ஆகிவிட மீண்டும் பதுங்கு குழிகளும், பாதாள குழிகளுமா? கேள்விகள் எழுகின்றன.

### தீர்வுத்திட்டத்திற்கு முட்டுக் கட்டை

முஸ்லிம்களின் கோரிக்கை பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளது. புலிகள் மீது முழுமையாக நம்பிக்கை வைக்க அவர்கள் மறுக்கிறார்கள். வரலாற்றைத் துணையாகக் கொண்டு ஆதாரம் காட்டி வருகிறார்கள். தமது பாதுகாப்பிற்கு அரச படைகள் தம்முடன் இருக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கிறார்கள். தமது உயிர் வாழ்விற்கும் உடைமைகளின் பாதுகாப்பிற்கும் தமிழ் மக்கள் அரச படைகளை ஏற்றுக் கொள்வதில்லை. தாமே தமக்கென இராணுவத்தை அமைத்து அது வழங்கும் பாதுகாப்பையே அவர்கள் பெரிதும் ஏற்றுக் கொள்கிறார்கள். இலங்கைப் படைகளை தமது எதிரிகளாகக் கருதுகின்றனர். அவர்களால் தமது உடல், உயிர், உடைமைகள் அழிக்கப்பட்ட வரலாற்றைச் சான்றாகக் காட்டுகிறார்கள். இது அரசுக்கும் புலிகளுக்குமிடையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் வெளிப்படையாக அங்கீகாரம் பெற்றுள்ளது. ஆனால், முஸ்லிம்கள் மொழியால் தமிழர்களுடன் ஒன்று பட்டாலும் கூடச் சிங்களப் படையினரின் பாதுகாப்பை உத்தரவாதமாகக் கருதுகின்றனர். இது ஓரிரு நாட்களில் வருடங்களிலோ மாறக் கூடியதுமல்ல. ஆனால் இது நிரந்தரமான சிக்கல்களைத் தோற்றுவிக்கக் கூடியது. வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி விடுதலைப்புலிகள் எடுக்கக் கூடிய எந்தவொரு தீர்மானத்திற்கும் முட்டுக்கட்டையாக இது இருக்கப்போகிறது.

### கலவரத்தின் வெளிப்பாடு

கடந்த வாரத்தில் நடைபெற்ற தமிழ் முஸ்லிம் கலவரத்தின் சிருஷ்டிகர்த்தாக்கள் இதனையே தமது பிரதான எதிர்பார்ப்பாகக் கொண்டிருப்பர். அவ்வகையில் கலவரமும் அழிவுகளும் அவர்களுக்கு வெற்றியைக் கொடுத்திருக்கலாம். அரசபடைகளே முஸ்லிம்களின் மனங்களை வென்ற காவலர்கள் என்பதை முஸ்லிம் அமைப்புகளின் வாயினால் கூற வைத்து கலவரம் அத்தாட்சிப் படுத்தி விட்டது.

இதன் தர்க்க ரீதியான தாக்கம் என்ன? முஸ்லிம்கள், தமிழர்கள் அவர்கள் தமிழர் தாயகத்தின் பங்காளிகள், குடிமக்கள் என்று ஏற்றுக் கொண்டு தமது நிலைப்பாட்டை மாற்றிய புலிகள் அவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தனர். முஸ்லிம் மக்கள்மீளக் குடியமர்வு, முஸ்லிம்களிடமிருந்து நிதி சேகரிப்பு நிறுத்தம், பயிர்ச் செய்கைக்கு வசதி, தாய்லாந்து பேச்சுக்களுக்கு முஸ்லிம் பிரதிநிதியை நியமித்தல், முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளை கோட்பாட்டு ரீதியாக அணுகி அவர்களின் அரசியல் கலாசார தனித்துவ உரிமைகளைப் பேணுவதற்கு முடிவு செய்யும் பொருட்டு மேலும் பேச்சுக்களில் ஈடுபடுதல் என்பவற்றை எதிர்பார்த்து ஒப்பந்தம் செய்த முஸ்லிம் தலைவர்கள் இப்போது மனமாற்றம் அடைந்துள்ளனர்.

முஸ்லிம் அமைப்புகளின் கோரிக்கைகள் வலுவடைந்து அவற்றை அனுசரித்து நடக்க வேண்டிய கடப்பாட்டை அரசாங்கமும் வெளிவிடுமானால், அது புலிகளுடன் அரசாங்கம் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செல்லாக்காசாக்கி விடும். முஸ்லிம் காங்கிரசுக்கும், புலிகளுக்குமிடையே செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை உடையுமாயின் அது அரசுக்கும், – புலிகளுக்குமிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையை உடைக்கச் செய்யும். அது உடையும் பட்சத்தில் எல்லாமே ஆபத்தில் சிக்கலாம்.

இதனையே பல மட்டங்களில் இருந்தும் சமாதானம் ஏற்படுவதை விரும்பாத பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

**சர்வன்**

கிழக்கில் முஸ்லிம் காங்கிரசுடன் ஆலோசிக்காமல் படை முகாம்களை அகற்றுவதில்லை என்று பிரதமர் உறுதி கூறியிருக்கிறார். இதேவேளை ஓகஸ்ட் 02ஆம் திகதிக்குள் படை முகாம்கள் அகற்றப்பட்டு விடும் என்று ஏனைய தரப்பினருக்கும் உறுதியளித்திருக்கிறார். மேலும் சந்திப்புக்கள் இடம் பெறவிருக்கின்றன. தாய்லாந்தின் பேச்சுக்களை விரைவில் நடத்துமாறு ஜனாதிபதியும் அவசரப்படுத்துகிறார். அமெரிக்க விஜயம்தான் பதில் கூறுமோ! காத்திருக்கலாம்.

## துளிர்ப்பு...

(10ஆம் பக்கத்தொடர்ச்சி...)

வெடிக்காமல் கிணற்றில் கிடந்த ஷெல் அடிக்கடி பயமுறுத்தியது. இப்படி இன்னும் எத்தனை எத்தனை இடங்களில் வெடிபொருட்கள் குவிந்திருக்கின்றனவோ?

ராசன் உடலை அலம்பி கொடிக்கயிற்றில் போடப்பட்டிருந்த துவாயால் உடலைத் துவட்டியபடி வந்தமர்ந்தான்.

''அப்ப எப்படா வரப்போறியள்...''

அடுத்தடுத்த கிழமை வரத்தான் வேணும். இஞ்சையெண்டா எப்படியும் சமாளிக்கலாம். அங்கை சரியான கஷ்ரம்.

'கடை என்ன மாதிரி....'

'வந்துதான் திருத்தோணும். முழுசாயெல்லோ இடிஞ்சு கொட்டிண்டு கிடக்கு....''

'எத்தினை காலமாக் கட்டியெழுப்பின சொத்துக்கள் எல்லாமே ஒரு அடியிலை நாசமாப் போச்சு. இனி எல்லாம் பழைய மாதிரி ஆக எவ்வளவு காலம் ஆகுமோ...?

ராசன் சாப்பிட்டு முடித்துவிட்டு எழும்புகின்றான்.

'போகேக்கை முருக்கங்காய் கொண்டு போ ராசன்.

வளவிலை காய்ச்சுக் கொட்டுது. அதுகள் அங்கை நூறு, இருநூறு குடுத்துத் தானே வாங்குங்கள்....'

கனகம்மா நான்கைந்து முருங்கைக் காய்களைக் கதவோரமாய் வைக்கிறாள்.

''ஈக்குப்பிடியை ஒருக்காத் தாங்கோ ஐயாண்ணை...''

''என்னடா ஏதும் மட்டத்தேளே...''

''சீச்சி, ஒரே கறையான் புத்தாப் போச்சு...''

''கவனமடா, எங்கயேன், கண்ணி வெடி, கிண்ணி வெடி கிடக்கப் போகுது'.

அவர் ஈர்க்குப் பிடியோடு ராசன் காட்டிய இடத்திற்குப் போனார்.

பிளந்திருந்த நிலத்திற கூடாக மண்புற்று எழும்பியிருந்தது. கறையான்கள் நிரை நிரையாய்ப் பயணம் தொடர்ந்தன.

'பொறு நான் கொஞ்சம் மண்ணெண்ணெய் கொண்டாறன்...'

போய் மண்ணெண்ணெய்ப் போத்தலைப் பார்த்த போதுதான் அன்றைய இரவுக்கு அந்த எண்ணெய் போதாதென்று பட்டது.

எப்படியும் இன்றைக்கு எண்ணெய் வாங்கத்தான் வேண்டும். கிடக்கிற எண்ணெய்த் துளிகளைக் கறையானுக்கு ஊற்றுவதால் ஒன்றும் குறைந்து போகாதெனப்பட்டது. ஈர்க்குப்பிடியினால் அடித்துத் தட்டி மண்புற்றுக்களை அப்பால் தள்ளி விட்டிருந்தான் ராசன்.

இவர் போத்தலைக் கொண்டு வந்தார். அடுத்திருந்த செம்மண் நிறத்துப் புற்றுக்களின் மேல் துளித் துளியாய் மண்ணெண்ணெய் ஊற்றினார்.

' நீ நிண்டு வேலையை முடி ராசன். நான் சாவகச் சேரிக்குப் போய் மண்ணெண்ணெய் வாங்கியாறன். இப்ப மறதி பெருந்தொல்லை விட் டாப் பிறகு இரவைக்கு விளக்குக் கொளுத்திற நேரந்தான் எண்ணெயைப் பற்றிய நினைப்பு வரும்.'

புறப்பட்டார். சேட்டைக் கொளுவி, சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

மத்தியானத்துச் சுடுவெயில் மண்டையில் அடித்தது. கண்டி வீதியின் இரு மருங்கிலும் உள்ள காணிகளில், வீடுகளில் சனங்கள் வந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள். அடர்ந்து செழித்த காட்டு மரங்களை வெட்டிக் கொண்டும் வேலை செய்த களைப்புக்குத் தேனீர் அருந்திக் கொண்டும் உடைந்த ஓடுகளைக் கணக்கெடுத்து உள் பெருகிய சிதிலங்களை அகற்றிக் கொண்டும், திரும்பத் திரும்ப முற்றங்கள் பெருக்கி கரை நீங்கிய பழைய வெண் மண் தரைக்கு முயற்சித்துக் கொண்டும் இருப்பவர்களைப் பார்க்கையில் பரிதாபம் மண்டிற்று. ஆட்கள் வராமல் காடாய் மண்டிப் போன முற்றங்களில் 'ஒறேஞ்' வண்ணக் 'கோன்' பூக்கள் 'கொல்'லென்று பூத்திருந்தன. கடதாசி மல்லிகைகள், தடித்த முட்களாய் படர்ந்து செழித்திருந்தன.

தபாற்கந்தோர் வீதியும், சிவன் கோவில் வீதியும், குச்சொழுங்கைகளாய் மாறி இடிபாடுகளுக்கிடையே ஏதோ காட்டு வழிபோல் நெளிந்திருந்தன. சில நாட்கள் முன்புவரை ஆள் நடமாட்டமில்லாமல் வெறிச்சோடியிருந்த வீதிகளில் இப்போது நகர்வுகள், அசைவுகள் தெரிந்தன. பள்ளிக் கூடங்கள் வந்து விட்டிருந்தன. ஆங்காங்கே பல்வேறு கடைகளும் திசைக் கொன்றாய் முளைத்திருந்தன.

இடிந்து விழுந்திருந்த நவீன சந்தையின் இடிபாடுகளுக்கிடையில் வியாபாரம் சூடுபிடிக்கிறது. இவர் நவீன சந்தைக் கருகில் வந்தபோது இவரை விலத்திய சாம்பல் நிற ஜீப் ஒன்று நின்றது.

அது முகமாலைக்குப் போய்க் கொண்டிருக்க வேண்டும். பின்கதவு திறக்க காற் சட்டை போட்டிருந்த 'சைனீஸ் காரன்' போன்றிருந்த ஒருவன் சற்றே எழுந்து வெளியே இறங்கி லாவகமாய் நின்று 'கமெரா வை'த் தட்டினான்.

'பேப்பர்காரங்கள் போலை...' இவர் பெருமூச்செறிந்தார்.

இடிந்து போன நகரத்தை அவன் புகைப்படம் எடுக்கிறான். அவனுக்குத் தெரியுமா? இடிந்து தரைமட்டமாகு முன் இது எப்படி இருந்த தென்று...?

இரண்டு நிமிஷத்துக்குப் பின் பின்கதவு மூடிக்கொள்ள ஜீப் இவரை விலத்தி 'ஜிவ்'வென்று பறந்தது.

இதெல்லாம் எடுத்து என்ன பலன்? எங்கட ஊரை ஆர் இனி கட்டியெழுப்பப் போறாங்கள்...?

அமைச்சர்கள் எத்தனை பேர் யாழ்ப்பாணம் வந்தார்கள். ஒரு பத்து நிமிடத்திற்கு மேல் சாவகச் சேரியில் நின்றிருப்பார்களா? இது ஏதோ சாபப்பட்ட ஊர் இதற்கு மேல் இங்கு நிற்பதே பாவம் என்று போய்விட்டார்களா...?

அகலிகை கல்லான போது ராமபாதம் பட்டு உயிர்த்தாள்.

இந்த ஊர் மண்ணான போது யார் பாதம் பட்டு உயிர்த் தெழுமோ...?

என்ன மாதிரிக் கலகலத்துக் கிடந்த ஊர்...? அவர் மண்ணெண்ணெய் வாங்கிக் கொண்டு திரும்பிய போது மனம் பெரும் ஏக்கமாய் பரிதவித்தது. இதை மீளக் கட்டியெழுப்புதல் சாத்தியமாகுமா?

இனி எல்லாரும் திரும்பி வருவார்களா...?

பட்டண சுகம் கண்ட பேர்கள் யாழ்ப்பாணத்தை விட்டுத் திரும்பாமலே போக, மீதிப்பேர்கள் சிதைவுகளைக் கட்டியெழுப்பும் வசதியற்று மீளாமலிருக்க.. இவ்வூர் பாழடைந்தேபோகுமோ...?

மீண்டும் வழி வழியாய், திரும்பத் திரும்ப முயற்சிக்கும் சனங்களைக் காண முடிந்தது. வீட்டிற்கு மீள்கையில் ராசன் வளவு முழுக்கக் கூட்டி முடித்திருந்தான்.

'எப்பிடியடா கறையான்.....?'

இவர் கூட்டி முடித்திருந்த நிலத்தினைப் பார்வையால் மேய்ந்தவர் சின்த்தின் உச்சிகுப் போனார்.

திரும்பவும், திரும்பவும் கறையான்கள் மண்ணை உழுது உழுது குவியலாக்கித் திரும்பவும் புற்றெழுப்பிய கறையான்கள் திரும்பத் திரும்ப அவற்றின் வாழ்விடத்தை அழித்தாலும், மீண்டும் மீண்டும் தம் வசிப்பிற்கான இருப்பிடங்களை அமைக்க விளையும் கறையான்கள்...

இவர் சட்டென்று நின்றார். அவர் மனதில் வடிந்த சினமும், அந்தப் பாரவுணர்ச்சியும் சட்டென்று இறங்கின.

இந்த ஊருக்கு இனியும் மக்கள் வருவர். இந்தக்கறையான்களைப் போல மீண்டும் மீண்டும் சொந்த வீட்டினைக் கட்டியெழுப்பி, இந்த மரங்களைப் போல குளிர்த்துக் கொண்டு.... ஆசுவாசமான பெருமூச்சு இப்போது அவரிடமிருந்து கிளம்பியது.

* * *

## ஜோக்ஸ்

''இது கொஞ்சம் விநோதமான திருட்டு சார்!''

''விவரமாகச் சொன்னாத் தானே புரியும்?''

''பஸ்ஸில கொஞ்சம் வாயைத் திறந்த படி தூங்கிட்டேன்.... அந்த நேரத்துல எவனோ என்னோட தங்கப்பல்லைக் கழட்டிக் கொண்டு போயிட்டான்!''



# ஜெயலலிதாவின் சிந்து நடைக் கூத்தின் இரண்டாம் பாகமே வை.கோவின் கைது



மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப்பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தமிழ் நாட்டிலே பெரும் பரபரப்புக்கு மத்தியில் சென்னை மீனம்பாக்க விமான நிலையத்திற்கு வெளியே வைத்து மதுரை விசேட பொலிஸ் அணியினால் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்காவில் நடைபெற்ற தமிழ் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அங்கு சென்றிருந்த வைகோவை நாடு திரும்பியதும் அவசர அவசரமாக விமான நிலையத்திற்கு வெளியே வைத்து கைது செய்ததன் மூலம் தமிழ்

யாவுக்குள் நுழைவதை தடுப்பதற்காகவும், இந்திய தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் கொண்டு வரப்பட் டதே ''பொடா'' எனப்படும் எல்லை தாண்டிவரும் பயங்கரவாதத தடைச் சட்டமாகும்.

இச்சட்ட மூலம் இந்தியாவுக்குள் அந்நிய ஊடுருவலைத் தடுக்கவும் எல்லை தாண்டிவரும் பயங்கரவாதத்தை முறியடிக்கவும் தேசிய பந்தோபஸ்தை உறுதிப் படுத்தவும் கொண்டு வரப்பட்டதாகும்.

இச் சட்டத்தைப் பயன்படுத்தியே மாக சிங்கள ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டு வந்தபோது. அவர்களை அந்த அடிமைத் தனத்திலிருந்து மீட்டு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஈழத்தில் போராடுபவர்கள்தான் விடுதலைப் புலிகள்.

தமிழனுக்கு தமிழன் என்ற வகையில் அதுவும் தொப்புள் கொடி உறவு கொண்ட தமிழ் நாட்டுத் தமிழன் என்ற வகையில் ஈழத் தமிழரின் கண்ணீருக்காக அவர்களின் உரிமைக்காகக் குரல்கொடுத்தவர் வைகோ.

அவரின் இந்த மனிதாபிமானமான ஆதரவும் தமிழ் மக்கள் உரிமையுடன் வாழவேண்டும் என்ற உணர்வும். அபத்தமான பயங்கரவாதமா நாட்டைச் சீரழிக்கும் தீவிரவாதமா தமிழ் நாட்டின் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் நடவடிக்கையா தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான செயற்பாடா!

சர்வதேசமும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் சிந்திக்க வேண்டிய பதில் சொல்ல வேண்டிய விடயங்கள் இவை.

### ஜெயலலிதாவின் போக்கு

இந்தியாவின் வாஜ்பாய் அரசின் மிகப் பெருந் தலைவர்களான மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் மற்றும் கலைஞர் கருணாநிதி ஏன் இன்றைய முதல்வர் ஜெயலலிதா அம்மையார் கூட ஆரம்பத்தில் புலிகளின் விசிறிதான்.

தம்பி என்று செல்லமாக அழைத்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் போராட்டம் பற்றி ஆவலுடன் கேட்டறிந்து கொள்ளும் எம்.ஜி.ஆர் புலிகளுக்காக உரக்க குரல் கொடுத்தவர்.

மக்கள் செல்வாக்கால் உயர்ந்து விளங்கிய மக்கள் திலகம் எம்.ஜி. ஆர் ஈழத்தமிழருக்காக அன்று மத்திய அரசையே ஒரு கலக்கு கலக்கியவர்.

ஆனால் இன்றோ அவரை அவரது பெயரைப் பயன்படுத்தி தானே அவருக்கு அடுத்த தமிழ்நாட்டின் அரசியல் வாரிசென தமிழகத்தை நம்ப வைத்து நடித்துக் கொண்டிருக்கும் ஜெயலலிதா இன்று புலிகளுக்கு ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்கு அம்மக்களின் துன்பதுயரங்களுக்கு வேட்டு வைத்து அதில் அரசியல் இலாபம் தேடுகிறார்.

### பேச்சுரிமைக்குத் தடை

வைகோ கைது செய்யப்பட்டதன் மூலம் தமிழ் நாட்டில் பேச்

### மத்திய அரசுமௌனம்

இதேவேளை தமிழ்நாடே கொந்தளித்து பரபரப்படைந்து இருக்கும் இவ்வேளையிலும் மத்திய அரசின் ஆதரவாளர் சிறையில் வாடும்



போதும் வாஜ்பாய் அரசு இவ்விடயம் குறித்து எதுவும் தெரிவிக்காது கண்மூடி மௌனமாக இருக்கிறது.

இம்மௌனம் ஜெயலலிதாவின் நடவடிக்கையை சரியென்று ஒப்புக்கொள்கிறதா அல்லது வைகோ விடயத்தில் மத்திய அரசு மெத்தனப் போக்கை கடைப்பிடிக்கிறதா என்பது குறித்து எதுவும் தெளிவாக வில்லை. எனினும் மௌனவிரதம்

## வாஜ்பாய் அரசு மௌன விரதம்



நாடே பெரும் பரபரப்படைந்துள்ளது.

வைகோ அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பியதும் கைது செய்யப்படுவார் என தமிழகத்தில் செய்திகள் உறுதியானதால் அவர் அங்கிருந்து அவசர அவசரமாக மும்பை விமான நிலையத்துக்கு வந்தடைந்து அங்கிருந்து விசேட விமானமூலம் சென்னை விமான நிலையத்தை வந்தடைந்தார்.

விமானநிலையத்தில் மனைவி பிள்ளையுடனும் தனது கட்சி உறுப்பினர்களுடனும் கலந்துரையாடிய அவர் அங்கிருந்து வெளியே வந்ததும் அவருக்காகக் காத்து நின்ற பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசேட வாகனத்தில் ஏற்றப்பட்டு மஜிஸ்திரேட்டில் ஆஜர் படுத்தப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

### ஆதரவாளர்கள் கைது

வைகோ கைது செய்யப்பட்டால் தமிழ் நாடு எங்கும் கலவரங்கள் வன்முறைகள் வெடிக்கலாம் என்ற அச்சத்திலும், அவருக்கான ஆதரவுப் போராட்டங்கள் நடைபெறுவதை தடுக்கும் நோக்கிலும் ம.தி.மு.க ஆதரவாளர்கள் மற்றும் சிரேஷ்ட தலைவர்களென ஆயிரக்கணக்கானோர் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பாய்ந்து பாய்ந்து கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

பெருமளவான பொலிசார் மற்றும் கலகம் அடக்கும் பிரிவினர் என விசேட பொலிஸ் அணியினர் வைகோவை கைது செய்வதற்காக காலைமுதல் மாலைவரை சென்னை விமான நிலையத்தை சூழவும் முக்கிய வீதிகளிலும் குவிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் ம.திமு.க. தொண்டர்களை மடக்கவென விசேட வீதித்தடுப்பு சோதனைகள் ஆங்காங்கே போடப்பட்டு சோதனைகளும் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

### பொடா சட்டம்

அந்நிய தீவிரவாத மற்றும் பயங்கரவாத சக்திகள் இந்தி

வைகோ கைது செய்யப்பட்டார். என்றால் வைகோ அந்நிய ஊடுருவல்காரரா! அல்லது எல்லை தாண்டிவரும் பயங்கரவாதியா!

இல்லை மறத்தமிழன் தமிழ்க் குடிமகன் பாரதப் பிரஜை.

இந்நிலையில் சட்டத்தில் உள்ள எந்தவகையான நெகிழ்வின் அடிப்படையில் வைகோ கைது செய்யப்பட்டார். அல்லது சட்டமும், நீதியும் தமிழ்நாட்டின் ஆட்சியாளர் கையில் அடங்கி விட்டதா என்பது இன்னமும் தெளிவாகவே இல்லை.

### புலி ஆதரவுக்கொள்கை

தமிழீழ விடுதலைப் புலிக



ளுக்கு ஆதரவாக தமிழ்நாட்டில் குரல் கொடுத்து வருவதாலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். என்று தமிழக அரசால் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஈழத்தமிழ் மக்கள் காலங் கால ஆட்சிக் கதிரைக்கு வைகோவின் ம.தி.மு.க.வின் ஆதரவும் ஒருகால்.

இந்நிலையில் வைகோ தமிழ் நாட்டில் மாத்திரமல்ல அகில இந்தியாவிலும் ஏன் சர்வதேசத்திலும் பிரபலமானவர்.

இத்தகைய அரசியல் பலத்தில் தமிழ் நாட்டில இருக்கும் வைகோவை கொஞ்சம் தட்டிவைக்க வேண்டும்.

அவரை தனது அதிகாரபலத்துக்குள் அடக்கி மிரட்டி வைக்க வேண்டும் என்பதற்காக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆடும் அரசியல் சதுரங்கத்தின் இரண்டாவது சித்து விளையாட்டு இது.

முதலில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியை சிறையில் அடைத்து தனது ஆட்சிக்கலையின் உன்னதத்தை வெளிக்காட்டினார்.

தற்பொழுது வைகோவை தனது அதிகார வலையில் விழுத்தி அவர் முகத்தில் சேறு பூசுவதற்கு திட்டம் வகுத்தார். சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு ''பொடா'' எனும் சட்டத்தை தனக்கு சாதுரியமாகப் பயன்படுத்தி ஜனநாயக அராஜகம் புரிகிறார்.

தான் செய்வதையெல்லாம் சரியென வலியுறுத்தி அவ்வப் போது தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை குறிப்பிட்டு அதனைப்பாதுகாக்க தன்னை அர்ப்பணிப்பதாக தெரிவிக்கிறார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதற்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று குறிப்பிட்டு அதனால் இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்புக்கு ஆதரவாக செயற்படுவது, பேசுவது 'பொடா' சட்டத்தை மீறும் செயல் என்று புது விளக்கம் அளித்து அம்மையார் கதகளி ஆடுகிறார்.

### இந்தியாவும் புலிஆதரவும

இலங்கையில் தமிழின உரிமைக்காக போராட்டம் நடத்த முற்பட்ட அமைப்புகளுக்கு ஆரம்பத்தில ஊக்கமும், உற்சாகமும் அளித்ததுடன் பண உதவி ஆயுத உதவி என வழங்கியவர்கள் தமிழ் நாட்டின் பிரபல அரசியல் தலைவர்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

இந்த உண்மையின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஆரம்ப காலத்தில் அனைத்து உதவிகளும் கிடைத்தன.

மறைந்த இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி உட்பட தமிழ் நாட்டின் சுரிமைக்கு இடமில்லை என்பது தெட்டத்தெளிவாகி விட்டது.

விடுதலைப் புலிகளை தமிழ் நாட்டில் மறைத்து வைத்திருந்து ஆதரவு கொடுத்தவர் அல்ல வைகோ. அவர் ஈழத்தமிழ் மக்களுக்காக அவர்களின் உரிமைக்காக அதனைப் பெற்றுக் கொடுக்க வென்று போராடுகின்ற விடுதலைப்

கோவையூர் ஜெயன்

புலிகள் அமைப்புக்காக தமிழகத்தில் இருந்த ஆதரவுக் குரல் கொடுத்தவர்.

அனைவரும் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட உரிமை உடையவர்கள் இந்த பேச்சுரிமையின் அடிப்படையிலேயே வைகோவும் புலிகளுக்காக ஈழத்தமிழர்களுக்காக தனது தமிழீழ ஆதரவுக் கொள்கையை வெளிப்படுத்தினார்.

இதனையே தவறென்று கூறி அவர் கைது செய்யப்பட்டமை தமிழ் நாட்டில் பேச்சுரிமைக்கு இடமில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

அமெரிக்காவையே அதிர வைத்து பயங்கரவாதத்தாக்குதல் நடத்திய ஒசாமா பில்லேடன் பற்றி தற்பொழுதும் அமெரிக்காவில் ஆதரவும்



எதிர்ப்புக் குரல்களும் ஒலிக்கின்றன.

அது பற்றி விமர்சனங்களும் அமெரிக்க அரசுக்கும் ஒசாமாவுக்கும் ஆதரவாகவும் எதிராகவும் கிளம்பியுள்ளன.

இருந்த போதும் தடை செய்யப்பட்ட அமைப்புப்பற்றி பேசக் கூடாதுதென்று வேடிக்கையான விளக்கமோ சட்டமோ அமெரிக்காவில் ஏற்படுத்தப்படவில்லை.

நீண்ட நாள் நிலைக்காது என்பது மட்டும் உண்மை.

எது எப்படி இருப்பினும் தமிழ் நாட்டில் தன்னை ஒரு மாபெரும்



அரசியல் தலைவியாகக் காட்டிக் கொண்டு தனது அரசியல் எதிரிகளை லாவகமாக பழிவாங்கும் முதல்வர் ஜெயாவின் எண்ணம் இலகுவாக தடையின்றி நிறைவேறி வருகின்றது என்பதும் கசப்பான உண்மையே.

தமிழ் நாட்டின் தலைவிதியை தன்னால் மாத்திரமே தீர்மானிக்க முடியும் என்பதை தனது நடவடிக்கைகள் மூலம் அவ்வப் போது ஜெயலலிதா காட்டியே வருகிறார்.

வைகோவின் கைதுவிவகாரம் எவ்வாறு சட்டச்சிக்கலை வென்று மீளும் என்பதும் அவரின் தமிழீழ ஆதரவுக் கோட்பாடு எவ்வகையில் தமிழ் நாட்டில் இனிமேல் பரவும் என்பதும் தமிழகத்தின் அராஜக ஆட்சிக்கு மக்கள் முற்றுப் புள்ளி வைப்பதன் காலம் கனியுமா என்பதும் காலத்தால் கூறப்படக் கூடிய உண்மைகளே.

# அர்த்தமுள்ள இந்து மதம்

## கவிஞர் கண்ணதாசன்



அந்த உயிர் தன் சக்தியைக் காட்டி விடுகிறது.

ஆத்திரத்தில் சொல்லும் வார்த்தைகள் மட்டுமன்றி இயற்கையாக வந்து விழும் வார்த்தைகளும் பலித்து விடுகின்றன.

எல்லாவற்றுக்கும் தெய்வ நம்பிக்கைதான் காரணம்.

**கண்ணனை நினைப்பவர்கள் சொன்னது பலிக்கும்**

'கவிஞன் பாடினான், நகரம் எரிந்தது' என்றும் 'கலம்பகப் பாட்டினால் நந்திவர்மன் இறந்தான்' என்றும் நாம் கேட்கிறோம்.

நான் கவிஞனோ இல்லையோ கடவுள் நம்பிக்கையுடையவன்.

என்னையறியாமலேயே வந்து விழுந்த சில வார்த்தைகள் என் வாழ்விலும் நண்பர்கள் வாழ்விலும் எப்படிப் பலித்திருக்கின்றன என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

எனது நெருங்கிய நண்பர், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமிக்காக, 1960ல் ஒரு படத்தில் ஒரு பாடல் எழுதினேன்.

'பாடமாட்டேன் - நான்
பாடமாட்டேன்'

என்பது பாடலின் பல்லவி.

ஆம்; அதுதான் அவர் சினிமாவில் கடைசியாகப் பாடிய பாடல். அதற்குப் பிறகு அவர் பாடவே இல்லை.

எனது சொந்தப் படம் ஒன்றில் ஒரு சோகப் பாடல் எழுதினேன்.

'விடியும் விடியும் என்றிருந்தோம்
முடியும் பொழுதாய் விடிந்ததடா!
கொடியும் முடியும் தாழ்ந்தடா நம்
குடியும் குலமும் ஓய்ந்ததடா!'

எவ்வளவு 'அறம்' நிறைந்த சொற்கள்!

எழுதும்போது எனக்கு அந்த உணர்ச்சி தோன்றவில்லை.

ஆனால், அந்தப் படத்தில் விழுந்த அடி, என்னைப் பத்து ஆண்டுகள் கலங்க வைத்தது.

அந்தப் படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டு இருந்தது, ஒரு ஸ்டுடியோவில்.

அந்த ஸ்டுடியோ கிண்டியில் இருந்தது.

மறுநாளைப் படப்பிடிப்புக்காக, அந்த ஸ்டுடியோ நிர்வாகியிடம் பத்தாயிரம் ரூபாய் நான் அச்சாரம் கொடுத்து விட்டு வந்தேன்.

ஷூட்டிங்கிற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு வந்து விட்டேன்.

மறுநாள் நடிகர்களெல்லாம் ஸ்டுடியோவிற்குப் போன பிறகு, அவசரமாக வரும்படி எனக்கு டெலிபோன் வந்தது.

நான் போனேன்.

எங்களுக்கு 'கால்ஷீட்' கிடையாது என்றும், ஒரு மாய மந்திரப் படத்திற்கு 'கால்ஷீட்' கொடுத்து விட்டதாகவும் நிர்வாகி சொன்னார்.

அப்போது இசையமைப்பாளர் விசுவநாதனும் என் கூட இருந்தார்.

எனக்கு ஆத்திரமாக வந்தது.

கோபத்தில், அந்த ஸ்டுடியோ நிர்வாகியைத் திட்டிவிட்டு, ''உன் ஸ்டுடியோ எரிந்து சாம்பலாகத் தான் போகும்'' என்று கூறி விட்டு, அலுவலகத்திற்கு வந்தேன்.

அலுவலகத்தில் வந்து உட்கார்ந்துதான் தாமதம், டெலிபோன் வந்தது.

''ஸ்டுடியோவில் படப்பிடிப்பு மண்டபம் நெருப்புப் பிடித்து எரிகிறது'' என்று என் தயாரிப்பு நிர்வாகி கூறினார்.

அந்த மாய மந்திர செட்டில், சிங்கத்தின் வாயில் நெருப்பு வருவதுபோல் படம் பிடித்தார்கள் என்றும் அந்த நெருப்பு மேலேயிருந்த சாக்கிலே பற்றி, மண்டபம் எரிகிறது என்றும் அவர் சொன்னார்.

எனக்குத் தூக்கி வாரிப போட்டது.

கூட இருந்த தம்பி விசுவநாதன் என் கையைப்பிடித்துக் கொண்டார்.

''அண்ணே, இனி யாரையும் ஏதும் சொல்லாதீர்கள்'' என்று கெஞ்சினார்.

என் சக்தியை உங்களுக்குச் சொல்லிப் பயமுறுத்த இவற்றை நான் சொல்லவில்லை.

''வஞ்சகமில்லாத ஆத்மா ஒரு வார்த்தை சொன்னாலும் பலிக்கும்'' என்பது இந்துக்கள் நம்பிக்கை.

முனிவர்களின் சாபங்களையும், பத்தினிகளின் சாபங்களையும் நாம் புராணங்களில் படிக்கிறோம்.

நல்லது செய்தால் நல்லது வருகிறது. சொன்னது பலிக்கிறது.

நான் என் உறவினர்களில் சிலருக்குத் திருமணங்கள் நடத்தி வைத்திருக்கிறேன்.

அப்போதெல்லாம் என் குழந்தைகளின் திருமணங்களைப் பற்றி நான் சிந்தித்துக்கூடப் பார்த்ததில்லை.

''ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன்பிள்ளை தானே வளரும்'' என்ற இந்துக்களின் பழமொழியில் எனக்கு நம்பிக்கை உண்டு.

என் மூத்த பெண்ணுக்கு அப்போது பதினாறு வயது. திருமணத்திற்கு அவசரப்படத் தேவை இல்லாத வயது.

அப்போது ஒரு படத்தில் ''பூ முடிப்பாள் இந்தப் பூங்குழலி'' என்றொரு பாடல் எழுதினேன்.

அந்தப் படம் வெளியாயிற்று பாடலும் பிரபலமாயிற்று.

ஒரு நாள், வீட்டில் அந்த இசைத் தட்டைப் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்த போது, என் இளைய சகோதரி வந்தார்கள்.

''ஒரு நல்ல மாப்பிள்ளை இருக்கிறது; அலமுவுக்குக் கல்யாணம் பேசலாமா?'' என்றார்கள்.

''இந்த வயதில் என்ன கல்யாணம்?'' என்றேன் நான்.

''சுபம் சீக்கிரம் என்பார்கள், பெண் திருமணத்தைச் சீக்கிரம் முடித்து விடுவது நல்லது'' என்கிறார்கள்.

''சரி, பேசுங்கள்'' என்றேன்.

கிராமத்துக்குச் சென்ற என் இளைய சகோதரி, எனது ஒன்று விட்ட சகோதரியிடம் சொல்லி, ''அந்த மாப்பிள்ளையைப் பேச வேண்டும்'' என்றார்கள்.

அதற்கு என் ஒன்று விட்ட சகோதரி, 'எங்கள் வீட்டில் செய்யக் கூடாதா?' என்று கேட்டு விட்டு நேரே சென்னைக்குப் புறப்பட்டு வந்து விட்டார்கள்.

என் சகோதரரும், ''அந்த சகோதரி வீட்டில் தான் செய்ய வேண்டும்'' என்று உறுதியாகச் சொல்லி விட்டார்.

அன்றைக்கே திருமணமும் பேசி முடிந்தது.

அப்போது 1967தேர்தல் முடிந்த நேரம். தேர்தலில் வாங்கிய அடி; இரண்டு படங்களில் பட்ட கடன் எல்லாம் என்னைப் பின்னி எடுத்தநேரம்.

செட்டி நாட்டுத் திருமணம் என்றால் செலவு எப்படி இருக்கும் என்று உனக்குத் தெரியும்.

''காலணாக்கூட கையில் இல்லாமல் க்ல்யாணம் பேசி விட்டோமே!'' என்று நான் கலங்கினேன்.

(தொடரும்)

---

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## இழையவளர்ப்பும் அதன் பிரயோகங்களும்

**[ Tissue culture (micropro pagation) and it's applications.]**

இழைய வளர்ப்பு எனப்படுவது, தாவர இழையத்தைக் கிருமி அற்ற நிபந்தனையில் தொற்றுதல் ஏற்பட முடியாத கண்ணாடி உபகரணங்களினுள் காணப்படும் கிருமிநீக்கம் செய்யப்பட்ட போசணை வளர்ப்பு ஊடகங்களில் வளர்த்து பல புதிய தாவரங்களை உருவாக்கும் செயன்முறை ஆகும்.

### இழைய வளர்ப்பின் நோக்கங்களாவன

1) தாய்த்தாவரத்தைப் போன்றே, *விளைச்சலைத் தரும் தாவரங்களைக் குறைந்த காலத்தில் உருவாக்கலாம்.

* பீடை கொல்லிகள், களை கொல்லிகளுக்கு எதிர்ப்புள்ள தாவரங்களையும் நோய் எதிர்ப்புடைய தாவரங்களையும் தகாத காலத்தில் வாழக்கூடிய தாவரங்களையும் குறைந்த காலத்தில் உருவாக்கலாம்.

2) பிறப்புரிமைப் பொறியியல் மூலம் மாற்றியமைக்கப்பட்ட தாவரங்களை விரைவாகப் பெருக்கிக் கொள்ளலாம்.

இழையவார்ப்புக்கெனத் தாவரத்தின் தண்டுச்சிப் பிரியிழையம், முளையம், இலைகள், வேர் உச்சிப்பிரியிழையம், கக்க அரும்பு, மாறிழையக்கலங்கள், மகரந்தமணிகள் போன்றன பயன்படுத்தப்படுகின்றது.

நவீன தொழில்நுட்ப முறையின் கீழ் விசேட உபகரணங்களின் உதவியுடன் நன்கு பயிற்சி பெற்ற தொழில்நுட்பவியலாளர்களால் மிகப் பிரமாண்டமான அளவில் மேற்கொள்ளப்படும் பதிய முறை இனப்பெருக்கமே இழையவளர்ப்பாகும். இதன் மூலம் ஒரு சில வருடங்களினுள் மூலத்தாய்த் தாவரத்தை யொத்த சர்வசமனான பல்லாயிரக் கணக்கான தாவரங்களை உருவாக்கலாம்.

### இழைய வளர்ப்பில் உள்ள தொழில்நுட்பம்

* இங்கு பயன்படுத்தப்படும் வளர்ப்பூடகத்தில் தாவர வளர்ச்சியைத் தூண்டிக்கூடியதாகச் சரியானவிகித அளவில் N, Mg, Fe, K போன்ற அசேதன அயன்கள், Sucrose, uitamin வேர்வளர்ச்சியையும் கலநீட்சியையும் தூண்டும் auxin, அங்குர நீட்சியையும் கலப்பிரிவையும் தூண்டும் cytokinin என்பவற்றுடன் agar உம் சேர்க்கப்பட்டு Jelly போன்ற ஊடகம் தயாரிக்கப்படும்.

* இழையவளர்ப்பு கிருமியற்ற அறைகளில் பொதுவாகப் பெற்றிக் கிண்ணங்களில் மேற்கொள்ளப்படும்.

* இழைய வளர்ப்புக்கெனத் தெரிவு செய்த தாவரம் ஒட்டுக் கட்டைத் தாவரம் (Stockplant) எனவும் இதிலிருந்து பெறப்படும் இழையப் பகுதிகள் explantsஎனவும் அழைக்கப்படும்.

* இங்கு பயன்படுத்தப்படும் explants $Naclo_3$ இனைக் கொண்ட bleach கரைசலில் மேற்பரப்புக் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பின்பே வளர்ப்பூடகத்தில் இடப்படும்.

* இழையவளர்ப்பில் பயன்படுத்தப்படும் சகல உபகரணங்களும் கிருமியற்ற நிபந்தனையிலேயே பயன்படுத்தப்படுவதால் தேவையற்ற பக்ரீரியா, பங்கசு என்பவற்றின் வளர்ச்சியைத் தவிர்க்கலாம்.

* இவ்வளர்ப்பு மேற்கொள்ளப்படும் அறையில் தாவர வளர்ச்சியைத் தூண்டும் வெப்பநிலை, சார் ஈரப்பதன், ஒளிச்செறிவு. ஒளியின் வகை. பகல்கால அளவு என்பன பேணப்படும்.

* இழைய வளர்ப்பில் பொதுவாகப் பாவிக்கப்படும் வளர்ப்பூடகம் Murastige and skoog medium ஆகும்.

### இழையவளர்ப்பு முறையின் அனுகூலங்கள்.

1) மிகக் குறைந்த காலத்தில் பெரும் எண்ணிக்கையில் தாவரங்களை உருவாக்கலாம்

2) குறைந்தளவு இடப்பரப்பில் அதிக எண்ணிக்கையான தாவரங்களை உருவாக்கலாம்.

3) பருவகால மாற்றம், கால நிலை மாற்றங்கள் என்பன பாதிப்பை ஏற்படுத்தாத காரணத்தால் வருடம் முழுவதும் தாவரங்களை விருத்தி செய்யலாம்.

4) பிறப்புரிமை ரீதியில் சர்வ சமனான தாவரங்களை உருவாக்க முடியும். இதனால் அனுகூலமான இயல்புகள் மாறாது பேணப்படும்.

**திரு.K.சுகந்தன் B.Sc**
**தாவரவியல்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்**

5) வித்துக்களின் உறங்குகாலம் வரை காத்திருக்காமல் தாவரங்களை விருத்தி செய்யலாம்.

6) ஒரு மடியத்தாவரங்களையும். வைரஸ் தொற்று அற்ற தாவரங்களையும், உள்நாட்டுத் தாவரங்கள், அரிதான தாவரங்கள், மருத்துவ முக்கியத்துவமான தாவரங்களையும், விருத்தி செய்யலாம்.

7) பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைத்த தாவரங்கள், முளைக்கும் திறன் குறைந்த வித்துக்களை உருவாக்கும் தாவரங்களையும், மந்தகதியில் முளைக்கும் வித்துக்களைக் கொண்ட தாவரங்களையும் விரைவாக விருத்தி செய்யலாம்.

8) ஆரம்பநிலையில் தாவரங்கள் பருமனில் மிகவும் சிறியனவாக இருப்பதனால் இலகுவாக வேறு நாடுகளுக்குக் கொண்டு செல்லலாம்.

9) முதிர்ச்சியடையத் தாய்த் தாவரத்தில் தங்கியிருக்க வேண்டியதில்லை.

### இழையவளர்ப்பு முறையின் பிரதி கூலங்கள்.

1. செலவு கூடியமுறை
2. விசேட ஆய்வுகூட உபகரணங்களும் நிபந்தனைகளும் தேவை.
3. மிகவும் திறமையும் ச்ரியான பயிற்சியும் உடைய தொழில் நுட்பவியல் உத்தியோகஸ்தர்கள் தேவை.
4. வளர்ப்புக் காலத்தில் உருத்திரிபுகளும் மாற்றங்களும் ஏற்படலாம்.
5. திறந்த வளர்ப்புச் சூழலில் சாதாரண விவசாயிகளால் மேற்கொள்ள இயலாது.
6. பொருளாதார முக்கியத்துவமுடைய தாவரங்களை மட்டும் பெருக்கலாம்.
7. இங்கு பெறப்படும் தாவரங்கள் யாவும் பிறப்புரிமையியலில் சர்வசமனாதலால் இலகுவில் நோய்த் தாக்கத்தாலோ அல்லது சாதகமற்ற கால நிலையாலோ முழுமையாக அழியலாம்.

இலங்கையில் Orchid தாவரங்கள், தேயிலைத் தாவரங்கள், உருளைக் கிழங்குத் தாவரம் என்பன இம்முறையில் விருத்தி செய்யப்படுகின்றது.

* * *

புதிர் இல: 07

**A,B என்னும் இரு குழாய்கள் ஒரு தொட்டியை முறையே 15,20 நிமிடங்களில் நிரப்பும். இரண்டு குழாய்களும்திறந்து விடப்பட்ட 4நிமிடம் கழித்து B நிறுத்தப்பட்டது. தொட்டி நிரம்ப எவ்வளவு நேரம் ஆகும்.**

சரியான விடையை கூப்பனில் எழுதி 19.07.2002 இதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பத்திராதிபர்,
யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா.விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

சரியான விடை எழுதும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா வழங்கப்படும்.

*புதிர் இல.04*
*சரியான விடை*

முதலாவது குவியலில் உள்ள குச்சிகள் - 22
இரண்டாவது குவியலில் உள்ள குச்சிகள் - 14
மூன்றாவது குவியலில் உள்ள குச்சிகள் - 12

*சரியான விடை எழுதி அனுப்பிய பலரில் பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்.*

1.சின்னத்தம்பிகௌதமன்
கரம்பைக்குறிச்சி கிழக்கு
வரணி.

2. S.ரவீந்திரராஜா
மானிப்பாய் வட கிழக்கு,
மானிப்பாய்.

3.அருணாசலம் மீனலோசனி
கிராம்புவில்
சாவகச்சேரி.

பரிசுப்பணம் அன்பளிப்புச் செய்வோர்

**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்

**குறிப்பு: புதிர்ப் போட்டிக்கான விடைகளை அனுப்புவோர் தமது முழுப் பெயரையும் முழுமையான அஞ்சல் முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடவும்.**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 07**

சரியான விடை :- ..............................
முழுப்பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
கையொப்பம் :- ..............................

# அண்ணல் காந்தியின்

# கஸ்தூரி திலகம்

**பரணீதரன்**



வரவர சாதாரண கஷ்டங்களையே என்னால் தாங்க முடிவதில்லை. ஹரிலாலின் குழந்தை விஷ ஜுரத்தால் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டதிலிருந்து மனசே சரியில்லை. இரண்டு வயது கூட நிரம்பாத பச்சைப் பிள்ளை, நினைக்க நினைக்கத் துக்கம் தொண்டையை அடைக்கிறது. பாவம், அந்தப் பெண் குலாப் என்ன பாடு படுகிறாளோ?

வருடம் 1918, சம்ப்பரானில் தோட்டத் தொழிலாளர்களுக்காகப்பட்ட சிரமமும், 'கெடா' விவசாயிகளுக்காகப்பட்ட அவதியும், அகமதாபாத் மில் தொழிலாளர்களுக்காக இருந்த உண்ணாவிரதமும் சேர்ந்து, காந்தியின் உடல் சுகத்தை வெகுவாகப்பாதித்திருந்தன. வேர்க்கடலையும், எலுமிச்சம் பழச்சாறும், ரொட்டியும் வெண்ணையும் தான் அவருடைய உணவு. அடிக்கடி உண்ணாவிரதம் இருப்பதற்காகவே அரைப் பட்டினி கிடந்து பழகிக் கொண்டாரோ என்னவோ!

இந் நிலையில் தான் காந்தி பட்டாளத்திற்கு ஆள் சேர்க்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஓயாத அலைச்சல், போகுமிடமெல்லாம் பேச்சு, உறக்கத்தை நீத்தார். உணவைக் குறைத்தார். ஆச்சிரமத்தில் கஸ்தூரிபா கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள். 'இவருக்குத் தனக்காகவும் தெரியவில்லை. சொன்னாலும் புரியவில்லை. நான் என்ன செய்வது?''

எங்கேயோ ஒரு கிராமத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவருக்குத் திடீரென்று உடல் நிலை மோசமாகி விட்டது. வயிற்றுக்கடுப்பினால் மிகவும் அவதிப்பட்டார். சாப்பாடு இறங்கவில்லை. படுத்த படுக்கையாகி விட்டார். உடனே அவரை ஆச்சிரமத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டார்கள்.கணவர் வெளியே போவதும், அவர் திரும்பி வரும்போது தான் கண் கலங்கி நிற்பதும் கஸ்தூரிபாவுக்குப் பழக்கப்பட்டு ,விட்டது. ''நான் அப்போதே சொன்னேனே, கேட்டீர்களா?'' என்று இடித்துக் காட்டும் நேரமில்லை அது. முடிந்த வைத்தியத்தையெல்லாம் செய்து பார்த்தாக வேண்டிய தருணம். ஒரு டாக்டர் வந்தார். மருந்து கொடுத்தார். 'ஆங்கில மருந்து' அருந்த முடியாது என்று சொல்லி விட்டார் காந்தி. மற்றொரு டாக்டர் வந்தார். '''இன்ஜெக்ஷன்' கொடுக்கிறேன்'' என்றார். ''வேண்டவே வேண்டாம்'' என்று கூறிவிட்டார். இன்னொருவர் வந்தார். அவரும் காந்தியைப் போலவே ஒரு 'கிறுக்கு' வைத்தியர். உடலில் ஐஸ் வைத்துத் தேய்க்கிறேன் என்றார். ஒப்புக் கொண்டார் காந்தி.

அதற்குப் பிறகு அவருக்குச் சற்றுக் குணம் காணப்பட்டது. பசியெடுத்தது. வைத்தியருக்குத் தெம்பு வந்தது! 'முட்டை சாப்பிடுங்கள்' என்றுயோசனை கூறினார். 'முடியாது' என்று கூறிவிட்டார் காந்தி. 'பால் குடியுங்கள்' என்று சொல்லிப் பார்த்தார். ''பாலா? அந்தப் பேச்சையே எடுக்காதீர்கள். பாலைக் கையால் கூட தொடுவதில்லை என்று சத்தியம் செய்திருக்கிறேன்.'' உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தாலும் உண்மைக்குத் துரோகம் இழைக்க மறுத்தார் காந்தி. இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கஸ்தூரிபா கணவனின் அருகில் வந்தாள்.

''இதோ பாருங்கள்! நீங்கள் பசும் பாலோ, எருமைப் பாலோதானே குடிக்கக் கூடாது என்று விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? சரி, வேண்டாம். ஆனால் ஆட்டுப்பாலைக் குடித்தால் தவறில்லையே? கொண்டு வரச்சொல்லட்டுமா?'' என்று கேட்டாள். படிக்காதவள் பக்குவமாகப் பேசி விட்டாள். சத்திய நெறியில் ஒரு சமரசப் பாதையைக் காட்டினாள். அந்தச் சந்தர்ப்பத்தை காந்தியும் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டார். ஆட்டுப்பாலைக் குடிக்க ஒப்புக் கொண்டார். உடல் வலிமை குன்றியிருந்தால் மன வலிமையும் சற்றுத் தளர்ந்ததோ?

உயிர் வாழ வேண்டும் என்ற ஆசையால் காந்தி ஆட்டுப்பால் குடிக்க ஒப்புக்கொண்டார் என்பதை விட, 'மக்களுக்குச் சேவைபுரிய இந்த உடல் இருக்க வேண்டுமே' என்ற கவலையால் கஸ்தூரிபாவின் யோசனையை ஏற்றுக் கொண்டார் என்று சொல்லுவதுதான் பொருந்தும். அதெப்படியோ, முன்பு கஸ்தூரியைக் கணவனுக்குரிய அதிகாரத்தால் பணிய வைத்தார் காந்தி. இன்று அவரை மனைவிக்குரியஅன்பால் பணிய வைத்தாள் கஸ்தூரிபா.

காந்திக்கு மெள்ள மெள்ளக் குணமாகிக் கொண்டு வந்தது. ஒரு நாள் மாலை. காந்திக்கு ஆச்சிரமவாசி ஒருவர் அன்றைய பத்திரிகையில் வந்துள்ள செய்திகளை விவரித்துக் கொண்டிருந்தார். கஸ்தூரிபா காலைப் பிடித்துக் கொண்டிருந்தாள். அப்போது அந்தத் தொண்டர் கேட்டார். ''பாபு, ஒன்று கேட்கிறேன். 'பா' கோபித்துக் கொள்ள மாட்டார் என்று நினைக்கிறேன். ஆச்சிரமத்தில் ஒருவரும் காப்பியோ, தேநீரோ குடிக்கக் கூடாது என்று நீங்கள் மிகவும் கண்டிப்பாக இருக்கிறீர்களே. 'பா'வுக்கு மாத்திரம் ஏன் சலுகை தந்தருக்கிறீர்கள்? அவர் மட்டும் தனியாகக் காப்பி போட்டுக் குடிக்கிறாரே?'' என்று கேட்டார். இப்படி ஆச்சிரமத்திலுள்ளவர்கள் காந்தியுடன் ஓய்வு நேரங்களில் தமாஷாகப் பேசும் பழக்கம் உண்டு.

அபபடிச சொனனவரை 'பா'முறைத்துப் பார்த்தாள்.

''கஸ்தூரி, ஏன் அவனை முறைக்கிறாய்? அவன் கேட்பது நியாயம்தானே?'' என்று அவளிடம் சொல்லி விட்டு, காந்தி கேள்வி கேட்டவரைப் பார்த்துச் சொன்னார். ''பாவம், 'பா'! தன் மனத்துக்குப் பிடித்த எத்தனையோ விஷயங்களை எனக்காகத் தியாகம் செய்திருக்கிறாள். தகப்பன் வீட்டில் எவ்வளவோ செல்லமாக வளர்ந்தவள் அவள். செல்வத்தில் மிதந்தவள். என்னைக் கட்டிக் கொண்ட பிறகு சுகம் என்பதையே அனுபவிக்கவில்லை. அவள் மனம் புண்படும்படி நான் எத்தனையோ முறை நடந்து கொண்டிருக்கிறேன். இந்த அற்பக் காப்பி விஷயத்தில் கண்டிப்பாக இருக்க நான் விரும்பவில்லை. அவளுக்கு இருப்பதெல்லாம் இந்த ஓர் ஆசை தானே'' என்று சொன்னார்.

ஆச்சிரமவாசியின் கண்களில் நீர் துளிர்த்தது. 'ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டோம்' என்று வருந்தினார் அவர். அதைக் கண்ட கஸ்தூரிபா அவரைச் சிரிக்க வைப்பதற்காக, கணவனைப் பார்த்து, ''இவன் ரொம்ப யோக்கியன்மாதிரி வந்து கேட்கிறேன். நேற்றுக் கூட நான் காப்பி கலந்து கொண்டிருந்த போது அறைக்குள் எட்டிப் பார்த்து 'எனக்கும் ஒரு வாய் கிடைக்குமா?' என்று என்னிடம் கெஞ்சினான். போனால் போகிறது என்று கொடுத்தேன்...'' என்று சொல்லி விட்டுச் சிரித்தாள். காந்தியும் சேர்ந்து சிரித்தார்.

சற்றைக்கெல்லாம் கஸ்தூரிபா ராட்டையை எடுத்து வைத்துக் கொண்டு நூற்கத் தொடங்கினாள். அப்போது யாரோ காந்தியிடம் ஒரு தந்தியைக் கொடுத்து விட்டுப் போனார். அதைப் பிரித்துப் பார்த்து விட்டுக் காந்தி, 'ஹரே ராம்' என்று தலையில் கை வைத்துக்கொண்டார்.

என்ன செய்தி? என்று பதட்டத்துடன் கேட்டாள் கஸ்தூரிபா.

''விஷஜுரத்தில் குலாப் இறந்து விட்டாளாம், பாவம் மிகவும் தங்கமான பொண்ணு.''

''ஐயோ, குலாப் ஐயோ, ஹரிலால்'' அலறிவிட்டாள் கஸ்தூரிபா.

அவள் நூற்றுக் கொண்டிருந்த இழை பாதியில் அறுந்து விட்டது!

முதல் உலகப் போரின் இறுதியில் 'ப்ளு ஜுரம்' என்ற விஷக் காய்ச்சல் உலகமெங்கும் பரவி, பெருவாரியான மக்களைப் பலி வாங்கிச் சென்றது. அது இந்தியாவிலும் கோர தாண்டவம் புரிந்தது. ராஜ் கோட்டில்தாயாரையும் இரண்டு வயதுக் கைக் குழந்தையையும் பலி கொடுத்து விட்டு, உயிருக்குப் பயந்து மற்றக் குழந்தைகளுடன் அருகிலுள்ள கிராமத்திற்குப் போய் விட்டாள் குலாப். பழி வாங்கத் துடிக்கும் பகைவன் போல் அங்கும் அவளைத் துரத்திக் கொண்டு வந்தது, கல் நெஞ்சம் படைத்த அந்தக் காய்ச்சல். ஒரு பாவமும் அறியாத அந்தப் பேதையின் உயிரையும் பறித்துக்கொண்டு போய் விட்டது.

நாட்டுப் பெண்இறந்து விட்ட துயரச் செய்தி கஸ்தூரிபாவுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. தன் மகன் ஹரிலாலுக்குக் குலாப் உறுதுணையாக இருந்து அவன் வாழ்வை மலரச் செய்வாள் என்று எதிர்பார்த்தது வெறும் கானல் நீராகி விட்டதே என்று கலங்கிப் போனாள். எழில் கூட்டிநறுமணம் பரப்பிக் கொண்டிருந்த ரோஜா - குலாப் - இத்தனை விரைவில் வாடிக் கருகி விடும் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.

இரண்டு நாட்கள் பிரமை பிடித்தவள் போல்தான் இருந்தாள் கஸ்தூரிபா. உணவைக் கண்டாலே வெறுப்பாக இருந்தது அவளுக்கு. படுத்துக் கொள்வாள். கண்ணை மூடிக் கொள்வாள். ஆனால் உறக்கம் வராது. கண்ணைச் செருகும். பாதிக் கனவும் பாதி நனவுமாக ஏதேதோ காட்சிகள் கண்ணாமூச்சி விளையாடும்.

ஒரு கணம், ஹரிலாலின் கல்யாணம் அமர்க்களப்படும். மங்கள வாத்தியம் முழங்க அங்கங்களிலெல்லாம் அழகு சொட்ட, மேனியெல்லாம் தங்கமும் வைரமும் மின்ன, குலாப், தலை குனிந்து, தளிர் நடை பயின்று மணமேடை நோக்கி வருவது போலவும், தான் அவள் கையைப் பிடித்து மகன் கையில் தருவது போலவும், மாமியாராகி விட்ட மகிழ்ச்சியில் பூரித்துத் திளைப்பது போலவும், பனித்திரையில் படம் தீட்டியது போல் ஒரு காட்சி நிழலாடும், அவள் ஆசை நிராசையானதற்கு அடையாளமாக.

நல்ல விழிப்பு வந்துவிடும். ஊற்றுப் போல் பீறிட்டு வரும் கண்ணீரைத் துடைத்துக் கொள்வாள். புரண்டு படுப்பாள். அடுத்த கணம், நனவுக்கும் கனவுக்குமிடையே உசலாடும் இன்பமான இடைவெளியில் மீண்டும் மிதந்து கொண்டிருப்பாள்.

'ஹரிலாலின் குழந்தைகள், கந்தல் ஆடைகள் அணிந்து, எலும்பும் தோலுமாகக் கைகளில் கிண்ணங்கள் ஏந்தித் தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அழுது அழுது சிவந்து வீங்கிய கண்களுடன் ஹரிலாலும் பின்னால் தள்ளாடி நடந்து வருகிறான். பெற்ற வயிறு பற்றி எரிகிறது. 'ஐயோ ஹரிலால், என் கண்மணிகளே, நான் இருக்கும் போது நீங்கள் ஏன் பிச்சை எடுக்க வேண்டும்?'' என்று கதறி விடுகிறாள் தாய்.'

கஸ்தூரிபாவின் குரல் கேட்டு காந்தி தம் குடிசையிலிருந்து விரைந்து வந்தார். அவள் உடலெல்லாம் வியர்த்து விட்டிருந்தது. அவள் ஏதோ பயங்கரக் கனவு கண்டிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டு, அவள் அருகில் உட்கார்ந்து புடைவைத் தலைப்பால் வியர்வையைத் துடைத்து விட்டார்.

''இதோ பார் கஸ்தூரி, நீ ரொம்ப தைரியசாலி என்று நான் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

சாதாரண மரணத்தைக் கூட உன்னால் தாங்க முடியவில்லையே! ஏன் அதையே நினைத்து உருகிக் கொண்டிருக்கிறாய்?''

''இது சாதாரணச் சாவா? அவளுக்குச் சாகிற வயசா இது? இந்த அக்கிரமம் கடவுளுக்கே அடுக்காது.''

காந்தி சிரித்துக் கொண்டார்.

''சாவதற்கென்று ஒரு வயது இருக்கிறதா கஸ்தூரி? பிறந்தவர்களெல்லாரும் ஒரு நாள் இறக்கத் தானே வேண்டும்?''

''இந்த வேதாந்தம் எனக்கும் தெரியும்! நீங்களும் ஒரு பெண்ணாகப் பிறந்திருந்தால் நான் படும் வேதனை உங்களுக்குப் புரிந்திருக்கும். அவளைப் போல் ஒரு பெண் கிடைப்பாளா? என்ன குணம், என்ன சாந்தம், எத்தனை அடக்கம்..!'' தன் நாட்டுப் பெண்ணைப் பற்றிப் பெருமையாகப் பேசினாள் கஸ்தூரிபா. அவள் ஓர் அபூர்வ மாமியார்!

''அவளைப்பற்றி நீ எனக்குச் சொல்ல வேண்டாம். அவள் நல்ல புத்திசாலிப்பெண், அவள் எழுதும் கடிதங்களெல்லாம் கவிதைகள் போல் இருக்கும். என்ன செய்வது? ஹரிலாலுக்குக் கொடுத்து வைக்கவில்லை.'' உணர்ச்சி பொங்கி வந்தது காந்திக்கு. அதை அடக்கிக் கொண்டார். அவர் மகாத்மா வாயிற்றே! கஸ்தூரியும் முயன்றாள். ஆனால் முடியவில்லை. அவள் பெண்ணாயிற்றே!

''பாவம் தாயில்லாத அந்தக் குந்தைகளை நினைத்தால் மிகவும் சங்கடமாயிருக்கிறது.அவர்களை ஆச்சிரமத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து விடப் போகிறேன். நான் உயிருடன் இருக்கும்வரை என் செல்வங்களை ஒரு நாளும் திண்டாட விடமாட்டேன்.''

காந்தி சற்று மௌனமாக இருந்தார்.

''என்ன யோசிக்கிறீர்கள்? 'ஆச்சிரமம் பொதுப் பணத்தில் நடக்கிறதே, இங்கே சொந்தக் காரர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது சரியா? என்று தானே யோசிக்கிறீர்கள்? எனக்குத் தெரியும். நான் சம்பாதித்து அவர்களுக்குச் சோறு போடுகிறேன். நான் ராட்டையில் நூற்கும் சிட்டங்களை விற்றால் பணம் வராதா?'' ஆத்திரத்துடனேயே பேசினாள் கஸ்தூரிபா.

''ஓ! அவர்கள் தாராளமாக வந்து தங்கட்டுமே! எனக்கும் குழந்தைகள் இருந்தால் பொழுது போகும்'' எனப் பரிவுடன் பதிலளித்தார் காந்தி.

அறுந்த இழையின் இரு முனைகளையும் ஒட்ட வைத்து மீண்டும் வாழ்க்கைச் சர்க்காவில் நூற்கத் துவங்கினாள் கஸ்தூரிபா.

மனைவியைப் பறிகொடுத்த ஹரிலால் ஈமச்சடங்குகள் முடிந்த பிறகு குழந்தைகளை அழை த்துக் கொண்டு கல்கத்தாவிற்கே போய் விட்டான்.

(தொடரும்)

---

## சிந்தனையாளர் சுவையான அனுபவங்கள்

### உயிரின் மதிப்பு

ஒரு நாள் மாலை வேளையில் நபிகள் நாயகம் அவர்கள் தன் வீட்டு வாசலில் தோழர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்.

அச்சமயம் அத்தெரு வழியாக அமைதியான சவ ஊர்வலம் ஒன்று சென்றது. அதைக் கண்டதும், அதற்கு மரியாதை செய்யும் வகையில் நபிகள் நாயகம் அவர்கள் உடனே எழுந்து நின்றார்கள். ஆனால் உடனிருந்த மற்றத் தோழர்கள் எழுந்திருக்கவில்லை.

''பெருந்தகையே! அது ஒரு யூதனுடைய சவம் அல்லவா! அதற்குத் தாங்கள் ஏன் மரியாதை செய்கின்றீர்கள்!'' என்று வினாவினார்கள்.

அதைக்கேட்ட நபிகள் நாயகம்அவர்கள் இளநகை புரிந்து கொண்டார்கள். ''அதனால் என்ன? அவருக்கும் ஆத்மா இருக்கத்தானே செய்கிறது? எந்த உயிரையும் நாம் இழிவாக எண்ணுதல் கூடாது. உலகில் தோன்றியுள்ள உயிர்கள் அனைத்தும் ஒரே மதிப்புக் கொண்டவை தான்.'' என ஆழ்ந்த கருத்துடன் விரித்துரைத்தார்கள்.

நபிகள் நாயகம் அவர்களின் கருத்து மொழிகளைக் கேட்ட தோழர்கள் அமைதியுடன் சிந்திக்கலாயினர்.

### எளிய உடைகள்

மகாத்மா காந்தி வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்துக்குப் போயிருந்தார்.

மன்னரைச் சந்தித்து உரையாட வேண்டும் என்றால் அதற்காக சந்திக்க வருபவர் ஆடம்பரமாக உடையணிந்திருக்க வேண்டும் என்பது அங்கு மரபு.

காந்தியடிகளோ இடுப்பில் ஓர் வேஷ்டி அணிந்து மார்பில் ஓர் துணியைப் போர்த்திக் கொண்டிருந்தார்.

இங்கிலாந்தின் மரபு தளர்த்தப்பட்டு அந்த உடையுடனேயே மன்னரைச் சந்திக்கக் காந்தியடிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பின்னர் பத்திரிகை நிருபர்களுடன் காந்திஜி உரையாடிக் கொண்டிருந்த போது, ஒரு நிருபர் மன்னரைச் சந்திக்கும் போது இவ்வளவு குறைந்த ஆடையுடன் ஏன் சென்றீர்கள்? என்று கேட்டார்.

காந்தி சிரித்துக் கொண்டே, ''உங்கள் மன்னர் என்னைப் போன்ற நான்கு பேர் அணியக்கூடிய உடை களை அவர் ஒருவரே அணிந்திருக்கின்றார். அதனால் தான் என் உடைகளை குறைத்துக் கொண்டேன்'' என்றார்.

### கழுதை கிடைத்தது

பிரிட்டிஷ் பிரதமராக இருந்த லாயிட் ஜார்ஜ் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார்.

''உங்கள் தாத்தா கழுதை வண்டி ஓட்டியவர் என்பது உமக்கு நினைவிருக்கிறதா?'' என்று கூட்டத்தில் ஒருவன் கேட்டான்.

''என் தாத்தாவின் வண்டி போன இடம் தெரியவில்லை; கழுதை உயிரோடிருப்பதை இங்கே கண்டு பிடித்து விட்டேன்'' என்றார் அமைதியாக.

# மௌனத்தின் தேடல்கள்

## ஏன் ஏக்கம்....?
துன்பப் படுகிறாய்
துயில இடமின்றி
துயர் துடைத்திட
துணிந்திடும் சில கரங்கள்
இதோ உன்னை நோக்கி.

*T.தவகீஷன்,*
*அளவெட்டி.*

## கதறல்!
கனடாவின் கடைத்தெருவில்
நம்ஊர்க்காளை (காடை)யர்கள்
கத்திச் சண்டை செய்ததிலே
உன் கடைசி மகன்
மாண்டு போன சேதி கேட்டு
கதறுகின்றாயோ...?

*ப. விதுர்சன்,*
*கல்வியங்காடு.*

## அமைதி தேடி!
அமைதியாக வழிபடும்
ஆலயங்களில் எல்லாம்
ஒலி பெருக்கியின்
அலறல் சத்தம் - என்
அமைதியைக் கெடுப்பதால்
காதைப் பொத்தி செல்கின்றேன்
அமைதி தேடி.

*P. சூர்யா,*
*இணுவில்.*

## அழைத்து விடு!
பாழ்பட்ட உலகமடா
பழசாகிப் போய்விட்டால்
பாரினிலேஎத்தனை கொடுமையடா
இறைவா இனிப் போதும்
என்னை நீ அழைத்துவிடு.

*நா.ரவி,*
*தாவடி.*

## எதனால்!
தள்ளாத வயதில் - இவர்
தலையைத் தாங்குவது
முதுமையின் சுமையாலா
அல்லது
புரிந்துணர்வு ஒப்பந்தம்
உதிர்ந்து போனால் - அதில்
அரும்புகளின் வாழ்வு
கருகி விடும்
எனும் வேதனையாலா?

*க. அருள்மொழி,*
*பருத்தித்துறை.*

## துணை யார்?
தலை நரை வந்த
உடல் திரையுண்டு
நிழல் கரை காணப் போகும்
நிறை பழம் ஒன்று
தலை நாறு துயருண்டு
உடன் போக யாருண்டு.

*அ. மீனா,*
*சாவகச்சேரி.*

## பாட்டா!
ஈர் பத்து வருடத்தின் பின்
ஊர் வந்த போதும்
தள்ளாடும் வயதினிலும்
தளராத இந்தச் சோகம் ஏன்?
பரம்பரைக்காய் நீ அன்று
தேடி வைத்த உன்
மாடியைப் பார்த்தா?
கரம் கூப்பிக் கும்பிட்ட
பிள்ளையாரில்லாமல்
பிரமாண்டமாய் இருக்கும்
புத்தரைப் பார்த்தா....?

*பொ.தினேஸ்குமார்,*
*ஆழியவளை.*

## சமாதானம்!
நாட்டில் சமாதானம் பூக்காதோ!
எம் உறவுகள் பூரித்திடவே
செவிகளைச் சாய்த்து
சமாதானத்தையே
விரும்பி ஏங்குகின்றது
எங்கள் முதியோரது கரங்கள்.

*R. வாசன்,*
*தும்பளை.*

## எதை இழந்தாய்?
கணவனை இழந்ததால்
உன்னுடல் வெள்ளாடை போர்த்தது
உன் தலை எதை இழந்ததால்
வெண்மையானது என்று தானா
தலை மேல் கை வைக்கிறாய்.

*K. பிரதீபன்,*
*யா.இந்துக்கல்லூரி.*

## முதுமை!
முதுமையின் வாசலில்
மூதாட்டி இவள்
மனம் வருந்தி நிற்பதேன்
எண்ணற்ற துன்பங்களைக்
கடந்தும்
ஏக்கமுற்றுத் தளர்வதேன்.

*த. தயா.*
*கல்வியங்காடு.*

## மானிடம்!
நான்
தேடியலைவது
சொந்தங்களையல்ல
தொலைந்து போன
மானிடங்களை.

*க. நாகேஸ்வரா,*
*சண்டிலிப்பாய்.*

## தலை விதி!
தொண்ணூறு ஆகியும்
தொல்லைகள் தொலையாமல்
தலைவிதியை நொந்து
தலையில் கரம் குவித்து
தவிக்கும் தாயே – உன்
தவிப்புக்குக் காரணம்
பந்த பாசமா? பாழான யுத்தமா?

*நயினை முத்து.*

## ஒப்பமிடு!
வேகப் போகும் கட்டை என்று
வேண்டாமென்றே விட்டனர்
பார்க்க வேண்டும் உன்னை
என்றால் - பத்திரத்தில்
ஒப்பமிடு என்றனர்
கண்மணி போன்ற என்
பிள்ளைகளே - என்னை
கைவிட்டுச் சென்றதனால்
இங்கு நான்
தலையில் கையுடன்.

*ஜெ.தனேஸ்,*
*நல்லூர்.*

## சொல்லி அழ வார்த்தை இல்லை!
உதிர்கின்ற சருகுகள்
இருந்திட்ட வேளை
வளர்கின்ற முளைகள்
சருகாகிப் போனதுவோ
வருகின்ற இருளிலும் ஒளி
ஒன்று வாராதோ?
தேசத்தில் சுமைகள்
பலவாய் ஆனதனால்
தாயவளின் தலையும் கனத்ததுவோ?

*தி. ஜெயராஜ்,*
*நல்லூர்.*

## மானுடத்தின் மழலை!
பல் விழுந்து போனதால்
சொல் இழந்த பாட்டியே
மரணம் நிஜமானது எனினும்
மனம் சாந்தி கொள் - ஏனெனில்
மறுபிறப்புனக்குண்டு
மீண்டும் இம் மண்ணில்
மானுடத்தின் மழலையாய்.

*சிவா,*
*முள்ளானையூர்.*

## ஏன் பிறந்தேன்!
ஏன் பிறந்தேன் இந்த நாட்டில்
மக்கள் எல்லாம் வெளிநாட்டில்
கொள்ளி வைக்கக் கூட ஒரு
பிள்ளையில்லையே
எள்ளி நகையாடுகின்றார்
இங்கு என்னையே.

*ஆனந்தகுமார்,*
*கொக்குவில்*



## இடப் பெயர்வின் அவலம்!
கூடி வாழ்ந்தீர்கள்
கோடி நன்மை பெற்றீர்கள் – இன்று
பாடுபட்டுத் தேடிய செல்வம் எல்லாம்
பாதையிலே விட்டு விட்டோம் என்று
வாடி நிற்கின்றீர்களா.... அம்மா...?

*S. தேன்மொழி,*
*மீசாலை.*

## துன்பம்!
நிஜங்கள் கூடக்கனவாகிப் போனதால்
கானல் நீர் போல் என் வாழ்க்கை
இது கால வரை என் வாழ்க்கையில்
சுவாசித்தது துன்பம் மட்டும்தான்.

*வா.ரெலன்சியா,*
*மீசாலை.*

## கனவு கண்டாயோ!
ஓ பாட்டி
பிரிந்த உன் உறவுகளை
கனவில் கண்ட குழப்பமா?

*பா பகீரதி*
*அளவெட்டி*

## சமாதானத்தைத் தேடி!
மூதாட்டியே!
முற்றிலும் வெள்ளாடை
அணிந்து தாங்கள்
தள்ளாத வயதினிலே
தடம் புரளுகிறீர்
சமாதானத்தைத்
தேடியா?

*க. திருநிபன்,*
*கரவையூர்.*

## புரிய வில்லையே!
வெடியோசை கேட்டே - தன்
இளமைக் காலம் போனதால்
பட்டாசின் சத்தம் கூட
புரியவில்லையே - இந்த
பழம் வேருக்கு.

*க. ரமணன்,*
*ஆத்திசூடி வீதி.*

## தலை விதியோ....!
தள்ளாத வயதிலும்
தலைப்பாரம் கரந்தாங்கி
தன்கையே தனக்குதவியென
தலைவிதியே இது வென்று
தள்ளாடித் தள்ளாடித்
தளர்வுற்றுச் செல்வதனை
தாயன்பு கொண்டோரே
தயவுடனே பார்ப்பீரோ.

*தி.மயூரகிரி,*
*நீர்வை.*

## எங்கு செல்கிறாய்?
வெள்ளையுடை தரித்து
வெண்முடியாய் நீயும்
தள்ளாடும் வயதினிலே
தலையிலே கை வைத்து
சமாதானச் சின்னமாய்
எங்கு செல்கிறாய்?

*யோ. தமிழினி,*
*கல்வியங்காடு.*

## தனிமை!
தனிமையின் கொடுமையுடன்
தளர்ந்த மனத்துடன்
தள்ளாடியே இவள்
தலைச் சுமையுடன் செல்லுமிடம்
முதியோர் இல்லமா?

*கு. சிவகுமார்,*
*யா.ஸ்ரீசோமாஸ்கந்தா.*

## முளைக்கட்டும் விழுதுகள்!
முதுமையது கொடுமையல்ல
முன்னிழுக்கும் நரகமல்ல
முளைத்து வரும் நவ உலகை
முனகுவதால் லாபம் என்ன?
மூதறிவு உம்மிடமே
முளைக்க விடும் விழுதுகளை.

*ச.பாரதி,*
*வேலணை.*

## பாவி நான்!
ஐயோ என் தெய்வமே என் செய்வேன்
குடும்பச் சுமையில் கட்டுண்டேன்
சாதனைகள் பல படைத்தேன் - அன்று
வேதனை தாங்காது துடித்தேன் - இன்று
சோதனை மேல் சோதனை
வேண்டாம் இறைவா
சாவுதனை தந்திடுவாய் பாவி எனக்கு.

*சிறி ஆரணி,*
*நல்லூர்.*


## தலை வலிக்கிறதா..?
சொந்த பந்தமில்லை
சொத்து சுகமில்லை
அரவணைக்க யாருமில்லை
எல்லாவற்றையும் எண்ணும் போது
பெரியவருக்குத் தலைவலிக்கிறதோ?

*A.S,*
*கொக்குவில்.*

## தாமதமேன்!
தலை வெடிக்குது - முருகா
தரங்கெட்ட தரணியிலே
தறுதலைகளின்
தடுமாற்றம் கண்டு
தடைபோட ஏனின்னும்
தாமதம்...?

*க. அருந்தா,*
*முடமாவடி.*

## மௌனத்தின் தேடல்கள் – 21



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 20.07.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் –21
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.



# கவிதைக் கலசம்





## தெய்வம் அவளன்றோ...!



பாசம் என்னும் மலரெடுத்து - அதில்
பண்பெனும் தேன் கலந்து,
அறிவெனும் நறுமணம் வீச,
அன்போடு ஊட்டிவிடும்
ஆரணங்காம் அன்னையின்
அன்பு மொழிக்குஅடுக்குமா
பல கோடி - என்புருக
எமக்காகத் தனையுருக்கி
தாயானவள் பின் தரணியில்
யாம் - தலையெடுக்கத் தினம்
தன்னுறக்கம் மறந்தவள்
இன்னும்.....
தன்னலமற்று எம் நலம்
கொண்ட தாயவள் மனசதை
புண்பட வைத்திடல் தகுமோ
மண் மீது யாம் என்றும்
மாண்புடன் போற்றிடும்
தெய்வம்அவளன்றோ...

வீ. றஞ்சி,
யாழ்பல்கலைக் கழகம்.

## நீ வருவாயா...?



பிரிவுகள் உறவை வளர்க்கும் என்பார்கள்,
பிரிவு வந்த பின் தான் நான் உணர்ந்தேன்!
பிரிவே நீண்ட காலமானால்... என்னால்
முடியாது அன்பே!
பிரியமானவனே பிரிவுத் துயரை மாற்ற
பிரியமுடன் ஓடி வரமாட்டாயா?!

காதலென்றால் வெறும் உணர் வென்று இருந்தேன்!
காதல் வந்த பின்னே உயிரின் பகுதியென்று அறிந்தேன்!
காதல் எனக்குள் மொட்டவிழ்த்து மலர்ந்த போது,
காதல் பூவை எனக்குள்ளே மலரவைத்த
காதல் மன்னா, உனை எங்கும் காண முடியவில்லையே.!

கார்த்தி
அராலி தெற்கு.

## காத்திருக்கிறேன்!



சிநேகிதியே......
கரு மேகம் சூழ்ந்த மழைக் காலமாய்...
இருண்டு கிடக்கிறது என் வாழ்க்கை..
இடி என்னும் வெடி முழக்கம்...
என் இதயத்திலும் விழுந்து விட்டது...
சிநேகிதியே.....
பருவகால மழை என்னடி...
என் கண்ணீருக்கு அது பெரிதில்லை...
அடி மனதில் உள்ள...
சிற்றுயிர் மட்டும் - நீ
மீண்டும் வருவாய் என்று துடிக்கின்றது....
அது வரை காத்திருக்கின்றேன்....

நா.சுரேஷ்
நயினை.

## சமாதானம்!



சீரான எம்வாழ்வு
சீர் குலைந்து போய்
சிறகொடிந்த பறவைகளாய்
துடிதுடித்துப் போய்
சிறைவாசம் அனுபவிக்கும்
சித்திரவதை போய்
மூட்டை கட்டிச் செல்லும்
அகதி நிலை போய்
சீக்கிரமய் வர வேணடும்
நிலைத்து நிற்கும் சமாதானம்.

றெ.நிசாந்தன்.
நல்லூர்.

## ஒரு தலைக் காதல்

இன்னமும் என்
இதயத் தபால் பெட்டிக்குள்
முகவரியிடப்படாத
மொட்டைக் கடிதமாய்
உனக்காக நான் வரைந்த மடல்
உறங்கிக் கிடக்கிறது...!

கே- விஷி,
குடத்தனை.

## கவிதை வரும்!

ஆண் பெண் காதலித்தால் தான்
கவிதை வருமா?
கண்ணீர் வடித்துப்பாருங்கள்
காதலுக்காக அல்ல
ஈழ நாட்டின் தலை கீழ் நிலைக்காக
தனித்திருந்து தவியுங்கள்
வாழ்வா சாவா என்று
வான் வெறிக்கும் வாலிபர்களுக்காக
வருந்துங்கள்
ஏமாற்றமும் எதிர் பார்ப்பும்
எதிர்காலமுமான
ஏழைகளை எண்ணிப் பாருங்கள்.
அறியாத பிஞ்சுகளை அடிமைப்படுத்தும்
அடி முட்டாள்களின் அரக்கக் குணத்துக்காக
அழுங்கள்.

அலை கடலாக ஆர்ப்பரிக்கும் ஆசைகளை
அடக்கி மௌனங்களை மொழி பெயர்க்கும்
ஊமைகளுக்காக உருகுங்கள்
இன்னுமின்னும் என்னென்னவோ
அதற்கெல்லாம் அகத்தில் ஈரம் சொட்டுங்கள்.
கவிதையின் கரு காதல் என்று கருதினால்
அது கவிதைக்குக் கூட வரலாமே!
எந்தன் வாழ்வின் வேதனை யாருக்கும்
சோதனையாக வேண்டாம் என்று
பிரார்த்திப்பதால் கவிதை வரும்.
இத்தனைக்கும் கவி வரும் வழியை
நீங்கள் அறிந்து விட வாய்ப்பேதுமில்லை
காதலைத் தவிர.

P.சின்னராஜா.
கல்வியங்காடு.

## விழித்தெழு!

உன் சோகங்களை
உனக்குள்ளேயே
புதைத்துக் கொண்டு
மௌனமாய்
உனக்குள்ளேயே அழு!

ஐயகோ.....
ஏ ... அபலைப்
பெண்ணே
தொடர்ச்சியாய் நீ
இப்படியோ....?
வேண்டாம்
போதும் இனியாவது
விழித் தெழு!



கொடிய இருளினுள்ளே
புதைந்திரு!

கே.எஸ்.கலா.
புன்னாலைக்கட்டுவன்.

## மலரும் பூக்களே...!

புன்னகை பூக்கின்ற
என்முகத்தில்
புது மலர்கள் என்றும் மலர்ந்ததில்லை!
சொல்லாமல் தொட்டு
செல்கின்ற தென்றலுக்கும்
தெரிந்ததில்லை ,
செல்லரித்துப் போன மனதின் ஓரம்!
வேதனைகளைக் கோர்த்து - பூ
மாலையாக்கிக் கொள்கின்றேன்
விழிகள் உதிர்க்கின்ற
நட்சத்திரங்களைச் சேர்த்து
முத்துப்பரல்களாய் வைத்துக் கொள்கின்றேன்
இதயத்தில்
சோகத் தென்றலுக்கு
துக்கப் பாய்ப் படகு பயணம் போகிறது
கலங்கரை விளக்கமோ விலத்திப் போகிறது!
நாளை.......நாளை மறுநாள்
தப்பிப் போனால்
என்றோ ஒரு நாள்
நானிலமும் நாணி நிற்க
வருவன் உங்கள் முன்
துணிவிருந்தால் இன்று,
விலத்தி நில்லுங்கள்.

நெற்கொழு தாசன்.

## நேரம் வரவில்லையோ...?



நேரம் வரவில்லையோ?
மழை நீரைத்தன் வயிற்றில்
மழலையாய்வைத்திருக்கும்
மழைக்கால மேகமே!
உனக்கின்னும் பிரசவிக்க
நேரம் வர வில்லையோ?
விடியும் பொழுதினில்
விதையாய் விழுந்திட்ட
வில்வ மர விதையே!
உனக்கின்னும் முளைப்பதற்கு
நேரம் வர வில்லையோ?
தேனான எம்முறவின்
சேதி தினம் வந்து சொல்லும்
காலை இளம் தென்றலே!
உனக்கின்னும் வீசுவதற்கு
நேரம் வரவில்லையோ?
விடியலைக் காண்பதற்கு
விதைகளாய் வீழ்ந்திட்ட
வீர மறத் தமிழர் தம்
தாகங்கள் தீர்த்திடவும்
களைப்பதைப் போக்கிடவும்
அவர் தம் உறைவிடத்தில்
பிரசன்னமாகுங்கள்.
இல்லையேல்....
இனியொரு காலமும்
உமக்கில்லை உறைவிடம்
இம் மண்ணில்.

கானகத்தீ.

# திறந்தாய் வாழி!

சிறுகதை

ஏ நைன் பாதையால் யாழ்ப்பாணம் போகப் போகின் றேன் என்னும் எண்ணமே அவள் மனதில் இனம் புரியாததோர் புது உணர்வாகப் பொங்கிப் பிரவா கித்துக் கொண்டிருந்தது. வெள்ள வத்தையின் காலி வீதியில்அவள் முன்னால் வந்து நின்றது, அந்தத் தனியார் பயணிகள் பேருந்து. பயணிகளுடன் பயணியாக அவ ளும் அதில் ஏறிக்கொண்டாள். அந்த வாகனம் அவளது பயணம் முழுவதற்குமாய் யாழ்ப்பாணம் வரை வந்துதவப் போவதில்லை என்னும் உண்மை அப்போது அவளுக்குத் தெரியாது.

அவளுக்கு வசதியாய் ஒரு இருக்கை கிடைத்தது. அவள் அதன் ஜன்னலோரமாய் இடம் பிடித்து இருந்து கொண்டாள். தன் இருக்கையின் பக்கக் கண்ணாடி கள் இரண்டையும் ஒன்றாக்கி, முற்றாக முன்பக்கமாய் தள்ளி விட்டுக் கொண்டாள். இப்போது முன் பக்கத்து ஜன்னல் இடை வெளியே இல்லாமல் மூடிக் கொண்டது. இவள் பக்கத்து ஜன்னல் அகலத்திறந்து கொண்டு விட்டது. ஓடும் வண்டியில் இரு ந்து யன்னல் வெளியே பார்த் திருப்பது அவளுக்கு மிகவும் பிடித்தமான காரியமாம்.

'சா' என்று ஒரு சத்தம் இவள் தன் பக்கம் இருந்து அனு ப்பியிருந்த யன்னல் கதவுக்ள் முன் பக்கம் இருந்து திரும்பி வந்து விட்டிருந்தன. யார் அந்த வில்லன்? மெதுவாய் எழுந்து நின்று முன் இருக்கையை எட்டிப் பார்த்தாள். பத்து வயதுக்குள் தான் இருக்கும். ஒரு பெடிப்பயல் அங்கிருந்தான். ''ஓஹோ நீதானா அந்தப் பயல்?'' 'சா' என்று இன்னுமெரு சத்தம். பின்னால் வந்திருந்த யன்னல் கதவுகளை மீண்டும் முன்னால் திருப்பி அனுப்பி விட்டாள்.

இப்போது பெடிப்பயல் எழு ந்து நின்று பின்னால் எட்டிப்பார் த்தான். அவனை அவளும் பார்த் தாள் தடிப்பயலில்லை... பொடிப் பயல் தானே!

அவளது கைக்கடிகாரத்தில் இரவு நேரம் பத்து முப்பது. இது கொழும்பு நேரம். வண்டியும் புறப் படத் தயாராகி விட்டது. வண்டி ஓடத் தொடங்கிய போது அவளது நினைவுக் குதிரையும் சேணம் பூட் டிக் கொண்டு விட்டது. நினைவு கள் சுகமானவை... நினைவுக் சுமை யானவை .... சிலுவை - சிறகு கள்...கடந்த காலங்கள் - நிகழ்கா லங்கள்....

ஓ, காலங்கள் மாறும் போது..... எத்தனை மாற்றங்கள்? அவள் பார்வையோடு வானத்துச் சந் திரனும் ஓடிவந்து கொண்டிருந் தான். யன்னல் வழியே சுகமான தென்றல் காற்று உள்வந்து அவள் முகத்தோடு மோதியது.

இப்போது முன்பக்கமிருந்து மெதுவாக மிக மெதுவாக பின் நோக்கி நகர்ந்து வந்து கொண் டிருந்தன யன்னல் கதவுகள். முன் சீற் பயலுக்கு மூளை மிக நன் றாகவே வேலை செய்கிறது. கதவு களை ஒரேயடியாய் பின்னால் நகர்த்துவது தான் பிரச்சினை தரும் விடயம் என்பதை உணர்ந்தே யிருக்கிறான். தன் பக்கத்துக் கதவும், அவன் பக்கத்துக் கதவும் நடு நாயகமாய் ஒன்றாய் சேர்ந்து வந்து நிற்பதே பிரச்சினைக்குரிய தான தீர்வு என்பது இவளுக்கும் புரியாமல் இல்லை. அதனால் நகரும் கதவுகளைக் கண்காணித்த படியே மௌனமாய் அமர்ந்திருந் தாள் அவள்.

இரு பக்க இடைவெளிகளும சம வெளிகளாய் வந்த பொழுது, தன் கைகளை முட்டுக் கொடுத்து நகரும் கதவுகளைத் தடுத்து நிறுத் தினாள். அதன் பின்பு ஒரு சிறு போராட்டம். அவன் தன் பக்கத்து இடைவெளியைக் கூட்டிக் கொள்ள முயற்சித்தான். இவள் தன் பக்கத்து இடைவெளியைக் காத்துக்கொள்ள முயற்சித்தாள்.

வண்டி தன் பாட்டில் ஓடிக் கொண்டிருந்தது. பொடிப்பயல் களைத்திருப்பான் போல... யன்னல் கதவுகள் அப்படிஅப்படியே அசை யாமல் நின்றிருந்தன. ஒரு வேளை நித்திரையாகியிருப்பானோ? எட்டிப் பார்த்தாள்! இல்லை பயல் தூங்க வில்லை. அவன் கையில் 'சாப் பாட்டுப் பார்சல் இருந்தது.ஒன்றரை லீற்றர் அளவுள்ள 'நெக்டோ' சோடாப் போத்தலும் ஒன்றிருந் தது. அவனது வலது கை உணவை வாய்க்குள் கொண்டு போய்ச் சேர்த்தது. இடதுகை சோடாவை அதே வாய்க்குள் ஊற் றியது. ஆம்! அவன் இரவு உண வை உண்டு கொண்டிருந்தான்!!

விடியும் நேரம் வவுனியா தாண்டி ஓமந்தையடியில் வந்து நின்றது எங்கள் பேருந்து.



''எங்களுக்கு மேற்கொண்டும் பய ணம் செய்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை. அதனால் நீங் கள் கொழும்பில கொடுத்த எழு நூறிலை நானூறை நாங்கள் உங் களுக்குத் திருப்பித்தரப் போறம். நீங்கள் எப்பிடியாவது போய்ச் சேருங்கோ'' என்று ஒரு அறிவித் தல் கொடுத்தார் அந்த வண்டி யின் நடத்துநர். அவர் யாரிடம், எப்போது,எப்படி அனுமதி கோரி, அது கிடைககாமல் போனது என்ற விபரம் எதையும் சொல்லவில்ல. யாருமே அவரிடம் இதுபற்றிக் கேட்கவுமில்லை.

அந்நேரம் சொல்லி வைத்தாற் போல் ஒரு சிறு வாகன உரிமை யாளர் அங்கு வந்து நின்றார். ''எங்கடை வான் யாழ்ப்பாணம் போகுது, விரும்பியவை வரலாம். ஆளுக்கு எழுநூறுரூபாய் தந்தால் போதும். அவரவரை அவரவர் வீடுகளிலையே கொண்டு போய் இறக்கிவிடுவம்'' என்றார். சிலர் உடனடியாகவே வண்டியை விட் டிறங்கி சிறுவாகனம் நோக்கி நடை யைக் கட்டினர். எத்தனையோ தூரம் பின் தள்ளி நின்றது அந்த வாகனம். பொதி சுமக்கும் கழுதை கள் போல் அதை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்... தத் தமது பயணப்பொதிகளுடன் .. அந்தச் சிலருள் அவளும் இருந் தாள். அந்தப் பயலும் இருந்தான்.

பத்துப்பேர் மட்டும் அமரக் கூடிய பின்னிருக்கைகளைக் கொண்ட அந்த 'டென்சில்' வான் உள்ளே பதினான்குபேர் அடைக் கப்பட்டனர். அத்தனை பேரின் பயணப் பொதிகளும் ஓர் ஓரமாய் குவித்து வைக்கப்பட்டன. இருவர் இருக்கக் கூடிய தான இருக்கையில் மூவர் இருந்தனர். இப்போது இவளு க்கு அருகிலேயே அத் தம்பிப்பயலும் அமர்ந்திருந்தான். இவளைப் பார்த்து மிக அந்நியோன் யமாய் ஒரு புன்ன கைகூடப் புரிந்தான்.

அந்தப்பயல் கையில் இப்போ திருந்தது ஒன்றரை லீற்றர் அளவுள்ள ஒரு 'கொக்கக் கோலா' போத்த லாகும்.

'எட்டு அப்பிள் நூறு ரூபாய்... எட்டு அப்பிள் நூறு ரூபாய்.... அப் பிள்... அப்பிள்...'' கண்டி வீதியோரம் அப்பிள் பழ வியாபாரிகள் அறை கூவிக் கொண்டு திரிந்தனர். ஒரு கிசு, கிசுப் பையில் போட்டுக கட்டப் பட்டிருந்தவை எட்டு அப்பிள் களாகும். அதில் ஒரு அப்பிள் பையைக் தம்பிப்பயல் வாங் கினான். பையின் முடிச்சை அவிழ் த்தான். ஒரு பழத்தை அதில் இரு ந்து எடுத்தான்.

அந்தப் பயல்தன் முற்பிறப்பில் நிச்சயமாய் ஒரு முயற் குட்டியா கவே இருந்திருப்பான். அவனது முன்வாயின் மேற்பற்கள் முயற் பற்கள் போலவே இப்பிறப்பிலும் அதிசயமாய் வந்து வாய்த்து விட்டி ருந்தன. அவன் தன் பற்களால் அப்பிள் பழங்களை 'நறுக், நறுக்' எனக் கடித்துச் சாப்பிடத் தொட ங்கினான். இடையிடையே கொக் கோகோலாவையும் குடித்தான்.

நீண்ட நேரக்காத்திருப்பு, வாக னங்கள் நகரும் அறிகுறிகள் இல்லை. ''எட்டரை மணிக்குத் தான் அவையள் துலாவைத் தூக்குவினம்'' என்றார் வாகன உரிமையாளர். நேரமோ பத்தரை யையும் தாண்டி விட்டிருந்தது. இப்போது தான் வாகனங்கள் மெல்ல ஊரத் தொடங்கியிரு ந்தன. இப்போது பயலின் கையில் இருந்தது ஒரு முழு 'செவன் அப்' சோடாப் போத்தல்.

சந்திரா தனபாலசிங்கம்

''ஆராவது பற்றரிகள் ஏதாவது வைச்சிருந்தால் ஒளிச்சுப் போடு ங்கோ. இல்லையோ செக்கிங் கிலை பறிகுடுப்பீங்கள்'' என்றார் வாகன ஓட்டுநர். அவரது எச்சரிக் கைக்குரல் யாரையும் பாதித்த தாக இல்லை.ஆனால் தம்பிப்பயல் மட்டும் தன் தாயாரைப் பார்த்து திருட்டு விழி விழித்தான். அவ னது 'திரு,திரு' விழிகளைக் கண்டு, ''தம்பி ஏதோ வைச்சிரு க்கிறார்.. உதாலை எங்கடை பயணமே தடைப்படப் போகுதடா தம்பி'' என்றார் வான் ஓட்டுபவர். ''இருக்கிறதையெல்லாம் தூக்கி எறியடா மோனை, நாங்கள் நேர காலத்தோடை ஊர் போய்ச் சேரு வம்'' என்றார் இன்னுமொருவர்.

தம்பி முதலில் தன் காற்சட்டைப் பையில் இருந்து நான்கு சிறிய பற்றரிகளை எடுத் தான். அதன் பின்பு ஷேர்ட் பொக் கற்றிலிருந்து, தாயின் கைப்பையி லிருந்து, பயணப்பையின் ஓரத்தி லிருந்து ..... பற்றரி பற்றரியாக வெளியே எடுத்து விட்டுக் கொண் டிருந்தான் அவன். இது கார் ஓட, இது காட்டுப்பொம்மைக்கு. இது பென்டோர்ச்சுக்கு, இது பிளே னுக்கு, இது பொக்கற் ரேடியோ பாட'' எடுக்க எடுக்க அவன் தன் வாயால் விளக்கமும் சொல்லிக் கொண்டிருந்தான். ஒன்றா இர ண்டா மறைத்து வைக்க?

''ஒப்பந்தம் எதற்காக? அப்பிள் பழம் தின்பதற்காக!'' வண்டிக் குள் இருந்துயாரோ பகிடி விட் டார்கள்

''அம்மா எப்ப எனக்கு பதி னெட்டு வயது முடியும்?''

தம்பிப்பயல் தன் தாயிடம் கேட்டான்!

* * *

# துளிர்ப்பு

கரகரவென்று காற்றினூடு மரக்கிளைகளின் உரோஞ்சல் கண்டி வீதியைப் புகைமயமாக் கியபடி அடிக்கடி இரைந்து போகும். வாகனங்கள் முற்றத்தில் போட்டிருந்த சாய் கதிரையில் சாய்ந்தபடி வீதியைப் பார்த்துக் கொண்டிருந்த ஐயாத்துரை வே தனையோடு பெருமூச்செறிந்தார். எல்லாம் ஒருகாலம். இந்தத்தெரு இத்தனை காலமாய்க் கிடந்த கோலம் என்ன? இன்றைக்கு அத ற்கு வந்த மவுசு தான் என்ன? நடக்கட்டும் எல்லாம் காலதேவ னின் கட்டளை தானே. இரண்டு வருஷமாய் ஆளரவமற்று, பச்சை களுக்கு மட்டும் பழக்கப்பட்டு சிதி லங்களுக்கிடையில் காடுபற்றி, மசுக்குட்டிகளும், நத்தைகளும், விஷ ஜந்துகளுமாய் பெருகிக் கிடந்த ஊரில், இப்போது இப்படிப் பரபரப்பான பயண வாகனங்கள் அடிக்க்டி 'யாழுக்கு விசிட்' அடி க்கும் பிரமுகர்கள் இந்த வழியே போகின்ற போது மட்டும் குருடா கிப் போகிறார்களோ?

கண்களை மூடிக்கிடந்தவர் மேல் ஏதோ ஊர்ந்ததை உணர முடிந்தது. கீண்களைத் திறந்தவர் முன் தடித்துக் கொளுத்த மசுக் குட்டி ஒன்று வெற்று மார்பை நோக்கி ஊர்ந்தது. கை தன் னிச்சையாய் தட்டப் போனது, சட் டென்று நின்றது. மெல்லச் சரிந்து அருகிலிருந்த மாவிலையை எடுத் துப்பட்டென்று அப்பால் தள் ளினார். கீழே கிடந்த தடியொன் றால் நசுக்கி மண்ணுள் புதைத் தார்.

ஊருக்கை ஆக்களில்லாமல், அடக்க ஆளில்லாமல் நல்லா திரண்டு கொழுத்து, விளைஞ் சிட்டுதுகள்.....

சினமாய்ச் சிலிர்த்தார். மேலெல்லாம் கடிப்பது போலிரு ந்தது. இந்தச் 'சுணை' அகல இனி எவ்வளவு நேரம் ஆகுமோ?

பக்கத்து வளவில் 'ராசன்' வீடு துப்புரவாக்குகிறான். கதிகால்கள் வெட்டி ஆளுயரத்திற்கு வளர்ந் திருந்த பற்றைகளை வெட்டி எரித்துக் கொண்டிருந்தான். அங்கி ருந்துதான் மசுக்குட்டிகள் படை யெடுகின்றனவோ.

முருக்கம் இலைகள், பூவரசு



என்றில்லாமல் எல்லாவற்றிலும் தடித்த சாம்பல்படையாய் மசுக் குட்டிகள் ஒட்டிக் கொண்டிருக்கி ன்றன. வளவு பூராவும் நூல்விட்டி றங்கி எதிர்ப் பட்டவர்களில் தொற் றிக் கொண்டிருக்கின்றன.

'ராசனைக் கூட்டிவாங்கோவ னப்பா சாப்பிடலாம். . .'

முற்றத்துக்கு வந்து அவரை உசுப்பினாள் கனகம்மா.

'ஓமோம் எடேய் ராசன், வாடா ப்பா சாப்பிட்டுப் பிறகு செய்யலாம். 'கொஞ்சம் பொறுங்கோ ஐயாண் ணை, ஒரேயடியா வெட்டிப் போட் டாச் சுகம்.பிறகு ஒரேயடியாகக் கூட்டி அள்ளலாம்'.

கனகம்மாவும் ,முற்றத்திலேயே குந்திக்கொண்டாள்.

இவர்கள் நுணாவிலுக்கு வந்து இரண்டு மாதம் ஆகிவிட்டது. இந்த வீட்டையும் 'மல்ரிபரல்' விட்டு வைக்க வில்லைத்தான். சாமி அறைக்குள் ஷெல் வீழ்ந்திருந்தது. ஓடுகள் சிதறிச்சுவரும் இடிந்து தாங்கமுடியாத இழப்பாய்த் தானிரு ந்தது. என்றாலும் அதை அப்படியே அள்ளித்துடைத்து விட்டுப் பிடுங் கப்பட்டிருந்த வெளிக்கதவு மட்டும் புதிதாய்ப் பூட்டுக்களோடு போட்டு, எஞ்சிய இரு அறைகளையும் திருத்துவித்து வசிக்க வந்து விட்டார்கள்.குசி னிக்கு இன்னும் கூரை போட வில்லை. ஏதோ ஒரு மாதிரிசமை த்து விட்டு கன கம்மா அறை க்குள் வைத்துப் பூட்டி விடுவாள். தற்செயலாய் மழை பொழி ந்தால் அதோக திதான்.

அன்றைக்கும் அதுதான் நட ந்தது.

முகமாலை A-9 பாதை திற க்கிற அன்றுநட ந்தது. லொறி, லொறியாய்க் குவிந்து முகமாலைக்குப் போய்க் கொண்டிருந்த 'ஊரிப்பட்ட' சனங் களை, பெடியளைப் பார்த்த போது இவ்வளவு நாளும் இவர்கள் இங்கு தான் இருந்தார்களா என்ற அதிச யம் எழுந்தது. கூட்டங் கூட்டமாய் ஆரவாரித்துப் போன சனங்கள், பத்திரிகையாளர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எல்லாரும் இந்த இடி பாடுகளை, சோலைகள் பாலை களாக மாறியதை, பற்றைகள் மண் டிக் காடுபடர்ந்த கிராமங்களைத் தாண்டித்தான் போயிருப்பார்கள்.! எத்தனை கொண்டாட்டம்,எத்தனை கும்மாளம்.. இத்தனைக்கும் தென் மராட்சி மக்களின் இழப்புக்கள் தான் விலையாகிப் போயின என பதை எந்த உள்ளமாவது யோசி த்திருக்குமா?

அன்று வரவேற்பு வளைவுகள்... மஞ்சள், சிவப்பு அலங்காரக் கடதா சிகள்... எல்லாவற்றுக்கும் நடுவே தரைமட்டமாகிப் போன சாவகச்சேரி நகரம்... அந்த இடிபாடுகளுக்குள் ளும் பிடுங்கி வந்து வைக்கப்பட்ட வாழைமரங்கள். அலங்காரச் சோட னைகள்... ஓ... இத்தனை இழந்த பிறகும்... இத்தனை இழந்த பிற கும்...

அன்றைக்கு மழை பெய்தது. திடீரென்று எங்குமில்லாமல் வேறெந்த இடத்திலும் பெய்யாமல தென்மராட்சியில் மட்டும் முக மாலை எங்கும் அன்று மழை

தாட்சாயினி

பெய்தது. அடித்தூற்றிப் பெய் தது. ஆனந்தம்... அவர்களின் வருகை வானம் கொட்டியது. அழு கை... சாவகச்சேரியின் அவலம்... வானம் கொட்டியது.

ஐயாத்துரையர் வீட்டிலும் பெய் தது. சிதிலமான அறை எங்கும் வெள்ளம். குசினிக்குள் சமைக்க முடியாமல், கால் வைக்க இடமில் லாமல் போனது. ஊருக்கு வந்த பின் முதல் மழை... ஒழுக்குகளின் அமைவிடங்களை அடையாளம் காட்டியது. ஒழுக்குகளுக்கு வைக்க ப்பாத்திரங்கள் காணாமல் போனது. இரவு மழை பெய்தால் படுக்கப் பாய் விரிக்கவும் இடமில்லாமல் ஈரம். நல்ல வேளை சமைத்தாகி விட்டது. கூரையிலிருந்து சின்னச் சின்னப் புழுக்கள் விழுந்தபடியி ருந்தன. எல்லா உயிர்களும் இங்கு பெருகிவிட்டன. மனிதனைத் தவிர.

மழை சந்தோஷம்... எத்தனை மழைகளை முன்பெல்லாம் மகிழ் வோடு வரவேற்றிருந்தார்கள் அவர் கள். அவர்களது வயல்களெல்லாம் மழைக்குக் காத்திருந்து மழை தந்த மலர்ச்சியால் எத்தனை தட வைகள் பூரித்துப்போயிருந்தன. இப் போது வயல்களுமில்லை. மழையும் கூடச் சற்றுச்சங்கடத் தைத் தந்தது. வீட்டுக்குள் ஒது ங்கக் கூட முடியாமல் மழை சாரலடித்தது.

போகட்டும் பிள்ளைகளெல் லாம் யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். வீடு சீர்ப் படுத்தின பிறகே வருவார்கள். இருவரும் மட்டு மென்பதால் சமாளிப்பது சுலபமாய்ப் போயி ற்று.

சந்தோஷமாய்ப் பிறந்திற் றென்று கொண்டாடிய இரண் டாயிரத்தின் வைகாசியோடு,பகல் பகலாய்ப் பங்கர் வெட்டி நடுச் சாமம் வரை பங்கருக்குள் கிட ந்து விட்டு நள்ளிரவு ஷெல் களின் அகோரம் தாங்காமல், நுணாவில் சந்திவரை உடுத்த உடுப்போடு ஓடியதை ....

அடுத்த நாள் நீர்வேலித் தரவைக்குள்ளால் உயிர்தப் பினாற் போதுமென்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடியதை...

அருகில் கண்ட மரண ஓலங் களை.. இரத்தக் காயங்களோடு திணறிய அயல் உறவுகளை...

எதையும் மறக்க முடியுமா?

இப்ப, கனவு மாதிரி ஏ.சி வாகனங்கள், சமாதானப் பேரணி கள் இந்த வீதியால் தான்...

இந்த வீதிதான்...

இதில் தான் அன்று இரத்தம் தோயத் தோய சனங்கள் ஓடினா ர்கள்...

காலம்மாறிக் கொண்டு தானி ருக்கு, ஆனால் இந்தக் காலத் தின் சுழற்சியில் இன்னொருதரம் அதைப் போலக் காட்சிகள் அரங் கேறாமல் இருக்க வேண்டுமே!

ராசன், கடைசிப் பூவரசங் கம்புகளையும் வெட்டிச் சாய்த்து விட்டு வியர்வை வழிய, வழிய வந்தான்.

''மேலைக் கீலைக்கழுவிக் கொண்டு வாவன்...''

'ஓமோம்'' அவன் கிணற்றுக் கட்டை நோக்கி நடந்தான். கிணறு இரண்டு தடவை இறை க்கப் பட்டுவிட்டது.

(04ஆம் பக்கம் பார்க்கவும்)



# மகளிர் உலகம்

## வாழ வழியா இல்லை



''நினைப்பது எல்லாம் நடந்து விட்டால் இறைவன் எதற்கு'' என்பது கவிஞர் கருத்து. வாழ்க்கை என்பது பூக்கள் நிறைந்த மஞ்சமல்ல. அப்படி இருந்தாலும் கூட அதை அடைவதற்கு இடையில் முட்கள் பதிக்கப்பட்ட பாதைகளில் மனிதன் நடக்க வேண்டியுள்ளது. இதனால் வாழ்க்கையை வெறுக்கும் நிலைக்கு ஆளாகிறான்.

இவ்வாறு முட்கள் நிறைந்த வாழ்க்கையில் அதிகம் துன்பப் படுபவர்கள் பெண்களே! இத்தகைய துன்பத்தினால் அவளது ஆசைகள், ஆவல்கள், எதிர் பார்ப்புக்கள் அடங்கிப்போய் விடுகின்றன. இதனால் அதிர்ச்சியடையும் அவள் கடைசியில் வாடிப் போய் விடுகிறாள்.

''நடப்பதெல்லாம் நன்மைக்கே'' என்று நினைத்தாலும் ''நாளை நமக்காக'' என்று நம்பிக்கை வைப்பதில்லை. இன்பம் வந்தால் தன்னை' மறக்கிறாள் துன்பம் வந்தால் துவண்டு போகிறாள் எதனையும் தாங்கும் இதயத்தை இழந்து நிற்கிறாள். கவலைகளும் கஷ்டங்களும், வேதனைகளும், சோதனைகளும் அடுத்தடுத்து அம்புகளாக அவளை வந்து தாக்கும்போது நிலை குலைந்து போகிறாள்.

பெண் மென்மையானவள் தான் அதற்காக எப்போதும் சோர்ந்து கவலையோடு வாழ முடியாது. எது வந்தாலும் என்னநேர்ந்தாலும் நிமிர்ந்து நிற்கும் நிலையான மனவுறுதி வேண்டும். வாழ்க்கையை ரசனையுடன் அனுபவிக்க வேண்டும். அதனை வெல்ல வேண்டும்.

பெண்களே! எதனையும் 'டேக்கிட் ஈஸி' என்ற தன்மையுடன் வாழ முயற்சியுங்கள். சிறு சிறு பிரச்சினைகளைப் பெரிது படுத்தாமல் இலகுவாக விட்டு விடுங்கள். பிரச்சினைகளை ''சிம்பிளாக'' நினைத்து விட்டால் சந்தோசம் உங்களைத் தேடி வந்து மாலை போடும். சோகங்கள், துன்பங்கள், துயரங்கள் எல்லாம் சொல்லாமல் ஓடிப்போகும். வாழ்க்கை என்பது வீழ்வதற்கல்லவே வாழ்வதற்கே...!


*S.கோகிலா,*
*அல்லைப்பிட்டி.*



## இதுவா நட்பு...?

நட்புணர்வு என்பது வாழ்க்கையின் நிரந்தரத்தன்மைக்கு அவசியமான ஒன்று என்பது உண்மைதான். என்றாலும் நட்பினால் கிடைக்கும் பயன் நட்பின் தன்மையைப் பொறுத்தும் நண்பர்களின் இயல்பைப் பொறுத்தும் அமைவதுண்டு. நம்முடைய நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப்பொறுத்தே அவர்களது நட்பு நமது வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கு உதவக் கூடும்.

தீய நட்புணர்வானது கொடிய பகைவர்களினால் ஏற்படக் கூடிய, விளையக் கூடிய தொல்லைகளை விட அதிகமான தொல்லைகளைத் தோற்றுவித்து விடக்கூடும். பகைவர்களினால் ஏற்படக் கூடிய இடையூறுகளை உடனுக்குடன் உணரமுடியும்.



ஆனால் தீய நண்பர்களின் கூட்டுறவு காரணமாக நம்மை நோக்கிவரும் கேடுகளை உடனே அறிந்து விட முடியாது. நமக்கு அவை தெரிவதற்கு முன் பாதாளத்தில் நம்மை வீழ்த்தி விடும். அதன் பின்பு அக் கேடுகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நமக்கு அவகாசமே ஏற்படாமல் போய்விடும்.

எனவே நட்பினைத் தேர்ந்தெடுக்குமுன் நன்றாகச் சிந்தித்து நண்பனின் அல்லது நண்பியின் குணங்களை அறிந்து கொண்டு உங்கள் நட்பினை நீங்களே வளம்படுத்திக் கொள்ளுங்கள். அப்போதுதான் நட்பின் உண்மை நிலை உங்களிற்குப் புரியும்.

மு. யதுஷா.

**வாசகர்களே!**

சங்குநாதம் மகளிர் பகுதியில் உங்கள் ஆக்கங்களும் இடம்பெற வேண்டுமாயின் மகளிர் தொடர்பான ஆக்கங்களை எழுதி

'சங்குநாதம்',
மகளிர் உலகம்,
இல:- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

*ஆசிரியர்.*

## துன்பமா? உடனே அழுங்கள்...!



*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

பெண்களுக்கு இந்த விஷயத்தை வற்புறுத்த வேண்டியதில்லை. அவர்களுக்குத்தான் எந்த இன்பத்திற்கும் துன்பத்திற்கும் உடனே கண்ணீர் வந்து விடும். எதைச் சாதிப்பதற்கும் அது பிரவாகம் எடுத்து விடும். பெண்கள் ஆண்களை விடப் பெரும்பாலும் அதிக ஆயுளுடன் இருப்பதற்கு அவர்கள் அடிக்கடி அழுது மனச் சுமையைக் குறைத்துக் கொள்ளுவதும் ஒரு காரணமாக இருக்கிறது.

குறிப்பாகப் பெண்கள் மென்மையானவர்கள். எவ்வளவு தான் சந்தோசத்தின் உச்ச எல்லைக்கே போனாலும் ஒரு சிறு துன்ப மென்றால் உடனே நொறுங்கிப் போய் விடுவார்கள். அவர்களது கண்ணீரும் வற்றாத அருவியாக மாறி விடுகிறது. இவ்வாறு அழுவதன் மூலம் தங்களைத் தாங்களே தைரியசாலியாக ஆக்குவதுடன் ஆயுளையும் பெருக்கிக் கொள்கின்றனர்.

சகோதரிகளே! நீங்களும் துன்பம் ஏற்பட்ட உடனேயே அழுது விடுங்கள்.

வி. எஸ்,
சாவகச்சேரி.

## அன்புக்கு அன்பு..!

அன்பு உண்மையாகவே மிகவும்சக்தி மிக்க விசையாகும். அது நம்மை மிக உயரத்துக்கு எடுத்துச் சென்று இலேசாகவும் காற்றுப் போலவும் ஆக்கி வீடும்.

உலகத்திற்கு உண்மை யான தேவை என்னவெனில் திட்டமானதும், சரியானதுமான அன்பின் புரிந்துணர்வாகும். உண்மையான அன்பானது புரிந்துணர்வுபரஸ்பர நம்பிக்கை, மரியாதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். அது சாதாரண உணர்ச்சிகளில் அல்ல.

அன்பு சமத்துவமானது, தன்னுடனும், கடவுளிடமும் மற்றும் ஒத்தவர்களிடமும் இசைந்திருக்கும் அன்பு சுயநலமற்றது. அன்பு விநோதத்திற்கும், சலனத்திற்கும் கட்டுப் பட்ட தீவிர உணர்ச்சி நிலை அல்ல. உடல் நிலைக்கு அப்பாற்பட்டுச் செல்லும் மேம் பட்ட நிலையாகும்.

அன்பு உடல் சம்பந்தப்பட்டதல்ல. அன்பு ஆத்மாவில் வசிக்கின்றது. நாங்கள் எங்கள் அன்பை எங்களைச் சுற்றி வழிந்தோட விடவேண்டும். எங்கள் அன்பு வழிந்தோட விடுவதன் மூலம் நாங்கள் ஈரலிப்பாகவும், எப்போதும் புத்தணர்ச்சியுடன் இருப்பதுடன் கவர்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் இருப்போம்.


அன்பு இன்றி நமது வாழ்க்கையின் பொக்கிஷங்கள் எல்லாம் எமது பார்வைக்கும், அனுபவத்திற்கும் இல்லாமல் பூட்டப் பட்டுவிடும். ஏனெனில் உண்மையான அன்புதான் உண்மைத்திறவுகோலாகும்.

*ப. சாருமதி.*

## பெண்களே! குடும்பத்தின் கண்கள்!

ஒரு குடும்பத்தைப் பொறுத்த வரையில் பெண்களை வைத்துத் தான் மதிப்பீடு செய்வார்கள். குத்து விளக்கு குப்பி விளக்காக மாறி விடக்கூடாது. குடும்பத் தலைவியின் நன்னடத்தை தான் அக்குடும்பத்துக்குப் பெருமையைத் தேடித்தரும்.

குடும்ப வாழ்க்கையில் உயர்வு தாழ்வு ஏற்படுவது சகஜம். கணவன், மனைவியின் கருத்தொருமித்த வாழ்க்கை தான் வெற்றிகரமான வாழ்வாகும். எந்த விடயமானாலும் யோசித்து முடிவெடுக்கும்பழக்கம் பெண்களாகிய எம்மிடம் இருக்க வேண்டும். விட்டுக் கொடுக்கும் எண்ணம், கற்றுக் கொடுக்கும் உள்ளம் என்றும் பெண்மையின் கைக்குள் இருக்க வேண்டும். குடும்பம் என்னும் போது அங்கே அன்பின் அமைவிடமே அம்மாவாகும். அப்பாவின் பொறுப்பு கூடுதல் என்றாலும், குறைவாகவே தான் கணிக்கப்படுகிறது. பெண்ணின் பொறுப்புத்தான் அதிகமாக அரங்கேற்றமாகின்றது. பெண்கள் வீட்டின் கண்கள் என்கிறார்கள். ஆதலால் கண்களே குருடானால் நாம் இருந்து என்ன பயன். அது போல் தான் வீட்டின் தலைவிகளான எம்மிடம் நன்னடத்தைகள், நல்லெண்ணங்கள் ஊற்றெடுக்க வேண்டும்.



தாயைப் போல் பிள்ளை என்று தான் சொல்லுவார்கள். அங்கேயும் தாய்மைக்குத்தான் முதன்மை. கருவின் பாரம் தாங்கி கண்ணாக எமைக்காக்கும் தாயுள்ளங்கள் பொறுமையின் பொக் கிஷங்கள்.

மேலும் எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் தனியே முடி வெடுக்கும் பழக்கம் எம்மிடம் இருக்கக் கூடாது. கலந்தாலோசித்து நேரம் எடுத்துத் தீர்க்கமான முடிவெடுக்கும் திறமை பெண்களாகிய எம்மிடம் இருக்க வேண்டும்.

(தொடரும்...)

## நெல்லிக்காய் ஊறுகாய்



### தேவையானவை

| | |
|---|---|
| நெல்லிக்காய் | - 1 கிலோ |
| நல்லெண்ணெய் | - 1கப் |
| புளி | - 1/4 கிலோ |
| பெருங்காயம் | - தேவையானளவு |
| மிளகாய்ப்பொடி | - 500கிராம் |
| வெந்தயம் | - 50கிராம் |
| கடுகு | - 50கிராம் |
| உப்பு | - தேவையானளவு |



### செய்முறை:-

நெல்லிக்காயை நன்றாகக் கழுவிப் பரவி வைக்கவும். 1மணி நேரம் கழித்து அதில் விதைகளை நீக்கிச் சிறு சிறு துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். நல்லெண்ணையை பாத்திரத்தில் எடுத்து அடுப்பில் வைத்து சூடாக்கி, எண்ணெய் காய்ந்தபின் நெல்லிக்காய்த் துண்டங்களைப் பிடியாகப் போட்டு, வற்றல் பொரிப்பது போல், பொரித்து எடுக்கவும்.

இரண்டு டம்ளர் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் விட்டுத் தள தளவென்று வெந்தபின் அடுப்பை அணைத்து விட வேண்டும். பின்னர் புளியைப் போட வேண்டும். தண்ணீர் நன்றாக ஆறிய பின் மிக்ஸியில் போட்டு அரைத்து எடுத்த விழுதில் உப்பு, மிளகாய்ப்பொடி, வறுத்தரைத்த கடுகுப்பொடி, பெருங்காயப் பொடி, வெந்தயப்பொடி, பொரித்து எடுத்த நெல்லித்துண்டு, பொரித்து மீதி உள்ள எண்ணெய் எல்லாவற்றையும் நன்றாகக் கலந்து ஈரம் படாமல், உலர்ந்த போத்தலில் எடுத்து வைக்கவும். ஒருசில வருடங்களுக்குப் பழுதாகாமல் பாவிக்கலாம்.

K. சாரதா

## வியாசர் அங்கிளே! அண்ணன் தங்கை பாசம் பற்றி என்ன நினைக்கிறீர்?


*வே.சஞ்சீவன் ஒட்டுமடம்*
வியாசரே! துரத்தித் துரத்திக் காதலிக்கும் ஆண்களுக்கும் அதற்கு மசியாத பெண்களுக்கும் நீங்கள் கூற விரும்புவது?

❖ **ஆணுக்கு:~ முயற்சி திருவினையாக்கும். பெண்ணுக்கு:~ கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு மட்டோட இருக்கும்.**

*எஸ்.கவிதரன் சண்டிலிப்பாய்*
வியாசர் ஐயா! பெண்மை மென்மையானதா? வன்மையானதா?

❖ **பெண்மை மென்மையானதென இலக்கியங்களில் படித்ததாக ஞாபகம்.**

*T.கேசவன் மிருசுவில்*
வியாசர் அங்கிளே! அண்ணன் தங்கை பாசம் பற்றி என்ன நினைக்கிறீர்?



❖ **நான் பதில் கூறுவதை விடப் பாசமலர் படத்தைப் பாரும் சகோதர பாசம் விளங்கும்.**

*T.தனரூபினி பருத்தித்துறை*
வியா சார்! உண்மையான நண்பர்களை அடையாளம் காண்பது எப்படி?

❖ **கொஞ்சம் கடன் கேட்டுப்பாரும் அடையாளம் புரியும்.**

உண்மையாக வாழ்ந்தால் கூட நேர்மையாக உழைத்தால் கூட மற்றவர்கள் ஏற்காவிடின் என்ன செய்வது?

❖ **போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும், நின் வழி உண்மையாகவே அமையட்டும்.**

*S.ராஜ் வேரக்காடு*
காதலிக்கும் பெண்கள் எவற்றை முக்கியமாய் கருத்தில் கொள்ள வேண்டும்?

❖ **காதலி கவனிக்க வேண்டியது முக்கிய விடயம் என்று நோட்ஸ் கொடுக்க முடியுமா?**

*கோகிலா பண்ணாகம்*
சினிமாவுக்கும், அரசியலுக்கும் இடையிலுள்ள வேறுபாடு என்ன?



❖ **ஆபாசத்திற்கு ~ சினிமா. அடாவடித்தனத்திற்கு ~ அரசியல் இரண்டும் சேர்ந்தே தமிழகத்தின் நடப்பியல்.**

*T.ராஜினி தும்பளை*
என்ன தான் நன்மை செய்தாலும் எமக்குக் கெட்ட பெயர் தான் கிடைக்கிறதே என்ன செய்யலாம் ?

❖ **நோய்வாய்ப்பட்ட உலகில் சுகதேகிகளைத் தேடுவது கடினமல்லவா? அதே போல் கெட்டுப்போன மானிடத்தில் நல்லதைத் தேட முடியுமா.**

*ஜோ.ஜெ.டி கொழும்புத்துறை*
வியாசர் அங்கிளே! காதலுக்கும் கவிதைக்கும் தொடர்புண்டா? ?

❖ **தொடர்புண்டாவா? காதலில் இருந்து தானே கவிதை பிறக்கிறது.**

*ந.வினோதரன் ஒட்டுவெளியூர்*
வியாசர் ஐயா! வெளி நாடுகளில் மாறித் திருமணம் செய்வது பெரு வழக்காகி விட்டது. இவர்களுக்குக் குழந்தைகள் பிறக்குமா?

❖ **அதிக குழந்தைகள் பெறும் வாய்ப்புகள் உண்டென மருத்துவவியலாளர்கள் கூறுகிறார்கள்.**

*R.சுலோசனா பருத்தித்துறை*
செய்வினை, சூனியங்களைக் கண்டு பிடித்த மனிதனால் உலகின் முடிவை மட்டும் கண்டு பிடிக்க முடியாமல் போனது ஏன் அங்கிள்?

❖ **மருமகனே! செய்வினை என்று ஏதும் கிடையாது. நாம் செய்த வினைதான் உண்டு.**

*த.மயில்வாகனம் இளவாலை*
வியாசர் ஐயா!மனைவியின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்க என்ன செய்யலாம்?

❖ **சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களைப் பழகிக் கொள்ள வேண்டும்.**

## வியாசரின் பதில்கள்

*இ.டிலக்சன் அல்லைப்பிட்டி*
எல்லோரும் காதலித்துத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனச் சட்டம் கொண்டு வந்தால் சாதி, மத வரதட்சணைக்குத் தீர்வு கிடைக்குமா?

❖ **சாதி மதத்திற்குத் தீர்வு கிடைக்கிறதோ? இல்லையோ? ஆனால் பேசித் திருமணம் செய்த ஆண்களும் காதலிக்கத் தொடங்கி விடுவார்கள் என்பது மட்டும் திண்ணம்.**

*S.நிக்ஷன் கந்தரோடை*
வியாசர் அவர்களே! மனிதனுக்கும் ஆறு அறிவில் ஓர் அறிவு குறைந்து விட்டால்?

❖ **ஆண்டவனைச் சந்திக்கவே மாட்டான்.**

*G.காந்தன் நாவலர் வீதி*
ஆண்களைப் போல் பெண்களுக்கும் தாடி,மீசை முளைத்தால் எப்படியிருக்கும் வியாசரே?



❖ **தாடி, மீசை முளைக்காமலே சில பெண்களை இனங் கண்டு கொள்ள முடிவதில்லை. ஐயகோ! பெண்களுக்கு தாடி, மீசை முளைத்தால் நிலைமை என்னாவது?**

## ஆண்களைப் போல் பெண்களுக்கும் தாடி, மீசை முளைத்தால் எப்படியிருக்கும் வியாசரே?

காதல் தோல்வியென்றால்அதை நிவர்த்தியாக்கவே முடியாது. ஆனாலும் சில ஆண்கள் தமது இனிய முகத்தை பல நாள் சவரம் செய்யாது பாழாக்குவது எதற்காக?



❖ **காதலில் தோல்வி என்பதை வெளிக் காட்டுவதிலும் சிலர் மகிழ்வடைவதோடு, அதனூடாக அனுதாபம் தேடுவதுமுண்டு.**

*அஜந்தா காரைநகர்*
வியாசர் சார்! நீங்களே சமைத்துச் சாப்பிட்ட அனுபவம் உண்டா?

❖ **சமைத்ததுண்டு. அதைச் சாப்பிடமுடியவில்லை.**

*சாம்சன் மண்கும்பாண்*
வியா மாமா! உங்களுககுப் சுவீற் அதிர்ஷ்டம் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?

❖ **விளம்பரம் போட்டு என்னை நானே பாராட்டிக் கொள்வேன்.**

*ஜெனனி வேலணை*
ஒரு ஆணின் வெற்றிக்குத் துணையாய் இருப்பது பெண் என்றால் அது தாயா,தாரமா?

❖ **இருவருமே. தாயும், தாரமும் போடும் சண்டையை நிறுத்தி வைப்பதில் தானே ஒரு ஆணின் வெற்றியே தங்கியுள்ளது.**

*சுமித்திரா நெல்லியடி*
வியா சார்! இசையின் மகத்துவம் பற்றிச் சில வரிகள் கூறமுடியுமா?

❖ **சாமாதானம் பாடிச் சிவனையே தன் வசப்படுத்திய சமாச்சாரம் தெரியாதா?**

*குமார் சுழிபுரம்*
வியா மாமா! உங்கள் வாசகர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் அறிவுரை என்ன?

❖ **நிறையவே வாசியுங்கள், மௌனமாக இருங்கள். உடம்புக்கும், உள்ளத்திற்கும் அதுவே நல்லது.**

*சிந்து கொட்டடி*
மனம் இல்லாத அக்கால மனிதரின் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்?

❖ **பண்ட மாற்றில் வாழ்க்கை ஓடியிருக்கும்.**

## சினிமாவுக்கும், அரசியலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன?

*ந.வினோதரன் ஒட்டுவெளியூர்*
என் பெற்றோர்களைப் பேணக் கூடிய பெண்ணை மட்டும் திருமணம் செய்வேன் என்ற இலட்சியம் நிறைவேறுமா வியாசரே?

❖ **மகனே! வினோதரா நின் இலட்சியம் நன்று. ஆனால் இந்த இலட்சியம் இருக்கும் வரை நீர் திருமணமே செய்ய முடியாது.**

*T.வினோ மிருசுவில்*
வியாசர் அங்கிளே! சங்க காலத்தில் தலைவன் தலைவியைப் பிரியும் போது கவலை அடைந்தான் இப்போ அப்படியில்லை?

❖ **இப்போதும் கவலையடைகிறான். தலைவி பிரிகிறாள் இல்லையென்று.**

*மு.ஸ்ரீதேவி நெடுந்தீவு*
பணத்தால் அடையும் புகழுக்கு இருக்கும் மதிப்பு, அறிவால் அடையும் புகழுக்கு இருப்பதில்லையே ஏன் வியாசரே?

❖ **பணம் பத்தும் செய்யும் என்பதால்.**

*மு.பத்மினி திருநெல்வேலி*
பத்திரிகை ஆசிரியர், நாவல் ஆசிரியர் இதில் யாருக்கு வாசகர்கள் அதிகம்தேவைப்படுகிறார்கள்?

❖ **நாவல் ஆசிரியருக்கு. பத்திரிகை ஆசிரியர் ஏதோ உருட்டுப் புரட்டு எழுதி அன்றைய நாளிதழை விற்று விடுவார். ஆனால் நாவலாசிரியனின் நிலை அப்படியில்லை.**

**காதல் தோல்வியென்றால்அதை நிவர்த்தியாக்கவே முடியாது. ஆனாலும் சில ஆண்கள் தமது இனிய முகத்தை பல நாள் சவரம் செய்யாது பாழாக்குவது எதற்காக?**

## வாசகர் இதயநாதம்

திங்கள் வந்தால் கொண்டாட்டம்
ஏன் என்று கேட்டால்!
வீர நடை போட்டு வரும்சங்கு நாதம்
அன்றுதானே?
பல் பொருளை வாரிவரும்
ஆற்றைப் போல
பல்சுவை அம்சத்தைத் தாங்கி வரும்
வாரமலரே!
எழுத்தாளன் மனத்துள்ளே
சிதைந்திருந்த கவிதைதனை
நாளடைவில் வெளிக்கச் செய்த
ஒலிச்சுடரே! கவிதைப் புனல் ஊற்றெடுக்க
கதைகள் தான் நீ சுரக்க
கை தட்டி அழைக்கின்றோம்
உன்னை நாமே!
மானிடரின் மனத்துள்ளே
ஆழமாய்ப் பதிந்திட்டாய்
தண்ணி போட்டழிக்க எவராலும்
முடியாதல்லோ?.

இ.கிருஸ்ணவேணி,
நல்லூர்.

நாதமே உன்னைப் பெற்றெடுத்த
வலம்புரித் தாய்க்கு என் வாழ்த்துக்கள்
என் கவிதைக்குக் கருவான நாதமே
என் உடலிற்கு உயிரான நாதமே
என் வாழ்வுக்கு ஒளியான நாதமே
நித்தம் நீ இந்த உலகிற்கு வலம் வந்தால்
என் இமைகளை இமைக்காமல்
பார்த்திருப்பேன்.
உன் திங்கள் இதழிற்காய்.

R.சுபோதினி,
நீர்வேலி.

திங்கள் தோறும் வந்திடுவாய்
தித்திக்கும் பல செய்திகள் தந்திடுவாய்
தீந்தமிழர் கரங்களில் தவழ்ந்திடும்
செந்தமிழ் வார ஏடே சங்குநாதமே
எம் பாசமலரே வாசகர்க்கான வாசமலரே
பூம் பொய்கை தனில் புத்தம் புது மலராக
பூத்துக் குலுங்கி அறிவு மணம் பரப்பிடுவாய்
கவின் மிகு கவிதைக் கலசமும்
கவியரசன் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதமும்
மௌனத்தின் தேடல்களுடன் தொடரும்
தொடர்கதையுடன் சின்னஞ் சிறுவர்
கை வண்ணங்களும் எண்ணம் போல்
மூளைக்கு வேலையென குறுக்கெழுத்துடன்
கரும்பென இனித்திடும் சினிமாச் செய்திகள்
தந்தெம்மை மகிழ்விக்கும் சுந்தரத்தமிழ்
மலரே சங்குநாதமே ஒலிக்கட்டும்
ஓங்கட்டும் உன் புகழ் உலகமெல்லாம்.

ம.க.விஜயன்,
நாயன்மார்கட்டு.

திக்கெட்டும் முழங்கும்
திகட்டாத சங்குநாதமே
உன் புகழ் ஓங்கி வானளாவப்
பரவ என் நல்வாழ்த்துக்கள்.

சுஜன்,
நீர்வையூர்.

சங்ககால இலக்கியப் படைப்பின்
அங்கமான எங்கள் சங்கு நாதமே
சுடச்சுடச் செய்தியோடு என்நாளும்
சுடரொளி பரப்பும் வலம்புரியின் வாரமலரே
கற்பனையின் எண்ணங்களை
சுவைத்துப் பார்க்கும் கவிதைக் கலசமும்
மௌனமாய்க் கற்பனையில் சஞ்சரித்து
கவிதை தேடச்செய்யும்
மௌனத்தின் தேடலும் சிறுவர்
கரங்கள் ஆடும் சிறுவர் அரங்கமும்
என் சிந்தைதனைக் கவர்ந் திழுக்கிறது
திகைக்க வைக்கும் அனைத்துச் செய்திகளும்
தந்து
திங்கள் தோறும் மலர்ந்து
தித்திக்கும் சங்குநாதமே திக்கெட்டும்
உன்புகழ்மணம் பரப்ப
என் மனம் நிறைந்து வாழ்த்தும்
இவள்

இணுவில்,
K.கௌரி.

ஈழத்தின் உதயமே
இதயத்தின் நாதமே
வாரத்தின் கீதமே
வளர்(க) சங்குநாதமே
வலம்புரியின் வளர்பிறையே
வற்றா(த) வளநதியே
சொற்சுவையும் பொருட்சுவையும்
செப்பரிய கவிதைகளும்
சீர்திருத்தக் கருத்துக்களும்
சிந்தனைச் சிதறல்களும்
அர்த்தமுள்ள ஆன்மீகமும்
அனைத்துலக நடைமுறையும்
கஸ்தூரி திலகமும்
கன்னியர் உலகமும்
சிறுவர் அரங்கும்
சினிமாச் சிதறலும் -
சீர்படுத்தி
ஓரேழுநாளில் உலகம்
சுற்றிவரும் சங்குநாதமே
வருக, வாரம் தோறும்
இனிய நாதமாய்
எங்கும் ஒலிக்கட்டும்
உன் புகழ்

பி.சாவித்திரி,
இரா.நுண்கலைப் பீடம்.

# ரென்னிஸ் உலகைக் கலக்கும் கறுப்புச் சகோதரிகள்!

''பொம்பிளைங்களாடி அவளுக? போக்கிரிப் பிசாசுங்க'' இது இன்னொரு நட்சத்திரம் மார்ட்டினா ஹிங்கிசின் விமர்சனம்; (கோவைசரளா பாணியில் மொழி பெயர்ப்பு!)

'அவர்களின் எடையை விட தலைக்கனம் அதிகம்!' இது வெறுப்பேறிய அல்லது ஏற்றப்பட்ட இரசிகர் ஒருவரின் விசனம்;

'செரீனா ஓர் அமுக்கு அமுக்கினால் மைக்டைசனின் எலும்புகளே நொருங்கிடும்!' இது எரிச்சலே (றிய+ற்றப்பட்ட) வர்ணணையாளர் வடித்த ஜொள்ளு;

'அவலட்சணக் கறுப்பிகளின் அபார ஆட்டம்!' - இது வாழ்த்துவது போல வசைபாட முனையும் நிறவெறித்துவேசம்.

இத்தனை 'துதி' பாடல்களிற்கும் மத்தியில், சலசலப்பிற்கு அஞ்சாப் பனங்காட்டு நரிகளாக, சோதனைகளையே வாழ்வின் சாதனைகளாக வரித்து, இன்றைய ரென்னிஸ் உலகையே ஒரு கலக்குக் கலக்கி வருபவர்கள்தான் வீனஸ் மற்றும் செரீனா வில்லியம்ஸ் சகோதரிகள்! செம்ரெம்பர் 11இல் சிதைந்தது வெறும் இரட்டைக் கோபுரங்களே தவிர அமெரிக்காவின் முதுகெலும்பல்ல என்று எழுந்து நின்ற தேசத்தின் குடிமக்கள் தானே இவர்கள் - அதற்கமைய எத்தனை விதமான சவால்கள் எழுந்த போதும் அத்தனையையும் சமாளித்து, பெரும்பாலும் வெள்ளையரே செல்வாக்குச் செலுத்திய பெண்கள் ரென்னிஸில் இப்போது 'இருளின் ஆதிக்கத்தை' (அதுதான் நீக்ரோக்களின்...எனவரவேண்டியது 'சக்திமான்' பார்ப்பதால் இப்படி வந்துவிட்டது!)ப் பரப்பத் தொடங்கியிருக்கின்றார்கள்.

400இற்கும் மேற்பட்ட டெஸ்ற் இலக்குகளை 'ஸ்பின்னிய!' பிறகு முரளி எறிகிறார் என உரைப்பது எவ்வளவு அபத்தமானதோ அதை விட அபத்தமானது வில்லியம்ஸ் சகோதரிகளை இனிமேல் இகழ்வது. ஆம்!, ரென்னிஸ் உலகின் அதியுன்னதம் மிக்க போட்டிகள் (Grand Slams) நான்கினதும் வெற்றிக் கோப்பைகள் வில்லியம்ஸ் வீட்டு விருந்தினர் அறைக்கு வந்து சேர்ந்து விட்டன. அக்காவும்,தங்கையும் கடந்த நான்கு வருடங்களில் பெண்கள் ரென்னிஸ் பகுதியின் சிம்ம சொப்பனங்களாக அவதாரமெடுத்து விட்டார்கள்.

முதன் முறையாக 1999ல் தனது17வது வயதில் அமெரிக்கத் திறந்த போட்டியில் (U.S.Open) இளையவர் செரீனா அதிரடிச் சாம்பியனாக ஆகியபோதுதான் ரென்னிஸ் உலகும் இவர்களை உற்று நோக்கியது. தொடர்ந்த காலங்களில் முழு விளையாட்டு உலகமே வில்லியம்ஸ் குடும்பத்தை வியப்புடனும் ஆர்வத்துடனும் அவதானிக்கத் தொடங்கி விட்டது. விளையாட்டுத்துறையிலும் தமிழர் முன்னேற வேண்டும் என்ற பேச்சுக்கள் அண்மைக் காலங்களில் மும்முரமாக எழுந்துள்ள நிலையில், ரென்னிஸ் ஆட்டம் இங்கு அவ்வளவு பிரபலமானதல்ல (ஓரிரு இடங்கள் தவிர) என்பது குறிப்பிடத்தக்கது.



தந்தையுடன் ரென்னிஸ் வீராங்கனை வீனஸ்

ஆனாலும் தொடர்பாடல் ஊடகங்கள் வழியாக அதனைப் பற்றிய விபரங்கள் போதியளவு கிடைக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரியதே. நிற்க, இந்த ரென்னிஸ் ஆட்டத்தின் முக்கிய அம்சமே அங்கு புரளும்பரிசுப் பணம் தான்! அந்த வகையில் செல்வச் செழிப்புமிக்க அமெரிக்காவின் டாலர் கொழிப்புமிக்க புத்திரிகளாகவும், மாறிவிட்டார்கள் இந்தச் சகோதரிகள். (மாப்பிள்ளைகள் கவனிக்க!)

## அசாத்தியப் பெண்கள்



ரஷ்யா வீராங்கனை அன்னா கோர்னிக்கோ

சீமான்களும், சீமாட்டிகளுமே பெரும்பாலும் பார்வையாளர்களும், பங்காளிகளும் என்ற நிலையிலிருக்கும் ரென்னிஸ் ஆட்டத்தில் இந்தச் சகோதரிகளும் ஆழ ஊடுருவியிருக்கின்றார்கள்என்பது அவதானிக்கப்பட வேண்டியதே.பலம் மிக்க விளையாட்டுப் பின்னணியோ, இரசிகர்களின் ஏகோபித்த ஆதரவோ இவர்களிற்கு இருக்கவில்லை.சரி,ஓரிரு இரட்டையர் பட்டங்க்ளைத்தவிர - (அதுவும் சகவீராங்கனை ஹிங்கிஸின் பங்களிப்பால்) மற்றப்படி தனிப்பட்ட போட்டிகளிலெல்லாம் திணறிய போதும் விரும்பப்படுவதிலும் விளம்பரத்திலும் முன்னனி வகிக்கும் - இன்னும் விளக்குவதானால் 'ரென்னிஸ் உலகின் சிம்ரன்' -ரஷ்ய வீராங்கனை அன்னாகோர்னிக்கோவாவிடமுள்ள கவர்ச்சியும் இவர்களுக்கில்லை. ஆனாலும் ஒன்பது முறை விம்பிள்டனைக் கலக்கிய நவரட்டினலோவா, மிக நீண்டகாலம் உலகின் முதலாந்தர நிலையைப் பேணிய ஸ்ரெபி கிறாஃப் போன்றோர் வரிசையில் வில்லியம்ஸ் இணையும் வந்து விட்டதென்றால் அது மிகையன்று.

இவர்களின் இந்த எழுச்சிக்குக் காரணங்கள் இரண்டேதான். அதிலொன்று ஆரோக்கியமான உடல் வளம். மற்றையது அதை விட ஆரோக்கியமான உளநலம். ஓட்டங்கள் குவிக்கப்பட்டாலும் ஓயாத ஷேர்ண்வோன் போல, ஒன்பது எதிரணியினர் சூழ்ந்தாலும் முன்னேறும் ரொனால்டோ போல இவர்களின் நெஞ்சுரமும் அலாதியானது. மறுபுறம் நீக்ரோ க்களிற்கேயுரிய அந்த எஃகனைய உடல் வாகும் சேர்ந்து கொள்ளும் போது வெள்ளையின நோஞ்சான்கள் வெடவெடக்கத்தானே வேண்டும்? மின்னலின் வீச்சுடன் பந்தை விளாசும் முன்கையின் வேகம், சுழன்று பந்தைத் திருப்பியனுப்பும் பின்கையின் வலிமை, கண்ணிமைக்கும் நேரத்தில் 'நெற்றியடி' யாக மீண்டுவரும் பந்துகள் (Returns) என இவர்களின் ஆட்டமே அநாயாசமானது.

மூத்தவரான வீனஸிற்குச் செரீனாவைவிட இரண்டு வயது அதிகம். முதன்முதலில் Grand Slam பட்டத்தை செரீனா பெற்ற போதும் அதற்குப் பின்னர் வீனஸின் ஆதிக்கமே அதிகம் நிலவியது. தாய் ஒறாசீன் வில்லியத்தின் கணிப்புப்படி மகள்கள் இருவரிலும் வீனஸே திடம் மிக்கவர். இது போட்டிகளின் போதும் தெற்றெனத் தெரியும். தீர்க்கமான முடிவுகளை எடுத்து, பதற்றத்திற்கு இடங்கொடாமல் முன்னேறும் பண்பு வீனஸிற்கே உரியது. ஆனால் செரீனாவோ தோல்விகளைக் கண்டு இலகுவில் மனமுடையும் போக்கையும், அவசியமற்ற ஆக்ரோஷக்காரியாகவும் இருக்கிறார். ஒப்பீட்டளவில் அமைதி மிக்க வீனஸ் கணனித்துறையிலும், வர்த்தக விடயங்களிலும் மிகவும் சாதுரியம் உடையவர். ரென்னிஸைக் கைவிட்டு வர்த்தகத்தில் இறங்கின் வீனஸ் அதிகம் சாதிக்கலாம் என்று தந்தை கூறுமளவிற்கு ஆற்றல் உள்ளவர்.

Reebok நிறுவனத்துடன் 40 மில்லியன் டாலர்கள் விளம்பர ஒப்பந்தம் செய்துள்ள வீனஸின் கல்வி ரீதியிலான இலக்கு - ஒரு Fashion College இல் படித்துப் பட்டதாரியாக வேண்டும் என்பதே. அதே நேரம் செரீனா கொஞ்சம் செல்லமாகவே தெரிகிறார். ஓய்வு கிடைத்தால் மணித்தியாலக்கணக்கில் இன்ரர்நெற்றில் பொருட்கள் கொள்வனவு செய்வதே இவர் பொழுதுபோக்கு! அதற்கென்ன, வருடம் எழுநூறாயிரத்திற்கு மேல் சமபாதிக்கும் ஓர் அமெரிக்க இளம் பெண் இதைவிட என்னவெல்லாமோ செய்யலாம் என்றாலும் பயிற்சி நேரத்தை அதிகரிப்பதற்காகத் தற்போது இப்பழக்கத்தைக் கட்டுப்படுத்தி வருகிறார்.

## களத்திலே இவர்கள்

அக்காவும்,தங்கையும் மற்றையவர்களுடன் மட்டுமன்றி தமக்கிடையேயும் மோதிக் கொண்டு சாதித்த சாதனைகள் புல்லரிக்க வைப்பன. '99இல் U.S Open ஐ செரீனா வென்ற அடுத்த வருடமே அதே போட்டியில் சகோதரிகள் இருவரும் வரலாறு காணும் விதமாக இறுதிப் போட்டியில் ஆடினர். வீனஸின் திறமைக்கு ஈடுகொடுக்க முடியாமல் நேர் 'செட்களில் தோல்வியுற்று தனது பட்டத்தை மூத்தவரிடம் கையளித்தார் வீனஸ். தொடர்ந்து கிரிக்கெற்றிற்கு ஒரு லோட்ஸ் போல ரென்னிஸிற்குப் பிரபலமான விம்பிள்டன் திறந்த போட்டியையும் வீனஸ் ஜெயித்தார். 2001இலும் அப்பட்டத்தை வென்ற வீனஸ் இம்முறை போட்டியில் செரீனாவின் அசுர வேகத்தின் முன் மூன்றாவது தடவையாக விம்பிள்டனை வெல்லும் வாய்ப்பை இழந்தார்.

தொடக்க காலங்களில் செரீனாவை வீனஸ் இலகுவாகச் சமாளித்த போதும் தற்போது செரீனாவின் வேகத்திற்கு ஒத்துப் போக முடியாமல் தடுமாறவே செய்கின்றார். இவ்வருடத்தில் ஆஸ்திரேலிய திறந்த போட்டியை முதலில் வெற்றி கொண்ட வீனஸ் அடுத்து நிகழ்ந்த French Open மற்றும் விம்பிள்டனில் செரீனாவை அடக்க முடியாது ஆடிப்போனார். இருந்த போதும் இதுவரை ஐந்திற்கும் மேற்பட்ட Grand Slam பட்டங்கள், ஓர் ஒலிம்பிக் தங்கம் (Sydney 2000), இருபதிற்கும் அதிகமான சர்வதேச வெற்றிகள், 10மில்லியனிற்கும் மேற்பட்ட பரிசுப்பணம் என்று வீனஸே முன்னணியில் திகழ்கிறார். எனினும் போகிற போக்கில் செரீனாவின் பட்டியல் இதைவிடநீளும்போல் தெரிகின்றது.

வில்லியம்ஸ் சகோதரிகளின் ஆட்டத்திறனைப் பார்த்த சில விமர்சகர்கள் ஆடவர் பகுதியில் கூட இவர்கள் சாதிக்க முடியும் என்கிறார்கள். அதை நிரூபிப்பது போல இதுவரை 13Grand Slam களை வென்று சாதனை படைத்திருக்கும் ஆண்கள் ரென்னிஸின் தலைசிறந்த வீரர் பீட்சாம்ப்ராஸ் பந்தை அடிக்கும் (Serve) வேகத்தை அண்மித்துப் பிரமிக்க வைத்திருக்கின்றார் வீனஸ். ஒற்றையாக ஆடும் போதே சமாளிக்கப்பட முடியாத இவாகள இரடடையா போட்டிகளில் இணைந்து ஆடினால் எப்படியிருக்கும்? அதற்கேற்றாற் போல் இனிமேல் எவருமே எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு இரட்டையர் பிரிவில் இவர்கள் வரலாறு படைத்து வருகிறார்கள்.

## சர்ச்சைகளின் பின்னணி

அற்புதமான ஆட்டத்திறனை வைத்துக்கொண்டு வெற்றிமேல் வெற்றியாக இவர்கள் குவித்து வரும் போதும் இரசிகர்கள் மத்தியில் அவ்வளவு வரவேற்பைப் பெறாது போனதற்கு இவர்கள் சார்பிலும் பல காரணங்கள்உண்டு. அவற்றுள் முக்கிய காரணம் இந்தச் சகோதரிகளின் தந்தையாரான ரிச்சார்ட் வில்லியம்ஸே ஆவார். 'இவன் தந்தை எந்நோற்றான் கொல்' லென்று புத்திரிகள் இருவரும் சாகசம் படைக்கையில், அவர்களை 'அவையத்தள் முந்தி இருக்க' வைப்பதில் அயராது பாடுபட்ட ரிச்சாட், பந்தாட்டக் கலையுடன் சேர்த்து பந்தா காட்டும் வித்தையையும் பயிற்றுவித்தது தான் இவ்வளவு தூரம் இந்தக் குடும்பம் வெறுக்கப்பட மூலகாரணமாகும்.

ஏற்கனவே பொறாமைத் தீயால் பொசுங்கிப் போயிருக்கும் புண்களில் இவர்களின் அநாகரிகம் மிக்க, ஆர்ப்பாட்டமான சில நடவடிக்கைகள் மேலும் அசிட்டைத் தடவிவிடுவதுதான் சர்ச்சைகள் எழுவதற்குமையக் கருத்து. இளம் பராயத்திலேயே இரைச்சல் மிக்க ஒலிப்பெட்டிகளையே பார்வையாளர்களாக ஏற்படுத்தி, ஆக்ரோஷமும், தந்திரமும்மிக்க ஆட்டக்காரர்களாகச் சகோதரிகளிருவரையும் தயார்படுத்தினார் தந்தை ரிச்சார்ட் வில்லியம்ஸ். அதில் தப்பேதும் இல்லை என்றபோதும் காலத்தின் தேவைக்கும் வயதின் பரிணாமத்திற்குரிய பக்குவத்தை மறந்து இவர்கள் செய்த சில செயற்பாடுகளே இக்குடும்பத்தின் மீது அவ்வளவு விசனத்தை உருவாக்கியது.

இன்னொரு அமெரிக்க நட்சத்திரம் லின்ட்சே டேவன்ஃபோர்ட் டின் சற்றுத் தளர்வான, பருமனான உடல்வாகைப் பார்த்து இவர் ரென்னிஸ் ஆடுவதிலும் பார்க்கக் குண்டெறிதல் போட்டிக்கே இலாயக்கு எனக் கூறியதும் 2000 ஆம் ஆண்டு விம்பிள்டனில் வீனஸிடம் பட்டத்தைத் தவறவிட்ட ஜெனிஃபர் கப்பிரியாற்றியின் முன் கிண்டல் பண்ணும் விதமாக நடனம் ஆடியதும் ரிச்சார்ட்வில்லியம்ஸின் அநாகரிகமான குணாம் சங்களிற்கு ஒருசில உதாரணங்கள் ஆகும். அதேபோல் தேவையற்ற விதத்தில் மற்றைய வீராங்கனைகளை விமர்சித்தல், அநாவசியமாகச் செய்யும் ஆர்ப்பாட்டம் போன்றவற்றில் இளையவர் செரீனா அப்பாவிற்குச் சளைத்தவரல்ல. ஆனால் ஒப்பீட்டளவில் வீனஸ் சற்று மாறுபட்டவராகவே தெரிகின்றார். விம்பிள்டன் 2001ல் இறுதிப் போட்டியின் போது இரசிகர்களால் ஏகோபித்து ஆதரவளிக்கப்பட்ட பெல்ஜிய வீராங்கனை ஜஸ்ரின் கெனினைத் தோற்கடித்த பின்னர் இரசிகர்களைப் பார்த்து கையசைத்து விடைபெற்றதன் மூலம் ஒட்டுமொத்த பிரிட்டிஸ் பார்வையாளர்களின் உள்ளங்களையும் வீனஸ் கொள்ளை கொண்டார்.

இப்படிப் பலதரப்பட்ட சர்ச்சைகளிற்கும் மகுடம் வைத்தாற்போல் தற்போது கிளம்பியிருக்கும் பிரச்சினை, ஆட்ட நிர்

க.சேந்தன்

ணய சதி (கிரிக்கெற் வாழ்க!) என்பதாகும். அதாவது, அக்காவும் தங்கையும் தமக்கிடையே மோதும்போது யார் வெற்றிபெற வேண்டும் என அவர்கள் தந்தையே முதலில் கூறி அனுப்பி விடுவாராம். என்ன? நல்ல குடும்பமடா சாமி! என நினைக்கத் தோனறவில்லையா?



செரீனா வில்லியம்ஸ்

இப்பேர்ப்பட்ட இவர்களை ஏற்றியும் தூற்றியும் எழும் விமர்சனங்களும் சுவாரசியமானவை. ஆடுகளத்தில் வீனஸின் வேகம்மிக்க அசைவுகளை நோக்கிய பில்கிளின்டன் அவரை ''Gazelle'' (துடிப்பும் வேகமும் மிக்க ஒருவகை அரேபிய மானினம்) என வர்ணித்தார். மறுபுறம் பெண்கள் ரென்னிஸின் பிரபல முன்னாள் வீராங்கனை நவரட்டின லோவாவோ, ''எனக்கு முன்ரிச்சார்ட் அப்படி நடனமாடியிருந்தால் அவரை என் ரென்னிஸ் மட்டையாலேயே விளாசியிருப்பேன்!'' எனச் சீறியிருக்கிறார்.

நீக்ரோக்கள் என்பதற்காக உண்மையிலேயே இவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும் நிறவெறி என்கின்ற போர்வையை வைத்துக் கொண்டு இவர்கள் செய்யும் விஷமத்திற்கும் குறைவில்லை என்பதே முடிவான கருத்தாகும். எனினும் எவ்வளவுதான் எதிரணித் துடுப்பாட்ட வீரரைத் திட்டிய போதும் தனது நேர்த்தி மிக்க பந்துவீச்சிற்காக மக்ராத் போற்றப்படுவது போல, இன்னும் சில ஆண்டுகளிற்குச் சர்ச்சைகளிற்கும், சவால்களிற்கும் மத்தியில் இந்தக் ''கறுப்புச் சகோதரிகளிடம்''தான் ரென்னிஸ் உலகம் அடங்கப் போகின்றதென்பது திண்ணம்.

* * *

**அதுசரி, ஆனாக்காத் துடுப்பாட்டம்; ஆகாட்டித் தொடையாட்டம் (அட,Foot Ball தான்!) என அலுப்புத்தட்டியதற்காக, ஒரு மாறுதலிற்காக இம்முறை ரென்னிஸ் பக்கம் பார்த்தாகி விட்டது. அப்படியானால் அடுத்தமுறை.... பழையபடி வேதாளம்.....**



# சிறுவர் அரங்கம்

## விண்வெளி பற்றிய தகவல்கள்

✡ விண்வெளியை முதன் முதலில் வலம் வந்தவர் யூரிககாரின். முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த இவர் 1961இல் இச் சாதனையை நிகழ்த்தினார்.

✡ விண்வெளிக்கு 1963 ஆம் ஆண்டு சென்ற முதல் பெண்மணி வலென்ரினாடெரஸ்கோபா.

✡ விண்வெளிக்கு முதலாவதாகச் சென்ற உயிரினம் லைகா என்ற நாய். இது 1957ஆம் ஆண்டு நடைபெற்றது.

✡ விண்வெளிக்குச் சென்ற முதல் பெண்மணி - விஸ்லாவா சிம்போர்ஸ்கா.

✡ 1996ஆம் ஆண்டு பூமிக்கு அண்மையில் தோன்றிய வால் நட்சத்திரம் கியாகுடாவே. இதனை ஜப்பானிய விஞ்ஞானி கண்டறிந்தார்.

*க.கோபிறாஜ், பரியோவான்கல்லூரி.*

வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

## வேற்றுமை என்பதை வேரொடு சாய்ப்போம்

சின்னஞ்சிறு மழலைகள் நாம்சேர்ந்து ஆடுவோம்
செந்தமிழ்த்தாய் சிறப்புறவே சிந்து பாடுவோம்
இன்னலுற்று ஏதிலியாய் சேர்ந்து ஓடினோம்
இன்று மீண்டும் இங்குவந்து ஒன்று கூடினோம்!

இந்துமகா சமுத்திரத்தில் இலங்கி நின்ற முத்து
எழிலார்ந்த இலங்கையது எங்களது சொத்து
வந்துபோன அந்நியரால் வாழ்விழந்து நின்று
வன்செயலால் வளமழிந்து வருந்துகிற தின்று

இலங்கை அன்னை ஈன்றெடுத்த புதல்வர் நாங்களே
இன மத மொழி பேதம் இல்லைப் போங்களே
விலங்குகளாய் வாழுகின்ற நிலையை மாற்றுவோம்
வேற்றுநாடே எம்மைப் போற்றும் வித்தை காட்டுவோம்!

செந்தமிழ் ஆங்கிலம் சிங்களம் கற்போம்
சிந்தையில் என்றுமே நல்லதை வைப்போம்
விந்தையால் இலங்கையை மிளிரவே செய்வோம்
வேற்றுமை என்பதை வேரொடு சாய்ப்போம்!

கந்தனும் காமினியும் காசீமும் கபிரியலும்
எந்தவித இடருமின்றி இந்நாட்டில் வாழ்வதற்கு
வந்து விட வேண்டுமிங்கு வளமான தீர்வொன்று
இந்தநிலை வந்தால் தான் இலங்கையது தலைநிமிரும்.

இ. குலசிங்கம்,
நயினாதீவு.

## சோடிக் கிளி



சூ. றஜீப்,
யா. அருணோதயக் கல்லூரி.

## தாரா



அ.சஞ்ஜீவ்,
யா. டிறிபேக் கல்லூரி.

## நூலகம்

நல்ல புத்தகங்கள் பலவற்றைச் சேகரித்துவைத்துப்பலருக்கும் உதவுகின்ற இடமே நூலகம் ஆகும்.

நமக்கு மிக நல்ல நண்பர்களாக இருப்பவை நல்ல புத்தகங்களே. பல நூல்களை நாம் தேடி வாசிப்பதன் மூலம் நமது அறிவை வளர்க்கலாம். பல புதினங்களை அறிந்து கொள்வதற்குப் பத்திரிகைகள் உதவுகின்றன.

எனவே நாம் எமது ஓய்வு வேளைகளை வேறு பொழுதுகளில் செலவிடாது நமக்குப் பயன் மிக நிறைந்ததான நூலகங்களை நன்கு பயன்படுத்தி எமது அறிவையும், நற்பழக்கத்தையும் பெருக்கி நமக்கும் பிறருக்கும் பயன்படுமாறு நம்மை நாம் மாற்றிக் கொள்வோம்.

*சி. சயந்தன்.*
*யாழ்ப்பாணக் கல்லூரி.*

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத்தயார் தானே?



## இவர்களிற்கு இதில் பெருமை

கர்ணன் ~ கொடை
விஜயன் ~ வில்வித்தை
அரிச்சந்திரன் ~ வாய்மை
கண்ணகி ~ கற்பு
பரதன் ~ சகோதரபாசம்
ஔவையார் ~ கல்வி
அனுமன் ~ சொல்லின் செல்வன்
நெப்போலியன் ~ வீரம்
மணிமேகலை ~ துறவு

*T.வினோ,*
*யா.கொ.தி.ம.வித்தியாலயம்*

## நான்

எனது பெயர் தங்கராசா சர்மிகா. நான் தரம் – 1இல் படிக் கிறேன். எனக்குப் பிடித்த பாடம் கணிதம். நான் செட்டிக்குளம் மகா வித்தியாலயத்தில் படிக்கிறேன். வீட்டில் எல்லோருக்கும் கடைக் குட்டி என்றபடியால் செல்லமாகவே என்னைச் சம்மி என் பார்கள்.

*த.சர்மிகா,*
*வவுனியா.*

## சென்றவாரக் கணிதப் புதிருக்கான விடைகள்

முதலாம் தடவை :- 9 மாபிள்கள் 9 மாபிள்கள் 9 மாபிள்கள்

இரண்டாம் தடவை :- 3 மாபிள்கள் 3 மாபிள்கள் 3 மாபிள்கள்

மூன்றாம் தடவை :- இரு தட்டுக்களிலும் ஒவ்வொன்றை வைத்து நிறுத்துப் பார்த்தால் வித்தியாசமான மாபிள் எது என்று தெரியும்.

*J. கிறிஸ்ரினா வசந்தராணி.*

## இவ்வாரக் கணிதப் புதிர்

மூன்று எண்களைக் கூட்டும் போதும், அதே மூன்று எண்களைப் பெருக்கும் போதும் பெறப்படும் விடைகள் சமனாகும். அம் மூன்று எண்களையும் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

*நா.மகேந்திரலிங்கம்.*

## போதுமென்ற மனமே...!

ஒரு மரத்தடியில் கறுப்பன் என்பவன் படுத்திருந்தான். அவனைப் பார்த்த நண்பன் ஒருவன், ''ஏன் இப்படிப் படுத்திருக்கிறாய்? காட்டிற்குச் சென்று சிறிது விறகு வெட்டிக் கொண்டு வரக்கூடாதா? என்று கேட்டான்.

''எதற்காக?'' என்று கேட்டான் கறுப்பன்.

''எதற்காகவா? அதை விற்றால் சிறிது பணம் கிடைக்கும். அப்படிச் சேரும் பணத்தைக் கொண்டு சில நாட்களில் ஒரு கழுதை வாங்கலாம். பின்னர் அதன் முதுகில் விறகை ஏற்றிச் சென்று விற்கலாம். அதிலிருந்து கிடைத்த பணத்தினைக் கொண்டு வண்டில் வாங்கலாம். இப்படியாக முன்னேற்றமடைந்து பெருஞ் செல்வந்தனாக வாழலாம்'' என்றான் நண்பன்.

''எதற்காக''? என்று மீண்டும் கேட்டான் கறுப்பன்.



''நீ பெரும் பணக்காரனாக இருந்தால் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் வாழ்க்கை நடத்தலாமே'' என்றான் நண்பன்.

''நான் இப்பொழுது எப்படி இருப்பதாக நினைக்கிறாய்?''

நண்பா! எனக்கு என்னுடைய உழைப்பே போதுமானது! நான் எப்போதும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும், வாழ்க்கை நடத்துகிறேன். இதனைப் பெரும் பணத்தினால் தான் அடைய முடியும் என்று எண்ணி விடாதே! என்று கூறினான்.

நண்பனும் அதனைப் புரிந்து கொண்டான்.

**சிறுவர்களே!**

**கதையைப் படித்தீர்களா? நீங்களும் உண்மை உழைப்பினால் முன்னேறுங்கள். உயர்ந்த உள்ளமும், உள்ளதே போதுமென்ற மனமும் கொண்டவர்கள் வாழ்வு எப்போதும் மகிழ்ச்சியுடையதாகவே அமையும்.**

*தொகுப்பு:- சுஜா*

## விடுகதைகள்

✡ வளர்வதும் தேய்வதும் வாடிக்கை இவனுக்கு அவன் யார்?
நிலா

✡ தலைக்கு மேல் விளக்கு வைத்திருப்பான். அவன் யார்?
மின்மினிப் பூச்சி

✡ எலும்பிலாதவன் சில நேரம் வீண்வம்புக்கு வழிவகுப்பான் அவன் யார்?
நாக்கு

✡ தாவி ஓடி வந்தாலும் தாகம் தீர்க்க மாட்டான் அவன் யார்?
கடல்

✡ திறந்த பெட்டியை மூட முடியாது அது என்ன?
தேங்காய்

✡ இந்த ஊரில் அடித்தால் அடுத்த ஊருக்குப் போய்ச் சொல்லுவான். அவன் யார்?
தந்தி

✡ காகம் இருக்கக் கொப்பு இல்லை. அது என்ன?
நெற்கதிர்

✡ மிதித்தால் விரைவாக ஓடுவான். அவன் யார்?
துவிச்சக்கர வண்டி

கி. நிரேஷ்,
தெல்லிப்பழை,
மகாஜனாக் கல்லூரி.

# நியூ பிரசாந்தியின்

**இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல:— 20**



படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

நேர்மையின் பெயரைக் கொண்ட இந்தியாவின் முன்னாள் தலைவர் இவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**'இவரைத்தெரியுமா போட்டி இல:- 20'**
'நியூ பிரசாந்தி ஜுவல்லறி',
இல. 95,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல:— 20**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................
அனுப்புபவரின் முழுப் பெயர் :-..............................
அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 19**
**சரியான விடை**





நடிகர் பிரபு

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 19 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

| | |
|---|---|
| முதற்பரிசு :— | நா.சுந்தரலிங்கம்<br>தொட்டிலடி மத்தி,<br>சண்டிலிப்பாய். |
| இரண்டாம்பரிசு:— | நா.சரண்யா,<br>42, கண்ணாபுரம்,<br>நாவாந்துறை தெற்கு,<br>யாழ்ப்பாணம். |
| மூன்றாம்பரிசு:— | க.சங்கரி<br>தொல்புரம் மேற்கு,<br>சுழிபுரம். |

**சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**
*அ.தனசீலன் வவுனியா, பா.வத்சலா நல்லூர், ச.சாவித்திரி கச்சேரியடி, கு.பாலகிருஸ்ணா சுழிபுரம், ஸ்ரீ.மயூரதன் திருநெல்வேலிவடக்கு, ம.நிரஞ்சனிதேவி இராசாவின் தோட்டம், க.சங்கீதா உடுவில், தி.ஜெயந்திரா வேம்படிவீதி, வ.ராதா நல்லூர்வீதி, க.பபிதாரகா மானிப்பாய்வீதி.*

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

### ஜபயோகம்

குறிப்பிட்ட நற்பயனை அடைவதற்கு ஜபயோகம் நல்ல வழி முறையாக இருக்கிறது. இம் முறையின் வழியைப் பற்றியும் அதை எப்படி அனுசரிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் நாம் விளக்க முயற்சிப்போம்.


மந்திரத்தை திருப்பத் திருப்பச் சொல்வதன் மூலம் ஆண்டவனிடம் ஆத்மீகரீதியாக நாம் பேசுகிறோம். மந்திரத்தை மீண்டும் மீண்டும் சொல்வதனால் சரீரம் சுத்தமாவதோடு ஆத்மீக ஞானமும் கிடைக்கிறது. ஜபம் மனதிலிருந்தே பிரியோசனமில்லாத பொருட்களையும், கொடுமையான எண்ணங்களையும் அகற்றுகிறது. முத்தியடைந்த தீர்க்கதரிசிகளிற்கு ஆண்டவனைப் பற்றிய முழு அறிவைக் கொடுத்து ஆண்டவனிடம் தொடர்புகொள்வதற்கு நல்ல சாதனமாக அமைகிறது.

ஜப முறையில் நான்கு படிமுறைகள் இருக்கின்றன. முதல் மந்திரத்தை சந்தத்துடன் சொல்வது. இரண்டாவது லேசான தொனியில் மீண்டும் மீண்டும் சொல்வது. இது முதல் படி முறையை விட அதிக சக்தி வாய்ந்தது. மூன்றாவது மந்திரத்தின் மேல் தியானம் செய்வது. நான்காவது அஜாபா.


உட்கார்ந்த நிலையில் ஜபத்தை அனுசரிக்கலாம். ஜபத்திற்கு உட்கார முன் சில வேண்டுதல்களைச் சொல்ல வேண்டும். உருத்திராட்சங்களை உருட்டும் போது கவனத்தோடு இருத்தல் வேண்டும். 108 சிறிய உருத்திராட்சங்களுடன் ஒரு பெரிய உருத்திராட்சத்துடன் உள்ள மாலை ஜபத்திற்கு உபயோகிக்கப்பட்டு யோகப்பியாசத்திற்கு உதவியாக இருக்கின்றது.

(தொடரும்....)





அ.வாணி
வயது :- 20
சுண்டிக்குளி யாழ்ப்பாணம்
பேனா நட்பு, பத்திரகை




சூ.குயின் மேரி
வயது :- 20
37, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
T.V, வானொலி



தெ.சசிகலா
வயது :- 21
12/9, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
பத்திரிகை, வானொலி




S.மயூரன்
வயது :- 19
71/4, புங்கன்குளம்வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
வானொலி, பத்திரிகை,
தொலைக்காட்சி,



அ.தனசீலன்
வயது :-20
25/5, கந்தசாமிகோவில் வீதி,
வவுனியா.
பத்திரிகை, தொலைக்காட்சி.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 21




*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல -21**
*'சங்குநாதம்',*
*இல:- 15, வெள்ளாந்தெரு,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :- ..............................
விலாசம் :- ..............................
..............................
..............................

.............✂ இங்கே வெட்டுக..............................

### இடமிருந்து வலம்

(1)ஓவியம் (4) இது கொடுத்தால் உடனே வேலை நடக்கிறது. (6) சேறு (8) இனிப்பான உணவு (9) தானியம் (10) அசைவம்

### மேலிருந்து கீழ்

(1) ஒரு பூச்சி (2) தேவலோகத்தில் இருப்பவள் (3) சூழ்ச்சி (5) துறவி (6) கடலுடன் தொடர்புடைய சொல் (7) இனிப்பான பொருள் (9) நீர்த்தேக்கம்

### கீழிருந்து மேல்

(11) சுவையான பழம் (12) கடைசித் தூக்கம் இங்குதான் (மாறி இருக்கிறது. )

குறுக்கெழுத்துப்போட்டி இல.20 இன் விடைகள்
இடமிருந்து வலம்
1. திருடன் 3. புழு 5. அத்தி 6. பாரதியார் 8. கதை 9. திசை 10. சட்டம்
மேலிருந்து கீழ்
1. திண்ணை 2. டப்பா 3. புதிர் 4. அரவம் 5. அதியமான் 7. யாத்திரை 8. கயிறு 10. சந்தை 11. பச்சை

**பரிசு பெற்றோர் பெயர் விபரம்**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :~ | யோ.மேரி பிறேமினா<br>42/4, கோவில் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | :~ | க.அமலதாசன்<br>24,கண்டிவீதி,<br>யாழ்ப்பாணம். |
| மூன்றாம் பரிசு | :~ | ச.சாவித்திரி<br>91.A, கண்டிறோட்<br>கச்சேரியடி,<br>யாழ்ப்பாணம். |

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.**
*பொ.குணரத்தினம் நாவலர் வீதி, நா.சுந்தரலிங்கம் சண்டிலிப்பாய். சி.சந்திரகலாவதி பலாலிவீதி, அ.சுகந்தன் பிறவுண் வீதி, த.யோகராசா கொடிகாமம், த.சுகிர்தா திருநெல்வேலி, செ.அருந்ததி திருநெல்வேலி தெற்கு, ந.ரஞ்சனா சாவகச்சேரி, பா.செந்தூரச்செல்வன் நல்லூர், யோ.சங்கீதா கல்வியங்காடு, கே.இராஜகோபால் வட்டுக்கோட்டை.*

**குறிப்பு:~**
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல.21" எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 20-07-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |



# சினிமாச் சிதறல்

## யூத் படத்திற்காக விஜயோடு சேர்ந்து சிம்ரன் ஆட்டம்



'யூத்' படப்பிடிப்பு குழுவினர் 2 பாடல் காட்சிக்காக சமீபத்தில் கனடா போய் வந்தார்கள்.

விஜய்–புதுமுகம் சந்தியா சம்பந்தப்பட்ட 2 பாடல் காட்சிகள் கனடாவில் படமாக்கப்பட்டன.

அடுத்து இந்த படத்துக்காக கபிலன் எழுதிய 'ஆலத்தோட்ட பூபதி நானடா, அவர் கேட்ட பூபதியும் நானடா' என்ற கானா பாடல் பதிவு செய்யப்பட்டது. சங்கர் மகாதேவன் பாடினார்.

இந்த பாடல் காட்சிக்காக வாகினி ஸ்டுடியோவில் ரூ. 15 லட்சம் செலவில் ஒரு பிரமாண்டமான அரங்கம் அமைக்கப்பட்டது.

வெஸ்டர்ன் கலந்த இந்த கானா பாடலுக்கு, விஜயுடன் ஒரு பிரபல கதாநாயகி நடனம் ஆடினால் சிறப்பாக இருக்கும் என்று டைரக்டர் வின்சென்ட் செல்வா, தயாரிப்பாளர் அஜய்குமார் ஆகிய இருவரும் ஃபீல் பண்ணியிருக்கிறார்கள்! யார்?

சிம்ரன் என முடிவெடுத்து அவரிடம் கேட்டால் முதலில் 'ஸாரி' என்றிருக்கிறார். விஜய் தலையிட்டுப் பேச ஓ.கே. என்ற தலையாட்டிதோடில்லாமல், 75 நடன கலைஞர்கள், 10 நீக்ரோக்கள் கலந்துகொண்ட இந்த பாடல் காட்சியில் செம டான்ஸ் போட்டிருக்கிறாராம்.

ஏ. பூர்ணசந்திரராவ் வழங்க, லட்சுமி புரொடக்ஷனல் தயாரிக்கும் 'யூத்' படத்துக்கு இசை : மணிசர்மா, ஒளிப்பதிவு : நடராஜ் சுப்ரமணியம், சண்டைப் பயிற்சி : கனல்கண்ணன், நடனம், ராஜுசுந்தரம், பிருந்தா, தினேஷ், கலை : மணிராஜ், வசனம் : பிரசன்னகுமார்.

## ஸ்ரீகாந்த் நடிக்கும் மனசெல்லாம்

வினயன் இயக்கத்தில் "என் மன வானிலே...", ஏ.ஆர். முருகதாஸ் டைரக்ஷனில் விஜயகாந்த் நடிக்கும் "ரமணா" ஆகிய படங்களை பல கோடி ரூபாய் செலவில் தயாரிக்கும் ஆஸ்கார் பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் வி. ரவிச்சந்திரன், அடுத்து தயாரிக்கும் பிரம்மாண்டமான படம் "மனசெல்லாம்...".



இந்தப் படத்தில் வி. ரவிச்சந்திரன் மூலம் "ரோஜாக்கூட்டம்" படத்தில் அறிமுகமான ஸ்ரீகாந்த் கதாநாயகனாக நடிக்க, அவரது ஜோடியாக வித்யா பாலன் அறிமுகமாகிறார். மற்றும் ராஜீவ், நிழல்கள் ரவி, ஆனந்த், வையாபுரி, சுகரன், வி.எம்.சி. ஹனீபா, ஷ்யாம் கணேஷ், பேபி அக்ஷயா, சாப்ளின் பாலு, சிசர் மனோகர், சந்திரா நடிக்கின்றனர்.

இளையராஜா இசை அமைக்க, ஒளிப்பதிவாளர் எஸ். சரவணனின் உதவியாளர் முகம்மது நசீர் ஒளிப்பதிவு செய்கிறார். மு. மேத்தா, பழனிபாரதி பாடல்கள் எழுதுகின்றனர். வி. ஜெய்சங்கர் எடிட்டிங் செய்ய, அப்துல் ரகுமான் இயக்கிய "மனசு" படத்துக்கு வசனம் எழுதிய "புது வருஷம்" இயக்குனர் ஷாருராஜ் வசனம் எழுதுகிறார். நாகு ஆர்.கே. அரங்கம் அமைக்க, கனல் கண்ணன் சண்டைப் பயிற்சி அளிக்கிறார். சிவசங்கர், கல்யாண் நடனக் காட்சி அமைக்கின்றனர். எஸ். கணேஷ் தயாரிப்பு மேற்பார்வை செய்ய, டி. ரமேஷ் பாபு இணைந்து தயாரிக்கிறார்.

ஒவ்வொருவர் மனதிற்குள் ஊடுருவிப் பார்க்கும் உணர்வுகள் மட்டுமே இந்த "மனசெல்லாம்..." படத்தின் மையக் கரு. கதை, திரைக்கதை எழுதி சந்தோஷ் இயக்குகிறார். இவர் இயக்குனர்கள் பார்த்திபன், மு. களஞ்சியம், எஸ். எழில், சசி ஆகியோரிடம் பல படங்களில் உதவி மற்றும் இணை இயக்குனராகப் பணிபுரிந்தவர்.

## வித்தியாசமான மூன்றுவித தோற்றங்களில்



## சத்யராஜ் - சீதா நடிக்கும் "மாறன்"

பவர் மீடியா என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்திற்கு "மாறன்" என்று பெயரிட்டுள்ளார்கள்.

இதில் சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கிறார். இதில் இவருக்கு மூன்று வித்தியாசமான தோற்றம். இவர் நடித்த படங்களில் வித்தியாசமான தோற்றத்தில் கலக்கிய "நூறாவது நாள்", "நடிகன்", "அமைதிப்படை" போன்ற பல படங்கள் மாபெரும் வெற்றிப் படங்களாக அமைந்தது போல இப்படத்திலும் பெரும் பரபரப்பையூட்டும் மூன்று வித தோற்றமும் சிறப்பு அம்சமாக இருக்கும். இதுவரை இவர் நடித்திரத ஒரு தோற்றம் இப்படத்தில் இருப்பதால் பல விதங்களில் தன்னை தயார் படுத்தி வருகிறார். இதற்காக வேறு படங்களில் நடிக்காமல் இப்படத்திற்கு பிறகே மற்ற படங்களில் நடிக்கிறார். மற்ற இரண்டு தோற்றங்களும் கம்ப்யூட்டரில் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

இவருக்கு ஜோடியாக சீதா நடிக்கிறார். "ஆண்பாவம்" படம் மூலம் அறிமுகமான சீதாவின் கடைசி படம் "மல்லுவேட்டி மைனர்". இதில் நடித்த சத்யராஜுடன் மீண்டும் அவருக்கு ஜோடியாக நடிக்க வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. 12 வருடங்களுக்குப் பிறகு இப்படம் மூலம் ஹீரோயினாகவே நடிப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இளஞ்ஜோடிகளாக இருவர் அறிமுகமாக, சரத்பாபு, தலைவாசல் விஜய், டெல்லி கணேஷ், ராஜ்கபூர், இளவரசு இவர்களுடன் ராபர்ட் என்கிற நடன இயக்குனர் இதில் நடிகனாக அறிமுகமாகிறார். இவர் நடிகை அல்போன்சாவின் தம்பி ஆர்.செந்தில்நாதன், சுந்தர்.சி போன்றவர்களுடன் இணை இயக்குனராக பணிபுரிந்த எ.ஜவகர் இதன் கதை, திரைக்கதை அமைத்து இயக்குனராக அறிமுகமாகிறார்.

வித்தியாசமான ஆக்ஷன் த்ரில்லராக உருவாகும் இந்த பிரம்மாண்டமான படைப்பு வருகிற 21 ம் தேதி முதல் சென்னையில் ஆரம்பமாகி தொடர்ந்து ஒரே கட்ட படப்பிடிப்பாக நடைபெறும். இசை : தேவா பாடல்கள் : கவிஞர் வாலி வசனம் : பட்டுக்கோட்டை பிரபாகர் ஒளிப்பதிவு : யு.கே. செந்தில்குமார் எடிட்டிங் : சாய் இளங்கோ
ஸ்டன்ட் : சூப்பர் சுப்பராயன் கலை : நாகு, ஆர்.கே தயாரிப்பு மேற்பார்வை : எஸ். விவேகானந்தன் – அசோக் நிவேதா
தயாரிப்பு : பவர் மீடியா




கைதி ஒருவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு விடக் கூடாது என்று தமிழகத்திலுள்ள அனைத்து மாணவ மாணவிகளும் நினைக்கிறார்கள். பிரார்த்தனை செய்கிறார்கள். ஆதங்கப் படுகிறார்கள். இக்கரு தான் இப்படம்.



எனக்கு 20 உனக்கு 18 "திரிஷா"

## மம்முட்டியின் சத்யமூர்த்தி



சபூரா இண்டர்நேஷனல் சார்பில் சம்சுதீன் அதிக பொருட்செலவில் தயாரிக்கும் படம் 'சத்ய மூர்த்தி'. இந்தப் படத்தை எஸ். அழகேஷ்வர் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார்.

இவர் இயக்குனர்கள் டி. பி. கஜேந்திரன், ஜே. தம்பி ராமையா ஆகியோரிடம் உதவி இயக்குனராகவும், படத்தொகுப்பாளர் எல். கேசவனிடம் உதவியாளராகவும் பணியாற்றியவர்.

நித்யானந்தம் ஒளிப்பதிவு செய்ய, தேவா இசை அமைக்கிறார்.

சினேகன் பாடல்கள் எழுத, ராமகிருஷ்ணன் தயாரிப்பு மேற்பார்வை கவனிக்கிறார். ஆனந்த் இணை இயக்கம் செய்ய, உதயசங்கர் எடிட்டிங் கவனிக்கிறார்.

இதில் மம்முட்டி வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடிக்க, அவரது ஜோடியாக ரமயாகிருஷ்ணன் நடிக்கிறார். முக்கிய வேடத்தில் மனோரமா நடிக்க, மற்ற நடிகர் – நடிகையர் தேர்வு தீவிரமாக நடந்து வருகிறது.

## Cine Magic

விஜய் காசி ஆனால் ஓர் பார்வை...



புலவரின் கற்பனையில்

...வைரம்பூரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது